# மறுமை விளக்கம்

இஃது

திரு : பொன்னம்மாள் இரத்திஞதிக்கம், B.A., L.T.

அவர்களால் இயற்றப்பட்டது.

PRINTERS
PAYNE & CO., MADRAS
1939.

விலை 4 அணா

# மறுமை விளக்கம்

திரு : பொன்னம்மாள் இரத்தினதிக்கம், B.A., L.T.

அவர்களால் இயற்றப்பட்டது.

சென்னை-20
THE MADURA TAMIL SANGAM

PRINTERS
PAYNE & CO. MADRAS
1939.

விலை 4 அணா

# பொருளடக்கம்.

அத்தியாயங்கள். பக்கம்.


I. நிச்சயப்பகுதி.
1. மரணம் நிச்சயம். ... ... 1
2. மறுமை நிச்சயம். ... ... 3
3. நரகம் நிச்சயம். ... ... 9

II. மரண விளக்கம்.
1. மறுமை வழிகாட்டி—சத்தியவேதம் ... 19
2. மனித சுயாதீனம். ... ... 27

III. மறுமைத் தாற்பரியம்.
1. சர்வலோக வாஞ்சை. ... ... 31
2. மறுமை வழி. ... ... 34

IV. அன்பர் வீடு.
1. மறு பிறப்பு. ... ... 37
2. பாவப் பிணையாளி. ... ... 41
3. விசுவாசிகளின் மறுமை. ... ... 44

V. காவலிலுள்ள ஆவிகள்.
1. நரகப் பங்காளிகள். ... ... 60
2. நரகவேதனை விளக்கம். ... ... 66

VI. உயிர்த்தெழுதல்.
1. உலக நம்பிக்கை. ... ... 73
2. முதற்பலன் கிறிஸ்து. ... ... 75
3. இருவித உயிர்த்தெழுதல். ... ... 77

VII. நியாயத்தீர்ப்பு.
1. மறுமைச் சட்டம். ... ... 79
2. நியாயாதிபதி. ... ... 84
3. மூன்றுவித நியாயத்தீர்ப்பு. ... ... 87

VIII. கள்ளப்போதகம்.
1. பல பிறவிக்கொள்கை. ... ... 95
2. ஆவிகளின் கூட்டுறவு. ... ... 104
3. ரோமான் மார்க்கப்போதனை ... ... 109

IX. ஆத்தும சத்துரு.
1. தீமைக்குக் கர்த்தா யார்? ... ... 110
2. சிரமறுந்த முண்டம். ... ... 113
3. வெற்றி வீரர். ... ... 115

# I. நிச்சயப் பகுதி.

## 1. மரணம் நிச்சயம்.

பூவுலகில் மானிடக் கண்ணுக்குத் தோன்றும் எல்லாக் காட்சிகளிலும் மரணமே மிகவும் சாதாரணமானதும், பாலர், விருத்தர், கற்றூர் கல்லாதார் யாவராலும் அறியப்பட்டதுமான காட்சியாகும் என்பதை யாரே உணராதார். இல்லத்திற்குக் கிரீடமும் வெளிச்சமுமான தம் அன்புள்ள மனைவியரைப் பறிகொடுத்த கணவரும், குடும்பத்திற்குத் தூணும் ஆதரவுமான அருமைக் கணவரையிழந்து தவிக்கும் மனைவியரும்; அன்புள்ள பெற்றோரைப் பிரிந்த பிள்ளைகளும் தம் காதற் கனிகளைப் பிரிந்த பெற்றோரும்; தமது ஆத்தும மேய்ப்பரைக் காணுத சபைகளும், தம்முயிரை ஈந்து மன்னுயிரைப் புரக்கும் பரோபகாரிகளைச் சாகக்கொடுத்த தேசத்தாரும் ஆகிய பலரும் மாய மரணத்திற்குச் சான்று பகருவார்.

தினசரி சமாச்சாரப் பத்திரிகையைக் கையில் எடு. இவர் இறந்தார், அவர் மாண்டார், இந்த வாலிபன் ரயிலில் அறைபட்டுப் போய்விட்டான், அந்த வாலிபப்பெண் கிணற்றில் விழுந்துபோனுள். அதோ அந்த ஊரில் தீக்காற்றினுல் திரளானபேர் கருகி மாண்டு போனுர். இதோ இந்த நாட்டில் பெருவெள்ளத்தில் வெகு ஜனம் அமிழ்ந்திப்போனது. அந்தோ பூகம்பத்தினுல் அந்த தேசம் மறைக்கப்பட்டு மாண்டது. ஐயோ இதென்ன கொடுமை பெரியோரும், பிள்ளைகளும், ஆண்களும், பெண்களும், அரசரும், மேய்ப்பருமான சகலரும் வியாதியிலும், ஆபத்திலும் அகப்பட்டு மாண்டு காணுமற் போகின்றனர். ஆ! இதென்ன உலகம்! "ஆறிலும் சாவு நூறிலும் சாவு!" என்று பெரியோர் கூறுவது சரிதான். மரணம் யாரைக் கேட்டுக்கொண்டு வருகிறது? எங்கேயும், எப்போதும் மரணம் மரணம்!

இவ்வாறு உலகக் காட்சிப் பிரமாணத்தில் எந்தப் பக்கம் திரும்பினுலும் இக்கொடிய மரணத்தின் தோற்றமே நமது கண்களுக்குத் தென்படுகின்றது. இக்கொடுமையை விட்டு நமது மனத்தையும், கண்ணையும் திருப்பி சற்றுநேரம் வேதப்பிரமாணத்தை உற்று

நோக்கி ஆறுதல் அடைவோம் என்று விரும்புவோமோ? ஆ, அங்கேயும் மரண நினைவு நம்மை அமைதியாய் விட்டபாடில்லை. “தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது” என்று முடியும் சில வசனங்களைக் கடந்து செல்லுமுன் நமது ஆதித்தாயாகிய ஏவாள் தன் குலக்கொழுந்தாகிய கொலையுண்ணப்பட்ட ஆபேலை நினைத்து ஏங்கிக் கண்ணீர் பெருக்கிக்கொண்டிருக்கின்றாள். இவ்விடத்தைவிட்டு விரைவாக இன்னும் சிறிது தூரம் சென்றாலோ, அந்தோ “மரித்தான்... மரித்தான்...மரித்தான்” என்று மூச்சுவிடாமல் அடித்துச் செல்லும் தெய்வப்பறை நம் செவியைக் கைக்கும்படி செய்கிறது. இதற்கும் நமது காதை மூடிக்கொண்டு கடந்துபோவோம் என்றால், சற்று தூரத்தில் உலகம் முழுமையும் உண்டான பெரும் வெள்ளப்பிரவாகத்தின்கீழே “ஐயோ” என்ற அவலக்குரலுடன் மனுக்குலம் அமிழ்ந்து மாளும் கொடிய காட்சி நம்மைச் சித்தப்பிரம்மை கொள்ளச்செய்யும்போலிருக்கின்றது.

இவ்வளவுதானே? இல்லை, இல்லை. இன்னும் சிறிது தூரம் நடந்து உன் செவியை ஒருபுறம் சாய்த்துக் கேள். அதோ எகிப்தின் தாய்மார் தம் ஆசைக்கனிகளாகிய முதல்பேறான புதல்வரை இழக்கப்பெற்று அங்கலாய்த்துக் கதறும் சத்தம் உனக்குக் கேட்கவில்லையா?

இன்னும் மற்றொரு புறம் உன்னிக் கேள். மாசற்ற தம் பாலரைப் பறிகொடுத்த பெத்லகேமின் மாதரின் அழுகையும் புலம்பலும் உன் இருதயத்தைக் கரைக்கின்றதல்லவா?

இந்தக் கோரக்காட்சிகளும் கொடிய நிகழ்ச்சிகளும் எதை நிமிடந்தோறும் நமக்கு ஞாபகமூட்டுகின்றன? “ஒருதரம் பிறந்த மனிதன் ஒருதரம் இறக்கவேண்டும்” என்று நமது பெரியார் சொல்லியிருக்கும் உண்மையை அல்லவா? ஆம் வேதம் கூறுவதுபோல,

> “ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் வாழ் நாள்
> குறுகினவனும், சஞ்சலம் நிறைந்தவனும் பாடு
> அனுபவிக்கிறவனுமா யிருக்கிறான்”:—

என்ற சத்தியத்தை அறிய ஒருவரும் நூல்களையும் சாஸ்திரங்களையும் படிக்கத் தேவையில்லை. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவ்வுண்மையை உலகம் நமக்கு நாடோறும் கற்பித்துக்கொண்டுதான் இருக்கின்றது.

இதை வாசிக்கும் நண்பனே! மரணத்தைப் பற்றிய உன் உணர்ச்சி என்ன? பொதுக் காட்சியான இம்மரணத்தைப் பற்றி நீ என்றைக்காவது ஆழ்ந்து சிந்தித்ததுண்டா? அன்றி "தோற்றமுண்டேல் மரணமும் உண்டு" என்று வாய் வேதாந்தம் பேசிக் கொண்டு நிர்விசாரத்தினால் போர்த்தப்பட்டிருக்கின்றாயா? இம்மை நிலைப்பதல்ல என்றும் மறுமையே நித்தியம் என்றும் உலகின் எல்லா ஞானியரும் சான்றோரும் கூறுவதில் உண்மை இருந்தே தீரவேண்டும். அப்படியானால் மரணம் என்பது என்னவென்றும், அது நம்மை எங்கே இழுத்துச்செல்லுகின்றது என்றும், அதற்குப்பின் ஆத்துமா அடையும் நிலை என்னவென்றும் நாம் இம்மையிலே தெளிவாக அறியவேண்டியது நமது எல்லாக் கடமைகளிலும் அதி முக்கிய கடமையாகும் என்பதை யாரே மறுக்கக்கூடும்? 'இப்போது நாம் இளையோம், மற்று அறிவோம்' என்று யாரேனும் காலதாமதம் செய்யக்கூடுமோ? கூடாது. ஏனெனில் பலத்த காற்றடிக்கும்போது நன்றாய் முற்றிய கனிகள் மாத்திரமல்ல, முற்றாத நல்ல காய்களும், இளம் பிஞ்சு பூவுங்கூட உதிருகின்றன. அவ்வாறே மரணமும் மனித ஆயுட்காலத்தையோ, தாலத்தையோ பொருட்படுத்துவதில்லை. சகல பிராயத்திலும், சகல நிலையிலும், சகல காலத்திலும் மானிடரைக் கொண்டு செல்லுகின்றது.

---

## 2. மறுமை நிச்சயம்

இப்படி மரணத்தால் இவ்வுலகைக் கடந்து மறையும் மானிடர் எங்கு செல்கின்றனர்? கடவுள் உண்மையை நம்பினோரில் யாரும் மறுமை உண்டு. என்ற சத்தியத்தை மறுக்கமாட்டார் என்பது திண்ணம். ஆயினும் அவ்வாறு மறுமை இல்லை என்று நம்புவோர் இருந்தால் அவருக்காகவே பின்வரும் கட்டுரை வரையப்படுகிறதென்பதை ஞாபகப்படுத்துகிறோம். "நெருப்பில்லாத இடம் புகையாது"; அப்படியே "இல்லாது பிறவாது" என்று பெரியார் கூறுவர். தாகம் எப்பொழுது உண்டாகிறதோ, அப்பொழுது அதைத் தீர்க்கும்படியான தண்ணீர் இருந்தே தீரவேண்டும். கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற உண்மையை ஆதி மனிதனுக்கு யார் கற்பித்தது? ஒருவருமில்லை. "நான் இருக்கிறவராக இருக்கிறேன்" என்று திருவாய்மலர்ந்த சோதிகளின் பிதாவும், எல்லா

நல் ஈவுகளுக்கும், அறிவுக்கும் இருப்பிடமுமான இறைவனே தம்மைப்பற்றிய உண்மையை முதல் முதலில் மனிதனுள்ளத்தில் எழுப்பியிருக்கவேண்டும்.

பொய்யுடை ஒருவன் பொய் வன்மையினால்
மெய்போலும்மே, மெய்போலும்மே "

என்ற சான்றோரின் வாக்குப்படி மனிதன் தன் சாதுரிய ஞானத் தாலும், வாக்கு வன்மையினாலும் இல்லதை உள்ளதாகவும் உள் ளதை இல்லதாகவும் பிறரிடத்தில் சாமர்த்தியமாய் ரூபித்துவிட லாம். என்றாலும் தன் சொந்த இருதயத்தையே வஞ்சிக்கக்கூடிய வன் ஒருவனும் இரான். இருதயத்தோடு சம்மந்தப்படாமல் மனித னுடைய மூளையிலிருந்துமட்டும் பிறக்கும் அறிவு எவ்வளவு வியக்கத் தக்கதாயிருந்தாலும் பலவிதத்தில் குற்றமுள்ளதாகத் தீர்க்கப்பட லாம். ஆனால் மூளையோடு சம்மந்தப்படாவிடினும் இருதயத்தில் எழும் உணர்ச்சியும் அதனால் பிறக்கும் அறிவுமோ உண்மையாகவே இருக்கும். இக்காரணம்பற்றியே நம் தமிழ்ப் பெரியார்,

" நெஞ்சத்தில் நல்லம்யாம் என்னும் நடுவு
நிலைமையால் கல்வி அழகே அழகு "

என்றார். வேதமும் " **நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளி களாகத் தீர்க்காதிருந்தால் தேவனும் நம்மைக் குற்றவாளிகளாகத் தீரார்** " என்கிறது. ஆகவே மறுமையைப்பற்றிய உணர்ச்சி மனிதனுக்குள் எப்பொழுது உண்டானதோ அப்பொழுதே மறுமை இருப்பது நிச்சயத்திலும் நிச்சயமாகும்.

இந்த மறுமையைப்பற்றிய உணர்ச்சி ஏகதேசமாக சிலருக்கு மட்டுமல்ல; உலகில் எம்மதத்தினருக்கும் சம்மதமான ஓர் தெய் வீக உண்மையாகக் காணப்படுகிறது. மறுமையின் காட்சிப்படத் தைச் சிலர் குறைத்தும் வேறு சிலர் மிகைப்படுத்தியும் கூறலாம். ஆனால் மறுமை உண்டு என்பது எல்லோருக்கும் ஒப்பமுடிந்த ஒரு சத்தியம். கிரேக்கர்கள், எலிசியன், ஹேடீஸ் என்ற இடங்களை முறையே மோட்சம் நரகமாகக் கூறுவர். ரோமரும், வீரசொர்க் கம் என்பதும், அதற்கு மாறான நரகம் என்பதும் உண்டு என நம்பு கின்றனர். மறுமையில் சிறிதும் நம்பிக்கை இல்லாத சீசர் என்ற ரோமப்பிரபு தன் ஆருயிர்ப் புதல்வி இறந்துபட்டபோது " ஆ, மறுமை இருக்கிறதை நான் நம்பினால் நலமாயிருக்குமே " என்று

அங்கலாய்த்து இடருக்குள்ளானுன். ஜர்மானியர், மரணத்துக்குப் பின் ஆன்மாக்கள் ஒரு மெல்லிய போர்வைபோன்ற சரீரத்துடன் நல்வினை தீவினைக்குத் தக்கதாய் முறையே வடக்கிலும் தெற்கிலும் வாழுகின்றன என்று நம்புகிறுர்கள். அப்படியே சீனு, ஜப்பான் தேசத்தாரும் டோயிசம் (Toaism) என்ற மதக்கொள்கையின்படி உடலை நீத்துச்சென்ற ஆன்மாக்கள் பூலோகத்திற்கும் பரலோகத் திற்கும் இடையில் உலாவுகின்றன என்று கருதுகின்றனர். அவ் விதமே ஆசியாவின் பல மதங்களும், தற்காலம் தோன்றியிருக்கும் தியாசோபி கொள்கையரும் மரணத்திற்குப்பின் மனிதர் அவரவர் திறமைக்கேற்க நவகிரகங்களையடைந்து வதிகின்றனர் என்று கூறுவர்.

நம் பாரத நாட்டில் நிலவும் பற்பல மதத்தினரும் மறுமையைப் பற்றிக் கிஞ்சித்தும் ஐயம் கொண்டவரல்ல. பின்வருவன இவ் வுண்மையை நன்கு புலப்படுத்தும்.

"வீடு கெடின் மற்றொரு வீடு புக்கல் ஒக்கும்"—திருமூலர்
"நரகத்தில் இடர்ப்படார்"—அப்பர்
"அட்டாங்க யோக பூமி"—தாயுமானவர்
"நுகர்ச்சியில் உலகம் நோக்கிப்போதல்"—சாத்தனுர்
"செல்லும் தேயத்துக்கு உறுதுணை தேடுமின்"—இளங்கோ
"மறுமையும் இம்மையும் நோக்கி"—சைனப்புலவர்
"இருமை வகை தெரிந்து"—வள்ளுவர்
"விண்கொள் அமரர்," "நண்ணுர் நரகம்."—ஆழ்வார்

இவ்விதமாக நூலாசிரியர், புலவர், ஞானிகள், ரிஷிகள் யாவ ரும் ஏகமாக இப்பருவுடல் அழிந்தபின்னர் நுண்ணிதான ஓர் உடலை ஆவிபெற்று மறுமையில் வாழுகின்றது என்று உறுதியாய் நம்பி, வெளியிட்டனர். மகம்மது தான் இறக்கும்போது "ஆண்டவனே என் பாவத்தை மன்னியும். என்னைச் சேர்ந்தோர் கூடியிருக்கும் வீட்டிற்கு நானும் வருகிறேன்" என்று சொல்லி உயிர்விட்டதாக அவர் வேதம் கூறுகிறது.

உலகின் பற்பல மதாசாரங்கள், கொள்கைகளின் தாற்பரியத் தைத் தீர ஆராய்வதில் தம் வாணுளின் பெரும் பகுதியைச் செல விட்ட பிரேசர் என்ற தகையார் தன் நூலில் "மனிதன் வெளியிட் டிருக்கும் கோள்கைகள் எல்லர்வற்றையும் பார்க்கிலும் மறுமை யைப்பற்றிய கோள்கையே மிக வலிமையானது" என்கிறுர்.

இத்தனை மறுக்கப்படாத சான்றுகளுக்குப்பின் இன்னும் மறுமையைப் பற்றிய சந்தேகம் யாருக்கேனும் இருக்குமாயின் அவர்தம் இருதயத்தின் உணர்ச்சியை ஆராயட்டும். (Kant) காண்ட் என்ற தத்துவ சாஸ்திரி, "மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் பரிசுத்த நிலையில் பூரணம் அடையவேண்டும் என்ற உயரிய நோக்கம் கட்டாயம் இருக்கவே வேண்டும். இவ்வாஞ்சையற்றவன் மனிதனாக இருக்கமாட்டான்?" என்கிறார். இத்திரு விருப்பம் நம்மில் பெரும்பாலாருக்கு இருக்கின்றது என்பதை நாம் நம்புகின்றோம். இத்துறையில் சித்திபெற முயல்பவர் இருந்தால் அவர் அனுபவம் என்ன? எவ்வளவுதான் பரிசுத்தத்தில் தேறி முன்னேறிச்சென்றாலும் நமது இருதயத்தின் மெல்லிய சத்தம் "இன்னும் ஏறு இன்னும் ஏறு" என்று சொல்லுகிறதல்லவா? இதை நோக்குமிடத்து நாம் மிகவும் நம்மிலே திருப்தியற்று நமது ஆன்ம வளர்ச்சியின் குறைவை நினைத்து இரங்க வேண்டிவருகின்றது.

இப்படியே நீதிநியாயம், சாந்தம், பொறை, சற்குணம், தன்னல ஒறுக்கம், தன்னுயிரை யீந்து மன்னுயிரை மீட்கவேண்டும் என்ற வாஞ்சை இவைகளையெல்லாம் நாம் மிகவும் கொண்டாடி, இவற்றில் மிகவும் தேற முயலுகிறோம். என்றாலும் இங்கு இச்சிறந்த நற்குணங்களில் பூரணம் அடைந்துவிட்டதாக ஒருவரும் சொல்லவே முடியாது. அப்படியானால் மனித இருதயத்தினின்றும் எழும் இந்த சீரிய வாஞ்சைகள் எல்லாம் 'மூடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோலும்,' 'முயற் கொம்பு,' 'ஆகாயப்பூ' போலும் முற்றுப்பெறாமல் அழியும் என்று கூற இயலுமோ? இயலாதே. இவை இம்மையில் கூடாவிட்டாலும் மறுமையில் நிச்சயமாகவே திருப்தியாக பூரணப்படும் என்ற ஏதோ உணர்ச்சி நமக்குள் இருக்கின்றது. ஏனெனில் மிகத் தெளிவாக,

"நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்யவான்கள்
அவர்கள் திருப்தியடைவார்கள்."—மத். 5 : 6.
"சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குவார்"
"உங்களில் நல்ல விருப்பங்களை உண்டாக்கின கர்த்தர்
அதை முற்றுமுடிய நிறைவேற்றுவார்"

என்று வேதம் கூறுகிறது. இத்தகைய ஏராளமான வாக்குத்தத்தங்களை அளிக்கும் கடவுள் அவை பூரணப்பட ஒருவழியை வைத்தே தீரவேண்டும். இது இம்மையில் இருக்கமுடியாது என்று நன்றாய்

அறிவோம். அப்படியானால் மரணத்துக்குப்பின் மறுமையில் கட்டாயம் பூரணப்படவே வேண்டும். இதை நம்புவது நமது தெய்வீக இயற்கைக்கு மிகவும் பொருத்தமாயிருக்கின்றது.

அன்றியும் இவ்வுலகில் பற்பல துறைகளிலும் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளையும் நோக்கும்போதும் இந்த நிலை நித்தியமானதல்ல, இவைகளெல்லாம் நியாயத்திற்கு கொண்டுவரப்பட்டு சம நிலைப் பிரமாணம் தழைத்தோங்கும் மறுமை இருந்தே தீரவேண்டும் என்று உணர்கின்றோமல்லவா? வேதமும்,

> "பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி கரடுமுரடானவை சமமாக்கப்படும்,"—ஏசாயா 40 : 4.

என்று பல இடங்களில் வற்புறுத்துகின்றது.

இன்னும் சகல அறிவுத்துறையிலும் அரிய சக்தியை வெளிக்காட்டுவதால், பேருபகாரிகளாகவும், மேதாவிகளாகவும், பெருந்தகையாராகவும் வளர்ந்து உலகுக்குப் பயன்படுவார் என்று நாம் நினைத்து எதிர்ப்பார்க்கிற எத்தனையோ இளைஞர், காலமும் தாலந்தும் பூரணப்படுமுன் மரணத்தால் வாறிக்கொள்ளப்படுகின்றனரே. இன்னாருடைய ஜீவியம் இங்கே அழிந்துவிட்டதென்று கருத இடமில்லையே. ஆகையால் இத்தாலந்துகள் பூரணப்பட்டு முழுப்பயன் அளிக்கும் மறு உலகம் இருந்தே தீரவேண்டும்.

பின்னும் பரிசுத்த அன்பை நோக்குக. நிலைபேறுடைய யாவற்றிலும் அன்பே பெரியதும், சிறந்ததுமாயிருப்பதாக ஞானியர் கூறுவர். இது யாவருக்கும் ஒப்பமுடிந்ததே. இம்மையில் நாம் இந்த அன்பில் பூரணப்படுவதாகவும், அன்பைப் பூரணமாய் நாம் அனுபவிப்பதுபோலும் தெரியவில்லை. ஆகவே இம்மையில் இல்லாவிடினும் மறுமையில் இது நிச்சயமாக பூரணப்படும் என்பது உறுதி. பரிசுத்த பவுலும் "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு நிலைத்திருக்கிறது. இதில் அன்பே பெரியது...அன்பு ஒருக்காலும் ஒழியாது" என்கிறார். ஆகவே அன்பு பூரணப்படுவதற்கு மறுமை அவசியத்திலும் அவசியம்.

அன்றியும் அன்பு, நீதி இவைபோன்ற உயரிய கொள்கைகளுக்காக இவ்வுலகில் பல பாடுகளையும் கஸ்தியையும் பட்டு, அநேக சான்றோர் கொலையும் செய்யப்படுகின்றனர். தனக்கென வாழா

மல் பிறர்க்குரியராக உழைக்கும் இப்பெருந்தகையாருக்கு நியாயக் கேடு நிறைந்த உலகில் நீதியின் பலன் கிடைக்காததால் கட்டாயம் மறுமையில் இவர் தம் நற்பலனை அடைந்தே தீரவேண்டும் என்று நாம் எல்லோரும் விரும்புகிறோமல்லவா? கிறிஸ்து பெருமானும், தம்மைப்போல் நீதிக்காகவும் பூரண அன்பை உலகில் நாட்டுவதற்காகவும் பல துன்பங்களையும் அடைவோரைப் பார்த்து என்ன கூறுகிறார்?

> "மறு ஜன்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது என்னைப் பின்பற்றின நீங்களும்,...சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பீர்கள்....என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது சகோதரரையாவது சகோதரிகளையாவது...நிலங்களையாவது விட்டவன் எவனோ அவனும் நூறத்தனையாய் அடைந்து நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ளுவான்" மத். 19: 28, 29.

என்பதல்லவா? இப்பயனை பெறுவதே நோக்கமாக நாம் உழைக்கிறதில்லை. என்றாலும் உலகம் கூறுவதுபோல் "வினையை விதைத்தவன் வினையை அறுப்பான், தினையை விதைத்தவன் தினையை அறுப்பான்" என்பது ஒருவராலும் மாற்றப்படாத இயற்கைச் சட்டம். நீதியினிமித்தம் இவ்வுலகில் பாடுகளை அனுபவிப்பவருக்கு அவ்வுலகில் நீதியாகிய விளைவு உண்டாகத்தான்வேண்டும். அந்த விளைவை ஒருவன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அது வந்தே தீரும். இது தெய்வீகப் பிரமாணம்.

இவைகள் எல்லாவற்றையும் வாசித்து சிலர், இந்து கொள்கைப்படி இப்பிறப்பில் மனிதரிடத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வு முற்பிறப்பில் அவர் செய்த நன்மை தீமை காரணமாக உண்டாகிறதென்கலாம். இதைப்பற்றி பின்னர் சற்று விரிவாகப் பேச நேரும். ஆதலால் இவ்விடத்தில், அக்கொள்கை, அன்புமயமான பரம தந்தைக்கும், அவரது சாயலான மானிட இயற்கைக்கும், உலகில் நிகழும் இயற்கையனுபவத்திற்கும் முற்றும் பொருந்தாதென்பதை மட்டும் கூறி விலக்குவோம்.

இம்மறுமை உலகில்தான் ஆத்துமாக்கள், கடவுள், உயிர், உலகம் முதலியவற்றைப்பற்றி அறியவேண்டியபிரகாரம் அறியக்கூடும். இவ்வுலகிலோவெனில், மனிதர் பெரும்பாலும் சத்தியத்தை அசத்தியமாகவும், பொய்யை மெய்யாகவும், நியாயத்தை

அநியாயமாகவும், இல்லதை உள்ளதாகவும் மாறுபடக் கருதுகின்றனர். ஆனுல் மறுவுலகில் உள்ளதை உள்ளபடியே அறிந்துகொள்ளுவார். இக்காரணம்பற்றியே மரணத்துக்குப் பின் மனிதர் செல்லும் உலகத்தைப் பெரியோர் "தகுதி யுலகு" (The Kingdom of Values) என்று நன்கு கூறினர். இத்தகைய மறுமையுலகத்தின் நிச்சயத்தால் தூண்டப்பட்டதினுலேயே நமக்கு முன்சென்ற வேத பக்தரும், உத்தம சித்தரும், நித்தியமாகிய அந்நிலையை அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அன்னியரும் பரதேசிகளுமாக அறிக்கையிட்டு, நிலையற்ற கூடாரங்களில் சஞ்சரித்து, அநீதமான இவ்வுலகில் தமக்கு நேர்ந்த எல்லாக் கஷ்ட நஷ்டங்களையும் பொறுத்து, "தேவன்தாமே கட்டிய அஸ்திபாரங்களுள்ள" நிலையான் அவ்வுலகத்துக்குத் தங்களைத் தகுதியுடையவர்களாக்கும்படி "பூரணப் பிரமாணமாகிய" கிறிஸ்துவையே உற்று நோக்கிச் சந்தோஷமாய்த் தம் வாழ்நாட்களின் ஓட்டத்தை முடித்தார்.—எபி. 11 : 13, 14, 10, 26, 34-38.

ஆகவே வேதமும், உலகின் உத்தம ஞானமும் அளித்திருக்கும் மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நமக்கு முன்னே இருந்தும், இன்னும் நாம் மறுமையுண்டு என்ற நம்பிக்கையற்றவர்களாயிருப்போமானுல் யாது செய்வது! சகோதரரே, தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் நினைத்துக் கெட்டழிவதுபோல் நம்மில் ஒருவரும் மறுமை உண்டு என்பதை மறுத்துக் கெடாதிருப்போமாக. "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களா யிருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களா யிருப்போம்." 1 கொரி. 15: 19.

---

## 3. நரகம் நிச்சயம்

மோட்ச நிச்சயத்தைப்பற்றி நாம் இங்கே எழுதாமல் விடுகின்ருேம். ஏனெனில் மரணத்திற்குப்பின் மறுமை உண்டு என்று நம்பாத பலருங்கூட மோட்சத்தைப்போல் இன்பந்தரக்கூடிய ஓர் இடம் தங்களுக்கு இருந்தால் நலம் என்று ஆசிப்பர். ஏனெனில் சரீர கஸ்தியோ மனவிசாரமோ ஒன்றும் இன்றி இலவசமாக யாராவது தங்களைப் பிழைப்பூட்டிவிட்டால் நல்லது என்றெண்ணிச் சோம்பித் திரியும் சோற்று இராமர்கள் உலகில் பலர் இருப்பதுபோலவே, தங்

களது மனம்போனபடியெல்லாம் இம்மையில் யாதொரு கட்டுப்பாட்டிற்கும் உள்ளடங்காமல் நடந்தும், ஆடம்பரமும் சிற்றின்பமும் நிறைந்த துன்மார்க்க ஜீவியத்தைப்பற்றி யாதொரு கணக்கையும் கேளாமலே, தாங்கள் மரித்தவுடன் தங்களுக்கு மறுமையில் ஓர் நல்ல பதவியை யாராவது கொடுத்துவிட்டால் நல்லது என்று வாஞ்சிக்கும் ஆன்ம நிர்விசாரிகளும் பலர் இருக்கின்றனர். மறுமையை நம்புகிற பலருங்கூட மோட்சத்தின் நிச்சயத்தைப்பற்றியல்ல, நரகத்தைப்பற்றியே ஐயமும் மயக்கமும் உடையவராயிருக்கின்றனர். ஆகவே பலருக்கும் சம்மதமான மோட்சத்தைவிட்டுச் சந்தேகத் திற்கு இடமான நரகத்தையே இங்கு குறிக்க எண்ணினோம்.

நரகம் என்ற ஓர் இடம் இல்லை என்றும், பாவம் செய்தவர்களின் இருதயத்தில் உண்டாகும் சூடுண்ட மனச்சாட்சியினால் இம்மையில் உண்டாகும் பயமும், துக்கமுமே நரகம் என்றும் சிலர் கூறுவர். நரகம் என்பது அவர் நினைப்பதுபோல மனத்தின் நிலையுமாகும். ஆனால் மனிதர் அனுபவிக்கும் இன்பதுன்ப நிலைகளுக்கேற்ப இடங்களும் உண்டே. புணர்தல், பிரிதல், ஊடல், இரங்கல் முதலிய ஒழுக்கங்களுக்கு இடமாக முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற இடங்களையும் நமது தமிழ் இலக்கண ஆசிரியரும் குறித்திருக்கின்றார். அதுபோலவே நற்குணமுடைய மனையாளோடு தலைவன் இருப்பதே வீடு என்றும், துர்க்குணமுள்ள அடங்காத மனைவியோடிருப்பது புலிகிடந்த காட்டிலிருப்பதற்குச் சரி என்றும் கவிகள் கூறும்போது இங்கே மனநிலைக்கேற்ற இடத்தையும் குறிக்கிறார். ஆகவே மோட்சம் நரகம் என்பவை முறையே இன்ப, துன்ப நிலையையும் காட்டும்; இடங்களையும் குறிக்கும். உதாரணமாக யூதாசைப்பற்றி அப்போஸ்தலர் பேசும்போது "அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்துத் தலை கீழாக விழுந்தான்" என்றும் யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன ஊழியம்" என்றும் கூறுவர்.—அப். 18 : 24 இங்கே குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக்கொடுத்தபடியால் பாவம் செய்தேனே—என்று யூதாஸ், ஆண்டவரைக் காட்டிக்கொடுத்ததற்காக அடைந்த ஆத்தும வேதனை நரகவேதனையின் நிலைக்குச் சரி. அவன் பேதுருவைப்போல மன்னிப்புக்காக மெய் மனஸ்தாபப்பட்டிருந்தால் நிச்சயமாகவே அதைப்பெற்றிருப்பான். அப்படி செய்யாமல் அவன் தன்னையே நான்றுகொண்டு செத்து தனக்குரிய இடமாகிய நரகத்தையும் அடைந்தான். ஆகவே மாம்ச

துக்கமும் வெட்கமுமாகிய நரகநிலையும் இதனோடு இவன் சென்ற நரகமாகிய இடமும் ஆகிய இவை இரண்டும் நரகந்தான். பாவம் செய்து அதற்காக மனச்சாட்சியில் குத்துண்டு, மெய்மனஸ் தாபப்படும் சகோதரனைக் கடுமையாய் நடத்தாதபடி பரி. பவுல் எச்சரிக்கும்போது, அதற்குக் காரணமாக "அப்படி பாவம் செய்தவனுக்கு அநேகரால் உண்டான மனவேதனை போதும்" என்கிறார். நல்மனசாட்சியற்று இருந்த இமனேயையும், அலெக்சாந்தரையும் பற்றி "தூஷியாதபடிக்கு சிட்சிக்கப்பட அவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன்" என்கிறார்.—I தீமோ. 1 : 20 அப்படியே "வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால்... அவன் வெட்கப்படும்படி அவனுடனே கலவாதிருங்கள்" என்கிறார். II தெச. 3 : 15. இந்த இடங்களில் எல்லாம், ஒருவன் பாவம் செய்ததினால் அவனுக்கு இம்மையிலேயே அவனுடைய மனசாட்சியால் வரும் வேதனையும், பிறருக்குமுன் உண்டான அவமானத்தால் வரும் துக்கமும் ஆகிய நரகவேதனையான நிலையை வேதம் குறிக்கும். ஆனால் வேதமே அடிக்கடி நரகம் ஓர் வேதனை நிறைந்த இடம் என்றும் கூறுகின்றது. ஆகவே மோட்சம், நரகம் என்பது இடங்களையும், அந்தந்த இடத்துக்குரிய தன்மையாகிய நிலைமையையும் குறிக்கும்.

இந்த உலக அனுபவத்தில்கூட இது நன்கு விளங்குகின்றது. குற்றஞ் செய்த ஒருவனுக்கு நியாயஸ்தலத்தில் வரும் துக்கம் வெட்கம், நஷ்டம் ஆகிய எத்தனையோ மனோவேதனையோடு கூட செய்த பாவத்துக்கேற்றபடி சிறைச்சாலையில் இடமும் குறிக்கப்படுகின்றது. அவ்விதமே புகழ்ச்சிக்குரிய நற்கிரியை செய்து அதன் பலனாக ஒருவனுக்கு பலருக்குமுன் நற்கீர்த்தியும், மதிப்பும் சந்தோஷமும் உண்டாவதோடு, பதவிக்கேற்ற இருப்பிடமும் ராஜாங்கத்தாரால் அளிக்கப்படுகின்றது. இதுபோலவே உலகின் எம்மதத்தினரும் பாவிகளுக்கு உண்டாகும் மனோவேதனையையும் அதனோடுகூட பாவிகளுக்காகக் குறிக்கப்பட்ட நரகத்தையும் சேர்த்தே கூறுவர்.

இனி கிரேக்கருடைய கொள்கைப்படி நரகம் ஓர் இருண்ட சதுரமான இடமாகும். இதைச் சுற்றிலும் நான்கு ஆறுகள் ஓடுகின்றன. ஒன்று ஸ்டிங்ஸ் என்று சொல்லப்பட்ட பகை; ஒன்று அச்சாரான் என்னப்பட்ட துக்கம்; மற்றொன்று பிளகதன் என்று

கூறப்பட்ட அக்கினி ; இன்ஞென்று கோனிபஸ் என்னப்பட்ட அழுகை. இந்த இருள் செறிந்த பாதாள உலகிற்கு வழிகள் பல பயங்கரமான குகைகளாம்.

**ஜர்மானியரும்,** நகரத்தை ஓர் இருண்ட பாதாளம் என்றே கொள்ளுவர், இதற்குத் தலைவன் **லோகி** என்னப்பட்ட சாத்தானு வான் என்று முன்னமே பார்த்தோம். **இவன் பொய்யும், பொய்க் குசூ காரணமும் இருப்பிடமுமானவன்** என்பர். இவனுடைய புதல் விக்கு **ஹேல்** என்று பெயர். இதற்குப் பொருள் **கொடியவேதனை ஸ்தானம்** என்பதாம். இவனுடைய புதல்வன் உலகத்தின் **ஆதி சர்ப்பமாம்.** இம்மூவரின் இருப்பிடத்திற்கு மேலும் கீழும் சுற்றி லும் இருந்து மகா பயங்கரமான மேகம்போன்ற கரிய புகைக்காடு எழும்புகின்றதாம். இந்தப் புகையிலிருந்து **நிப்லிஹிம்** என்ற கொதிக்கும் அக்கினிக் குழம்பு நிறைந்த அருவருப்பான பாத்திரம் உண்டாகின்றதாம்.

**கீழ்த்தேச மதங்களும்** நரகத்தை ஓர் இடமாகவே குறிக் கின்றன. **மித்ரேயிசம்** என்ற மதத்தில் அஹுரோமஸ்டா என்ற ஒளியுள்ள **ஆவியோடு** பாதாளத் தலைவனை அங்கூ ராமாரின்யு என்ற **தீய ஆவி** யுத்தம் பண்ணுகின்றது. இதன் இடம் கீழேயுள்ள பாதாளமாம். இத்தீய ஆவியின் பெயருக்குக் கள்ளம் என்றும், அசத்தியம் என்றும், அழுக்கு என்றும் பொருளாம். இதன் தோற்றம் ஏறக்குறைய சிவனுடையதுபோன்ற கோரமான உரு வம், நிறம் கருமை.

**பாரசீகரது மானிக்கீய்சம்** என்ற பிரிவில் **மானி** என்ற வெளிச்சத்தின் தலைவன் பரதீஸ் என்ற மேலோகமும், அவனுடைய பகைவரோ கீழே கொடுமை நிறைந்த பாதாளமும் செல்லுகின்ற னராம்.

**மகமதிய மதமும்** இப்படியே கூறும். அல்லாவின் நண்பர் மேலோகம் சென்று ஸ்திரீ சம்போகம் முதலிய மாம்ஸ இன்பத்தில் சதா இன்புறுகின்றதாகவும், அவரது பகைவர் கீழே சென்று துன் புறுவதாகவும் கூறுகின்றது. இவ்விரண்டு இடங்களையும் பிரிப்பது அஹிராட் என்ற தடுப்புச் சுவராம்.

இப்படியே கீழ்த்தேச மதங்கள் பல, பாதாள அதிகாரி என் பவன் எமன் எனக்கூறுகின்றன. அவனுடன் இரட்டைப் பிள்ளை

யாய்ப் பிறந்தவள் எமி என்பவர். இவ்விருவரும் முதல் முதல் மரணவாயிலைக் கடந்தவராம். ஆகையால் மரிப்போரை அழைத்துச் சென்று பாதாளத்தில் இருத்துகின்றனராம்.

நமது தமிழாசிரியர் நரகத்தைப்பற்றி எழுதிய நூலுக்கு கணக்கே இல்லை. நரகத்தை மகாபயங்கரமான கொடுமை நிறைந்த இடமாகக் கேட்பவர் மனதும் கூசும்படியாக வருணித்திருக்கும் சிவதநமோத்ரம் என்ற நூலை வேண்டுவோர் வாசிக்கவும். கொடியதும், உண்மையற்றதும் பூரண அன்புள்ள தந்தையாகிய கடவுளுடைய திரு லட்சணத்திற்கு மாறானதும், மனிதனின் தூய உணர்ச்சிக்கும், நடுநிலைக்கும் முற்றிலும் பகையானதுமான இத்தகைய ஓர் நூலை, எல்லா அசுத்தமும், எல்லாப் பொல்லாப்பும் நிறைந்தவனும், நீதிக்கெல்லாம் பகைஞனுமான பூதகணத் தலைவனாகிய உருத்திரனுடைய மனிதரைத் தவிர உலகில் வேறு எவரும் எழுதவே முடியாது. நிற்க, "பிலத்துறை ஆடகேசுர நாயனார்" என்று பூதகணத்தலைவனான சிவனைப்பற்றி அவனுடைய பக்தனான சித்தியார் பாடுகின்றார்.

"நமன் தமர் உந்திக் கொண்டுபோய் நரகத்து உன்னை உழக்குவர்"

என்று நரகவேதனையைப்பற்றி பட்டினத்தார் குறித்தார். இப்படியே பாபிலோனியர், கிரேக்கர், ரோமர், எகிப்தியர், சைவர், வைஷ்ணவர் ஆகிய யாவரும் பாடுவார். இதிலிருந்து பாவிகள் இம்மையில் தாங்கள் தேரிந்துகொள்ளும் அசத்தியத்திற்கும் அசுத்தத்திற்கும் ஏற்க, மறுமையில் தங்களுக்காகத் தேரிந்துகொள்ளும் இடமே நரகம் என்றும், பாதாளம் என்றும், இருள் உலகம் என்றும், வேதனைக் குழி என்றும், பலவாறாகக் கூறப்படுகின்றது என்பது தெளிவாகின்றது. அச்சிலீஸ் என்னப்பட்ட கிரேக்க வீரன், தனது மத நூல்களிலிருந்து, பூதகணத் தலைவனையும், அவனால் இழுத்துச் செல்லப்பட்டு ஹேட்ஸ் என்ற பாதாளத்தில் அல்லலற்படுவோரையும்பற்றி நன்றாகக் கற்று பாவனையில் வைத்திருந்தான். இவன் மரித்து மறுமையில் இவ்விடத்துக்குச் சென்று பார்க்கிறான். உருத்திரனுடைய கோர உருவினையும், கொடூரத் தோற்றத்தினையும் சொல்லக்கூடாத மகா பயங்கரமான கொடும் செயலையும் கவனிக்கிறான். ஒருநாள் உயிரோடிருக்கும்

தனது நண்பனுன ஓடீஸியஸ் என்பவனிடம் வந்து, ஐயோ, அப்பனே இங்கே மகா பயங்கரங்களால் சூழப்பெற்ற வேதனைக்குழிகளில் இந்த மரணத்தலைவனேடு, ஒருநாள் இருப்பதைக் காட்டிலும், ஒளியுள்ள பூலோகத்தில் அடிமைக்கு அடிமையாய் ஆயுள் காலமெல்லாம் உழலுவது எத்தனையோ உத்தமம் என்று கூறுகின்றான்.

நரகம் உண்டென்று புராதன காலந்தொட்டு வேதமும், வேதியரும், ஞானியரும், பெரியோரும் கூறின உண்மையைத் தற்காலம் இயற்கை சாஸ்திரமும் உறுதிப்படுத்தி முத்திரிக்கின்றது. பூமிக்குமேலே செல்லச்செல்ல சுகமான நல்ல காற்றும், வெளிச்சமும், சந்தோஷமும் உண்டாகின்றது. அப்படியே பூமிக்குக் கீழே செல்லச்செல்ல இருளும், அந்தகாரமும், மூச்சை முட்டச் செய்யும் விஷக்காற்றும், பூச்சி புழுக்களும், கந்தகமும், அக்கினியும் தாக்குகின்றன. தற்காலம் எத்தகைய கொடிய வெம்மையான அக்கினியாலும் தாக்கப்பட்டு உருகாத கொடிய குளிர் உள்ள மண்டலத்தை மேலே நவீன சாஸ்திரகாரர் கண்டுபிடித்திருக்கின்றனராம். இதிலிருந்து இதற்கொப்பாக எத்தகைய கொடிய குளிரிலும் தணிக்கப்படாத உஷ்ணம் உள்ள ஓர் மண்டலம் ஒன்று கீழே இருந்தே தீரவேண்டும் என்று யூகித்துக் கூறுகின்றனர்.

நம்முடைய சத்தியவேதம் நரகத்தைப் பற்றிக் கூறுவதை இனி நோக்குவோம். "நியாயப்பிரமாணத்தை அழிக்க அல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன்" என்று கூறின திருக்குமாரனும், பிதாவுமான சத்தியவேதக் கர்த்தர்களின் மட்டற்ற அன்பை நாம் அறிவோம். அத்தகைய பூரண தெய்வீக அன்புமயமானவரும், பாவிகளையும் ஏழைகளையும் பார்த்துப் பெருமூச்செறிந்து, ஆவியில் கலங்கி, அனுதாபத்தினல் பொங்கிக் கண்ணீர் விடும் தெய்வீக முதல்வருமாகிய கிறிஸ்துவவும், தெளிவாக நரகத்தின் நிச்சயத்தைக் குறித்திருக்கிறர். தமது சத்தியத்திற்கும், பரிசுத்தத்திற்கும் மாருக நரகலான விக்கிரகத்தைப் பின்பற்றிச் சாய்ந்துபோன தன் பிள்ளைகளையும், பரஸ்திரீயைத் தொடர்ந்து போவோர், துன்மார்க்கர், தேவனை மறப்போர் ஆகிய பிறரையும் பார்த்து எகோவாவாகிய கர்த்தர் பலமுறையும் நரகத்தைக் குறிப்பிட்டே எச்சரிக்கிருர்:— உபாக. 3: 20, நீதிமொ. 5: 5, சங். 9: 7, மத். 5: 22, லூக். 16: 23 —26.

சகோதரரே! உலகில் சத்தியம் அசத்தியம், உயர்வு தாழ்வு என்ற இரு பெரும் வகுப்பே எல்லாத் துறையிலும் உண்டு. சத்தியத்தோடு சம்மந்தப்பட்ட எல்லாக் காரியங்களும், செயல்களும் மறுமையில் சத்தியலோகமாகிய இன்ப வீட்டுக்கே வழி நடத்தும். அசத்தியத்தோடு தொடர்பான எல்லாச் செயலும் அதற்கு இருப்பிடமான பாதாளத்திற்கே கட்டாயம் வழி நடத்தவேண்டும். இது எதிர் மறுக்கப்படாத சத்தியம். "நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே" என்று கூறின பெரியாரே 'தீயாரைக் காண்பதுவும் தீதே, திருவற்ற தீயார் சொல் கேட்பதுவும் தீதே" என்றும் கூறி எச்சரிக்கின்றார். "இனியவர் கூட்டம் வீடே" என்று நமது பெரியார் மோட்சத்தைப்பற்றிக் கூறியிருப்பதால், "இன்னாதவர் கூட்டம் நரகமே" என்பது சொல்லாமல் விளங்குகிறதல்லவா? அன்றியும் நமது பூகோள சரித்திரத்தில், நரகத்தின் படத்தை உலகோர் யாவரும் காணும்படி காட்டி, பேசாமல்பேசிப் போதித்து எச்சரிக்கும் சவக்கடலை நினைப்பில் வைப்போமாக. அது இருக்கும் இடத்திற்குமேலே ஆகாயத்தில் பறக்கும் பட்சியும்கூட அதன் விஷக் காற்று பட்டு அந்தட்சணமே ஜீவனை இழந்து அதில் விழுகின்றதாம்.

ஆகவே இம்மையை விட்டுப்போனதும், மறுமையில் நரகத்தை நமக்குப் பங்காக்கிக்கொள்ளாதபடி நாம் எல்லோரும் சத்தியத்தைப் பற்றிக்கொண்டு, நன்மை தீமையை அறியும் சக்தியாக நமது பரம தகப்பன் நமக்கு அளித்திருக்கும் பகுத்தறிவை தூய, சத்தியவழியில் பழக்கி இன்பவீடு சேர கண்ணும் கருத்துமாக இருப்பதே நமது பேரில் விழுந்த பெருத்தகடமை. இதைவிட்டு, மோட்சம், நரகம் இவற்றைப்பற்றிய தர்க்கவாதம் கொண்டவர்களாயிருப்பது என்ன பயனைத்தரும்? தங்களில் யார் பெரியார் என்று தர்க்கித்து, மல் யுத்தம் செய்துகொண்டிருந்த இருவீரர், யுத்தம் பிரமாதமானதால் அதன் மும்முரத்தில் தாங்கள் எங்கே இருக்கிறோம் என்ற எண்ணமின்றி கொஞ்சங் கொஞ்சமாய் ஓர் ஆழ்ந்த பாழுங்கிணற்றைக்கிட்டி, ஏககாலத்தில் அதில் விழுந்து மாண்டனராம். ஆகவே நரகத்தைப் பற்றித் தர்க்கம் செய்ய அல்ல, அதற்குத் தப்பிப் பிழைத்துப் பிதாவின் இன்பவீடு சேர்ந்து உய்யவே வேதம் நமக்கு இடையறாமல் போதிக்கின்றது.

இதுவரையில் நாம் கூறிக்கொண்டு வந்ததிலிருந்து 'இது இப்படியானல் யார்தான் கடவுளின் அன்பை நம்பக்கூடும்?' என்று நம்மில் சிலர் கலக்கமுறலாம். கர்த்தர் அவ்வாறு திகைத்தவர்களைப் பார்த்து 'நீ தேவனுக்கேற்றபடி அல்ல மனுஷருக்கேற்றபடி சிந்திக்கிறுய்' என்று பேதுருவுக்குக் கூறியதுபோல எச்சரிக்கிருர். சகோதரரே! இம்மை மறுமைகளைப் பற்றிய சத்தியங்களை உள்ளது உள்ளபடி கூறி அறிவிக்கக் கடமை பூண்டது சத்தியவேதம். மெய்யான அன்பு எங்கேயுண்டோ அங்கே கட்டாயம் எச்சரிப்பும் இருந்தே தீரவேண்டும். ரஸ்தாக்கள் சந்திக்குமிடங்களிலோ சந்து திரும்பும் இடங்களிலோ மோட்டார் முதலிய வாகனத்தில் போகிறவர்கள் கொம்பு ஊதி எச்சரிப்பின் சத்தம் கொடுப்பது எதற்காக? பிரயாணிகளைப் பயமுறுத்தவா? அல்லவே, அவர்கள் ஆபத்தில் அகப்பட்டு நசுக்குணுதிருப்பதற்கல்லவா? அப்படியே மின்சாரத்தினுல் வேலை நடத்துகிற இடங்களிலும், பாஷாணம், வெடி மருந்து முதலியவை வைக்கப்பட்டிருக்கும் இடங்களிலும் அபாயக்குறிபோட்டு ஜனங்களை எச்சரிப்பது ஏன்? அவர்களை அச்சுறுத்தவா? இல்லையே. இருதய வியாதியஸ்தரை அவர்கள் உழைப்புக்கிடமான கடினவேலையைச் செய்யக்கூடாதென்றும், குடிவெறி மாம்சபெருந்தீனி, மிதமிஞ்சிய மாம்ச இச்சை முதலியவற்றில் தலையிடாமலிருக்கும்படியும் வைத்தியர் எச்சரிப்பதும் யாது காரணம் பற்றி? பிணியாளிகளை நடுங்கச்செய்து கெடுக்கவா? அல்ல; நோயாளிகளின் நன்மையைக் கருதித்தானே. St. Port Elizabeth என்ற துறைமுகத்தில் அடிக்கடி பலத்த ஆபத்தான புசல்காற்று திடீரென்று வருமாம். அது அப்படி வரும்போதெல்லாம் மிகுந்த ஜனச்சேதமும், பொருள் சேதமும் உண்டாகுமாம். ஆகையால் அது வரும் என்று உணர்ந்தவுடனே அங்கே நியமிக்கப்பட்ட காவலாளர், அங்குள்ள உயர்ந்த ஸ்தம்பத்தின்மேல் ஏறிப் பலத்த சத்தத்துடன் பறையறிவிப்பாராம். ஏன் இவர் இப்படி செய்கின்ருர்? ஊராரைப் பயப்படுத்தவா? அல்ல, அவர்களைச் சேதமறக் காப்பாற்றவே. எல்லா உலக சரித்திரத்திலும் வந்தபின் தடுக்க முயலுவதைக் காட்டிலும், ஆபத்துவருமுன் தம்மை அதினின்றும் காத்துக்கொள்ளும் முயற்சி எடுப்பதே உத்தமம் என்று பெரியாரின் உலக அனுபவமும் காட்டுகிறதல்லவா? அப்படியே கிறிஸ்துவும் தமது சத்திய வசனங்களின் மூலமாய் மனித ஆத்துமத்திற்கு நித்திய தீமையையும், அழிவையும் தரக்கூடிய காரியங்களைக் குறித்து அடிக்கடி எச்சரிக்கிருர். இது நமக்கு எத்தனை நல்லது.

நமது சைவர் முதலிய மதத்தினர் கொஞ்சமும் ஆத்துமாக்களைப் பார்த்து, பாவத்தைப் பற்றியோ, நரகத்தைப்பற்றியோ, பேயின் தந்திரங்களைப்பற்றியோ எச்சரிக்கிறதேயில்லை. இது எப்படி இருக்கிறது? தீக்கோழி என்று சொல்லப்பட்ட வனாந்தரப்பட்சி, தன்னைச் சத்துருக்கள்பிடிக்க வரும்போது தன் தலையை மணற்குள் பதித்து மூடிக்கொள்ளுமாம். ஏன்? தான் மற்றவர்களைப் பார்க்கமுடியாததால் தன்னையும் சத்துருக்கள் காணமுடியாது என்ற சர்வ முட்டாள்தனத்தினால்தான். முடிவு என்ன? அப்பட்சி சத்துருவால் பிடிபட்டு மாளும். இராமாயணத்தை எழுதிய கவி அதை முடிக்கவில்லையாம். காரணம் என்னவென்றால், முடித்தால் தமது குலதெய்வமாகிய ராமனின் துக்கமான மரணத்தைப் பற்றிக்கூற நேரும் என்று அஞ்சியாம். அவர் இப்படி அதை முடிக்காது போனதினால் ராமன் இறக்காமல் இருந்தானோ? இல்லை, மரணம் அவனை முடிவில் வாறிக்கொண்டுதான் போனது. இது போலவே உள்ளதை உள்ளபடி ஆத்துமாக்களுக்குச் சொல்லி, நமது சத்தியவேதம் போதிக்கிறபடி, ஜீவிய ஓட்டத்தில் நேரக்கூடிய பற்பல தீமை ஆபத்துக்களைப்பற்றித் தெளிவாக எச்சரிக்காமல், எல்லாம் ஒன்றே என்று சல்லாபம் பேசிக்கொண்டிருக்கும் பலர் சடுதியில் மரணம் வந்தவுடன், மறுமை செல்லுவர்; சென்றவுடன், 'ஆ, இது என்ன, ஐயோ எல்லாம் ஒன்றாகக் காணோமே, சத்தியம் வேறு, அசத்தியம் வேறு, வெளிச்சம் வேறு, இருள் வேறு, பகல் வேறு, இரவு வேறுபோல மோட்சம் வேறு, நரகம் வேறாக இருக்கிறதே' என்று ஒரு க்ஷணப்பொழுதில் அறிந்து அங்கலாய்ப்பார் என்பது சத்தியம். "கடவுள் உண்டு என்பதை நான் நம்பப்போகிறதேயில்லை" என்று ஒரு நாஸ்திகன் ஒரு பெரியாரைப் பார்த்துக் கூறினான். அப்பெரியார் அமைதியோடு, 'சரிசரி, அப்பா கொஞ்சகாலம் பொறு. நீ செத்தவுடன் கட்டாயம் நீ கடவுள் உண்டு என்பதை பிறர் கூறாமலே அறிந்துகொள்ளுவாய்!' என்றார். ஆம் அது மெத்த உண்மை; இயேசுக்கிறிஸ்துதான் சர்வலோக மீட்பர் என்பதை நான் நம்பவேமாட்டேன் என்று வேண்டுமென்று இருதயக் கண்களை மூடிக்கொள்ளுகிறவர், மரித்த அந்தட்சணமே அவரை, ஆண்டவரே என் தேவனே என்று பாதம் பணிவார். இது சத்தியம் சத்தியம். ஏனெனில் பாதாளவாசிகளான பேய்களும் கூட, கிறிஸ்து மனிதனாக அவதரித்தபோது, அவரைப் பார்த்து "இயேசுவே, தேவனுடைய குமாரனே! உம்மை இன்னாரென்று

அறிவேன், நீர் உன்னதமான தேவனுடைய புத்திரர்" என்று நடுக்கத்தோடும் பயத்தோடும் அறிக்கையிட்டன.

ஆகவே நரகத்தின் உண்மையை உள்ளபடி கூறி கிறிஸ்து நம்மை எச்சரிப்பது, மரணத்துக்குப்பின் அதில் நாம் சென்று துன்புறுமல் பிதாவின் இன்ப வீட்டுக்கு நம்மை வழி நடத்தும் அன்பின் திரு நோக்கத்தினுலேயே. தீபஸ்தம்பம், மாலுமியின் வசத்திலுள்ள தூரதிருஷ்டிக்கண்ணுடி, தொலையறியும் கருவி முதலியவற்றின் நோக்கம், பிரயாணிகளுக்கு வழியிலுள்ள ஆபத்தைக் காட்டி, நாடிப்போகும் துறையில் அவர்கள் பத்திரமாய்ச் சேரவேண்டும் என்ற கருணைபற்றியே. அன்னிய நாட்டிலுள்ள விசேஷித்த மலைகளையும், இடங்களையும் பிரயாணிகள் பார்க்கப்போகும்போது, அவர்களை நடத்த வழிகாட்டிகள் (guides) இருப்பார்கள். இவர்கள் பிரயாணிகளுக்கு அனுவசியமான சரீரக்கஸ்தியும், பணச்செலவும், நேரப்போக்கும் இல்லாமல் அவர்களைப் பார்க்கவேண்டிய இடங்களுக்கு நேரே நடத்துவர். ஆல்ப்ஸ் என்ற பனிமலையிலுள்ள வழிகாட்டிகள் இடுப்பில் நீண்ட கயிறு கட்டியிருப்பார்களாம். இந்தக் கயிற்றின் இன்னொரு முனையை மலை பார்க்க விரும்பும் பிரயாணியின் இடுப்பில் கட்டிவிட்டால், வழிகாட்டி வெகு தூரத்தில் இருந்தாலும், திடீரென்று பிரயாணிக்கு ஆபத்து நேருமானல் அதை வழிகாட்டி அறிந்து, கயிறு இழுபட்ட திக்கை நோக்கி ஓடி, பிரயாணியின் ஆபத்தை விலக்குவானும். இதுபோலவே, "என்னில் நிலைத்திருங்கள்," "என்னுலேயன்றி உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது," திராட்சக்கொடியானது செடியில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்கமாட்டாது," "கனிகொடாத கொடி எதுவோ அதை என் பிதா அறுத்து அக்கினியிலே போடுவார்," "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரனில்லாதவன் ஜீவனில்லாதவன்" என்று இப்படியாக, மறுமைக்கு வழிகாட்டியான கிறிஸ்து போதிக்கின்றூர். அன்பரே! யாராலும் இப்போதகத்தைக் கேட்டுத் தங்களை மெய்யான மோட்ச வழிகாட்டியாகிய கிறிஸ்துவோடு இணைத்துக்கொண்டால், ஜீவிய பிரயாணத்தில், மாம்ச இச்சையினுலோ, உலகபற்றினுலோ, பிசாசின் தந்திரங்களினுலோ, எந்தவிதமான சோதனையும் ஆபத்தும் வந்தாலும் நிச்சயமாகவே அவர் அவர்களை மீட்டு, பிதாவின் வீட்டுக்குத் தூக்கிச் சென்று சேர்ப்பார். இது சத்தியம். "நீர் எனக்குக் கொடுத்தவர்களில் ஒருவனையும் நான் இழந்துபோகவில்லை." என்று பிதாவைப்

பார்த்து குமாரக்கடவுளாகிய கிறிஸ்து பூரிப்போடு கூறுகிருர். நூறு ஆடுகளில் தொண்ணூற்று ஒன்பது தமது தொழுவத்தில் சேர்க்கப் பட்டு ஒன்று தவறிப்போனுலும், காணமற்போன அந்த ஒரு ஆட்டுக் குட்டியையும் தேடிச்சென்று கண்டுபிடித்துத் தமது தோளில் சுமந்து வந்து வீடு சேர்க்கும்வரையில் இளைப்பாருர் எம் அன்பின் சொரூபி யாகிய அருள்நாதர். இத்தகைய ஆன்மகுருவும், இன்பரை அன்பின் வீடு சேர்ப்பவருமான கிறிஸ்து, நரகத்தைப்பற்றிச் சொல்லும் எச்ச ரிப்புக்குச் செவிசாய்த்து உய்வோமாக.

---

# II. மரண விளக்கம்.

## 1. மறுமை வழிகாட்டி—சத்தியவேதம்.

இனி மரண நிச்சயத்தை நாம் நமது சொந்தக் கண்களால் கண்டு அனுபவத்தில் அறிவதால் அதை மறுக்கமாட்டோம். ஆனல் மரணமாவது என்ன என்ற தாற்பரியத்தைப்பற்றி நாம் அறிந்தது எத்தனே? இதைப்பற்றி நாம் யாரை விசாரிப் பது? இயற்கையின் எழிலை மிக நுணுக்கமாய் ஆராய்ந்து, அவை களிலிருந்து பல அரிய தத்துவங்களை உலகுய்யப்போதித்த கிரேக் கரைக் கேட்போமோ? படைக்கலப் பயிற்சியிலும் நீதிநியயாத் திலும் தனிப்புகழ் பெற்ற ரோமரை வினவுவோமோ? வானம் அளாவிய கோபுரங்களைக் கட்டிச் சாவாத கீர்த்தியடைந்த எகிப்தி யரைக் கிட்டுவோமோ? உலகின் பாஷா ஞானத்திற்கு அடிப் படை கோலிய ப்யூனிஷியரை விசாரிப்போமோ? அன்றி இந்த ஸ்தூல உடலை நீக்கி, பின் சூக்கும உடலைப் பெற்று, நித்திய ஆயுள் பெறும்படி கருதி, நீரிலும் தீயிலும் கடுந்தவம் பண்ணிய இருடிகள், முனிவரைக் கேட்போமோ? கீழ்த்தேச ஞானியர், வீரர், தத்துவ சாஸ்திரிகள், துறவிகள் ஆகிய இவர் எல்லோரும் மரணத்துக் குப்பின் ஏதோ ஒரு நிலையில் ஆத்துமாக்கள் மறுமையில் இருக்கின் றன என்று ஒருவாறு நம்பினரே தவிர, மரணம், மறுமை இவற்றின் தத்துவங்களை உள்ளபடி அறிந்து நிச்சயத்தோடும், நம்பிக்கை யோடும் உயிர் வாழ்ந்தவர் அல்லர். ஆகையால் இவரெல்லாம் இதைப்பற்றி மானிடர் அறியவேண்டிய பிரகாரம் திட்டவட்டமாய்ப் போதிக்கக்கூடியவர் அல்லர். "சிருஷ்டியே சம்ஹாரம், சம்ஹாரமே சிருஷ்டி," "நானே மரணம், நானே ஜீவன்" என்று இத்தகைய

உரை வேதாந்தத்தைப் பறைபோல தட்டி, அற்ப சொற்பமாயிருக்கும் ஆத்தும அறிவையும் மயக்கிவிடுவார், எல்லாம் அறிந்த வல்லவர்போல் சொல்லால் முழங்கிக்கொண்டிருக்கும் நமது வேதாந்த சித்தாந்திகள். இத்தகையோரைப்பற்றி சத்தியவேதம் நம்மை நன்கு எச்சரிக்கின்றது :—1 கொரி. 1 : 20—25. பின் நாம் மரணத்தையும் மறுமையையும்பற்றிய திருப்போதனையை யாரிடம் கற்றறியலாம் ?

சகோதரரே ! இம்மை மறுமைகளைப்பற்றிய பற்பல சாஸ்திரங்கள் உலகில் உண்டு. அறிவுத்துறை பலவிதப்படும். வானசாஸ்திரம், பூசாஸ்திரம், ககளசாஸ்திரம், விஞ்ஞான சாஸ்திரம், தாவரநூல், மிருகநூல், மனிதநூல், மனநூல் என்ற ஏராளமான நூல்கள் உண்டு. அந்தந்தத் துறைகளில் மனிதர் கண்டுபிடிக்கும் உண்மைகளை அததற்கு உரிய நூலில் எழுதிவைத்திருக்கின்றனர். அப்படியே மனிதனுடைய ஆன்மாவுக்கான அறிவையும் வேதம் என்னப்பட்ட புஸ்தகத்தில் பக்தரைக்கொண்டு பராபரன் எழுதிவைத்திருக்கிறார். இந்தத் தெய்வீக வழிகாட்டியாகிய மெய்வேதத்தின் ஒரே முக்கிய நோக்கம் என்னவென்றால், மனிதனுக்குத் தந்தையாகிய தேவன் ஆதியிலே அளித்த உன்னத பதவி இன்னதென்று தெளிவாகக்காட்டி, பலவித இடர் நிறைந்த இந்த உலகத்தின் ஊடே அவனைச் சேதப்படாமல் பத்திரமாய் எச்சரித்து, கைப்பிடித்து வழிகாட்டி நடத்தி, முடிவிலே மறுமைக்குள் மகா பரிசுத்தராகிய பரம தந்தையின் வீட்டில் கொண்டு சேர்ப்பதேயாகும்.

நேயர்களே ! உலகில் பற்பல மதங்களுண்டு ; அந்தந்த மதங்களுக்கு உரிய பற்பல வேதங்களும் உண்டு. அந்தந்த வேதத்திற்கு உரியார் அவை, தாங்கள் வணங்கும் தெய்வங்களால்தான் எழுதப்பெற்றவை என்று தர்க்கம் செய்வர். அவை மோட்சத்திற்கே வழி நடத்துகின்றன என்றும் பிடிவாதமாய்க் கூறுவர். வியாபாரிகள் எல்லாரும் தத்தம் சரக்குத்தான் மேலானது என்றுதான் கூறுவார்கள். ஆனால் வாங்குவோர் அவற்றை நன்றாய்ப் பார்த்து நல்லவைகள் என்று தாங்கள் நினைக்கிறதைத்தான் வாங்குவார்கள். அப்படியே வேதங்கள் எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து, கடவுளுடைய பூரண பரிசுத்தத்திற்கும் சத்தியத்திற்கும் அன்புக்கும் மாறகாமலும், இயற்கை சாஸ்திர உண்மைகளுக்குச் சிறிதும் முரண்படாமலும், மனிதனுடைய தூய உணர்ச்சிக்கு கொஞ்சமும் அசுசியை உண்டாக்காமலும் இருப்பதான ஒப்பற்ற திருவேதம் எது என்பதை வாசிப்போர் தெளியவேண்டும். தெளிந்தபின் அதையே

மறுமைக்கு வழிகாட்டியாக ஏற்கவேண்டும். ஏற்று அது கூறுகிற படி ஒழுகவேண்டும்.

மனிதன் தன்னுடைய சரீர சுகத்திற்கும் போஷணைக்குமான ஆகாயம், தண்ணீர், ஆகாரம், இன்னும் மற்ற எல்லா வஸ்துக்களை யும் நன்ருக ஆராய்ந்து, பிறகுதான் தன் சுகத்தை வளர்த்து தேகத் தையும் பாதுகாக்கும் நல்ல வஸ்துக்களை அனுபவித்து இன்புறுகி ருன். அப்படியிருக்க நித்தியமான மறுமைக்கென்று தன் ஆத்துமா வைப்போஷித்து வளர்த்து பூரணப்படுத்தக்கூடிய வழிகாட்டியாகிய வேதங்களை ஆராய்ந்து, நலமும் சத்தியமும் தூய்மையுமான ஒன் றையே தெரிந்தெடுக்கவேண்டுவது எத்தனை அவசியம்? நமது பெரியாரும், ஞானிகளும், கவிகளும் இந்த ஆராய்ச்சி அறிவையே சிறந்த அறிவாகக் கூறி, "எல்லாவற்றையும் ஆராய்ந்து நலமான தைப் பிடித்துக்கோள்ளுங்கள்" என்று மானிடராகிய நம் எல் லோரையும் வற்புறுத்தி எச்சரிக்கின்றனர்.

"ஆய்ந்து ஓய்ந்து பாராதான் தான் சாகக்கடவன்" என்ருர் நமது திருவள்ளுவர் "ஆராய்ந்து அமைவுடையனவற்றைக் கற் பவே" என்ருர் நமது சைனப்புலவரும், மின்னுகிறதெல்லாம் பொன்னல்ல" என்பர் உலகப் பெரியார். உலகத்திலே செல்லுகிற பணமும் உண்டு செல்லாத பணமும் உண்டல்லவா? நாம் அதைத் தட்டிப் பார்த்து தானே எடுக்கிருேம். உலகில் இயற்கைப்பொரு ளும் உண்டு; செயற்கைப்பொருளும் உண்டு.

நமது நாட்டிலும் தமிழ் வேதங்களும், ஆரிய வேதங்களும் உண்டு. அவற்றில் ஆன்ம காரியங்கள் மாத்திரமல்ல, சூரியனுக்குக் கீழே மனிதனுல் கண்டுபிடிக்கப்படும் சகல அறிவையும் சேர்ந்ததும், பொருந்தாததும், முரண்பாடானதுமான ஏராளமான விஷயங்கள் பேசப்படுகின்றன. இவைகளிலிருந்து ஆத்துமாவை மறுமையில் நித்திய இன்ப வீட்டிற்கு நடத்தக்கூடிய விஷயங்களைத் திரட்டி எடுப்பது கல்லில் நார் உரிப்பதற்குச் சரி. அவற்றை அறிய ஒருவன் தன் ஆயுள் எல்லாம் போக்கினுலும் முடிவில் அடையும் பலன் மிகச் சொற்பமே. வேண்டுவோர் இந்த நூல்களை ஆராய்ந்து நமது கூற் றின் உண்மைகளைத் தெரிந்துகொள்ளலாம்.

நாம் அவைகளில் காணப்படும் உண்மைத்தாழ்ச்சியைப்பற்றி, அதிகமாகப் பேசுவானேன்? அந்த மதத்திலே இருந்து, அந்த வேதங்

களை எல்லாம் நன்றாகக் கற்று, அவைகளைப்பற்றிக் கவிபாடும் திறமை பெற்ற சைவரையும் வைஷ்ணவரையுமே அவரது வேதத்தின் உண்மைகளைப்பற்றிக் கேளுங்கள். அவைகளைப் படித்து தமது முடிவை அபிப்பிராயத்தைக்கூறும் தாயுமானவர், அவற்றைப்பற்றி, "சரியை, கிரியை, யோகம், ஞானம் விடுத்ததெல்லாம் சன்மார்க்கமல்ல" என்றார். பட்டினத்தார்போன்ற பெரியார் அவைகளைப் படித்து, அவை, "மெத்த விகாரம் அளிக்கும் தத்துவங்கள்" என்கிறார். "நான்கு வேதங்களையும், ஆறு சாஸ்திரங்களையும், சப்த கோடி மகா மந்திரங்களையும், யந்திரங்களையும் தெரிந்ததினாலே பிரம்ம ஞானம் என்னும் சுகம் உண்டாகமாட்டா" என்றார். "ஜீவ ஐக்கியப் பிரம்மரகசிய" நூலாசிரியர். "நாம் நாமும் பார்த்தும் கேட்டும் லக்ஷியம் வைத்தும் இருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லக்ஷியம் வைக்கவேண்டாம். ஏனென்றால் அவைகளில் ஒன்றிலாவது தெய்வத்தை இன்ன படி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும் கொஞ்சமேனும் சொல்லாமல் மண்ணைப்போட்டு மறைத்துவிட்டார்கள்...மகனே, நீ நூலனைத்தும் சாலமென அறிக. இதுபோல் சைவம் வைஷ்ணவம் முதலியவற்றில் லக்ஷியம் வைக்கவேண்டாம். நான் முதலில் சைவ சமயத்தில் லக்ஷியம் வைத்துக்கொண்டிருந்தது இவ்வளவு என்று அளவு சொல்லமுடியாது. அது இப்போது போய்விட்டது" என்பது மனிதருக்கு இராமலிங்க சுவாமிகள் கொடுக்கும் எச்சரிப்பு.

"நமது நாட்டிலும் பற்பல பெரியோர் தோன்றி பலவாறாகத் தெய்வத்தோற்றங்களையும், போர்களையும், எண்ணிறந்த சரிதங்களையும் மிக உறுதிப்படுமாறு நிறுவி, சமயத்தை வளர்க்கிறவர் போன்றும், உலகை ஈடேற்றுகிறவர்போன்றும், முத்தி வீட்டுக்கு அநேகரை அனுப்புகிறவர்போன்றும், ஞானத்தை நிறுத்திக் கொடுக்கிறவர்போன்றும் கற்பித்து—சாத்திரக் குப்பைகளைக் குவியச் செய்தனர். இவைகளை விரிக்கிற் பல்குத்தி முகர்ந்து பார்ப்பது ஒக்கும் என விடுத்தோம்" என்கிறார் காசிவாசி-சிவானந்த யதீஸ்வரர்.

கிறிஸ்துவின் வேதத்தின் தூய, தெய்வீக, ஜீவனைக்கொடுக்கும் தன்மையைப் பற்றியோ மித்திரரும் சத்துருக்களும் ஏகோபித்து சாட்சியிடுவர். இலக்கிய நிபுணரும் நாஸ்தீகருமாயிருந்து பின் கிறிஸ்துவினால் மெய்த்தேவ அறிவைப்பெற்ற றெனன், வீராதிவீர

ஞன நெப்போலியன், மருத்துவ மேதாவியான சிம்சன், வான சாஸ்திரம், கணிதசாஸ்திரத்தில் உலகப் புகழ்பெற்ற நியூட்டன், ககள சாஸ்திரியான டீன்பக்லந்து, ஹியூக்மில்லர், டாக்டர் ஸ்மித், சர் ஜான் தாசன், ரசாயன சாஸ்திரியான பராடே, மின்சார மகிமை கண்ட சர் ஹம்ரே டேவி, புகைவண்டிக்கு ஆதிகாரணரான ஜார்ஜ் ஸ்டீவன்சன் ஆகிய எண்ணுக்கடங்காத சாஸ்திரவல்லார் யாவரும் இவ்வேத உண்மையின் மகத்துவத்தை யுரைப்பர்.

இராஜ தந்திரியரான கிளாட்ஸ்டன் போன்ருரும், ஆல்பிரட், எலிசபேத், விக்டோரியா முதலிய அரசர், சக்கரவர்த்திகளும்; ஆபிரகாம் லிங்கன், வில்பவோர்ஸ், பிரைட், பிளாரன்ஸ் நைட் டிங்கேல் முதலிய சீரிய தேசத் தொண்டரும்; மேரி ஸ்லேசர், லூத்தர், ஜான் நாக்ஸ், வெஸ்லி முதலிய வைதிகக்கரை கண்ட பக்தர் யாவரும் இப்புத்தகத்திலுள்ள தெய்வீகத்திற்கும், ஜீவனுக்கும் சாட்சிகளானவர்.

இனி, இச்சத்திய வேதமாகிய நித்திய திரு வழிகாட்டி மரணத்தைப்பற்றிப் போதிப்பது என்ன? வேதத்தின் முதற்பகுதியாகிய ஆதியாகமத்தின் முதல் மூன்று அதிகாரங்களில் அப்போதனையை வாசித்துச் சிந்திக்க நேயர்களை ஏவுகிருேம். அவற்றின் சாரம் சுருக்கமாகப் பின்வருமாறு: தேவனுகிய பிதா, மனுபுத்திரனைப் பூமியில் பிறப்பிக்குமுன் அவனுடைய இன்பத்துக்கான எல்லாப் பொருள்களையும் நல்ல இருப்பிடத்தையும் முதலில் ஆயத்தம் செய்தார். பின்பு மனிதனைப் பூமியின் மண்ணைக்கொண்டு தம்முடைய சாயலாகச் சிருஷ்டித்தார். ஜீவசுவாசத்தை அவன் நாசியில் ஊதினர். அவன் ஜீவாத்துமாவானன். "மனிதன் தனித்திருப்பது நல்லதல்ல என்று கண்டு ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்கினர்." பூமி முழுவதின்மேலும் அவனுக்கு ஆளுகை தந்தார்.

அவனுடைய இருப்பிடத்தின் "நடுவில் ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும்...முளைக்கப்பண்ணினர்." ஆதி. 1 27—51....

"நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம், நீ அதைப் புசிக்கும்நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்." ஆதி. 2 : 8—17.

ஆனுலும் மனிதன்மேல் தாம் வைத்த அன்பினுலும், அபிமானத்தினுலும், நன்மை தீமையைப் பகுத்தறிந்து, தீமையை நீக்கி

நன்மையைப்பற்றி நடக்கும் பூரண சுயாதீனத்தை அவர் மனித னுக்கே விட்டுவிட்டார்.

நெடுங்காலம் மனிதனைத் தம் புத்திரனாகவும், தோழனாகவும் பாவித்து அவனோடு சஞ்சரித்து உலாவி வந்தார். ஒருநாள் அவன் தன் சுயாதீனத்தையும், நன்மை தீமையை வகையறுக்கும் பகுத்தறிவையும், எங்ஙனம் உபயோகிக்கிறான் என்று சோதிக்க அவனைத் தனியே விட்டுப் பிரிந்தார். அத்தருணம் சர்ப்பவேடம் பூண்ட பூதத்தலைவனாகிய தீயோன் மனிதனையணுகித், தன் நயவசனிப்பினால் அவனை ஏமாற்றிக் கடவுளின் கட்டளையை மீறினால் "நீங்கள் சாவதில்லை" என்று போதித்தான். வேஷதாரிச் சத்துருவின் வலையில் மனிதன் சிக்குண்டான். பார்த்தான், இச்சித்தான், தொட்டான், புசித்தான், நிருவாணியானான், நெஞ்சம் படபடத்து வெட்கத்தினாலும் துக்கத்தினாலும் நிறைந்தான். தன் பாவத்தின் சம்பளமாகிய மரண சாபத்துக்குள்ளானான். இதுவே வேதம் போதிப்பது. இச்சரிதையிலிருந்து அறியக்கிடப்பது யாது? மனித இன்பத்துக்காகக் கடவுள்கொண்ட பல ஏதுக்களிலும் மரணம் ஒரு கூறல்ல; மரணம் இடையிலே தோன்றிய சத்துருவின் வலை. மரணத்துக்குக் காரணன் மரயோனாகிய சாத்தான் என்பதே.

இந்த வேதபோதனையை யாவரேனும் மறுக்கக்கூடுமோ? கூடாது. ஏனெனில் மரணத்தைப்பற்றிய இந்த வேத சத்தியங்கள் நமது சொந்த அனுபவத்திற்கு முற்றிலும் ஒத்து இருக்கின்றது. எப்படி?

"உறங்குவதுபோலும் சாக்காடு" என்று நமது தமிழ்ப் பெரியார் கூறியபடியே, கிறிஸ்து மகிபன் பிறப்பதற்கு நாலாயிரம் ஆண்டுகளுக்குமுன்னரே நம் பழைய ஏற்பாட்டு பக்தர், மரணத்தை "நித்திரை" என்றே கொண்டனர். "என் பிதாக்களோடே நான் படுத்துக்கொள்ளவேண்டும்" என்று யாக்கோபு தனக்கு மரணம் கிட்டியதை உணர்ந்து கூறினான். இஸ்ரவேலின் ஒவ்வொரு இராஜாவும் "தன் பிதாக்களோடே நித்திரையடைந்தான்" என்று வேதமும் முழங்குகிறது. "நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியே போகிறேன்" என்று தாவீது தான் மரணமடையுங் காலம் சமீபித்தபோது சொன்னான். அவனும் "தன் பிதாக்களோடே நித்திரை யடைந்தான்." கீழ் தோத்தார் எல்லோரும் மரணத்தை நித்திரைக்கு ஒப்பாக நினைத்தது கவனிக்கத்தக்கது.

ஆயினும் சாதாரண நித்திரை மனிதனுக்கு இன்பம் அளிக்கின்றது. பகலின் கொடுமையும் வேலையின் தொல்லையும் ஒழிந்து உழைப்பினால் சோர்வுற்ற தன் தேகம் புதுப்பெலன் அடைவது, இரவில் நித்திரையினால் வரும் இளைப்பாறுதலினாலேதான். ஆகையால் மனிதன் ஒவ்வொருவனும் பகல் சென்று இரவுவர ஆவலுடன் காத்திருக்கின்றான். ஆனால் நித்திரைபோன்ற மரணத்திற்கு அவன் அவ்விதமாக ஆர்வத்துடன் காத்திருக்கக்காணோம். உலகில் பெரும்பாலாருக்கு மரணத்தினால் உண்டாகிற பயம் பலமாயிருக்கின்றது. இவ்வுண்மையை உலகின் மதசரித்திரத்தை வாசிப்போர் நன்கு உணரலாம். "காலன் பயம் தீர" என்றார் நம் தாயுமானவர். "நமன் தமர் செய்யும் வேதனைக்கு ஒடுங்கி நடுங்கினேன்." என்றார் ஆழ்வார். "யாமும் இமையவர் தாமும் மரணம் உண்டு என்று பயப்பட்டிட இராதோறும் எரியும் சுடுகாடு" என்றார் தக்கயாகப் பரணியார். "சலச்சலம் இழுக்குடைய தருமனார் தமர் என்னைக் கலக்கு வான் வந்தாலும் கடுந்துயர் வாராமே விலக்குவார்" என்றார் சுந்தரரும். இவ்வாறாக நமது மக்கள் மாத்திரமல்ல, உலகின் எப்பக்கத்திலுமுள்ளோர் யாவரும் சாவைக்கிட்ட அஞ்சுகின்றனர் என்பது உண்மை. கிரேக்க ஞானியாகிய எப்பிகூரஸ் என்பவன் தன் ஜனங்களைப் பார்த்து, "மனிதர்காள், பயமில்லாமல் இவ்வுலகில் உயிர் வாழுங்கள். இவ்வுலகத்தில் மனிதன் பயப்படும்படியான பற்பல காரியங்களுண்டு. அவைகள் எல்லாவற்றையும் பார்க்கிலும் மரணமே மிகக்கொடியது," என்றான். உலக இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவின் மரணத்துக்குக் காரணத்தைக் கூறுமிடத்து பரிசுத்த பவுலும், "ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்கு உள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படி" எபி. 2: 15 என்று உரைக்கிறார்.

இதுவரையில் நாம் பார்த்துக்கொண்டுவந்த உண்மைகளிலிருந்து மரணம் என்பது என்னவென்று சிறிது தெரிகிறதல்லவா? மரணம் மனிதருக்கு அச்சத்தை விளைவிக்கின்றது. மரணம் சோகத்தையும் அழுகையையும் பிறப்பிக்கின்றது. மரணத்தை விரும்பினவரும், அதை வருந்தி அழைப்பவரும் இடையாது. அதற்கு மாறாக சாவித்திரி சத்தியவான்போல் மரணத்திலிருந்து விடுபடுவதையே மானிடர் எல்லோரும் விரும்புகின்றனர். அன்றியும் நமது திருமூலர் போல,

"இரவு பகல் மாயும் மனிதரை மாயாதுவைக்க
மருந்து இல்லையோ !"

என்று பல பெரியாரும் அங்கலாய்க்கின்றனர்.

ஆகவே மரணம் மனிதனுக்கு வரக்கூடியதல்ல. அது மனுக்குல நித்திய இன்பத்திற்கு முற்றும் பொருந்தாத ஒரு சம்பவம். இந்த நமது அனுபவ உணர்ச்சிக்கு எற்றதுபோலவே சத்தியவேதமும் நமக்கு மரணத்தைப்பற்றிச் சொல்லும் போதனையின் தாற்பரியத்தைத் திரும்ப ஞாபகப்படுத்திக்கொள்ளுவோம் :—

உலகின் முக்கியமான வேதங்களிலெல்லாம், மனித ஆன்மநிலை அனுதிகாலத்தில் மிகவும் தூய்மையாக இருந்ததாகவும், இடைக்காலத்தில் ஆன்மசத்துருவான சாத்தானுகிய ஆதி வலுசர்ப்பத்தினுலேயே மனிதன் தன் பழைய நிலையிலிருந்து விழுந்தான் என்றும், இந்த கீழ்ப்படியாத ஆதி தூதனுகிய சாத்தானுல்தான் மரணமும் மனிதனுக்கு வந்தது என்றும் குறிப்பாகவோ தெளிவாகவோ கூறுகின்றன.

"தோல் நிலைநாம் உறச் சூரன் பாடுற" என்று நமது தமிழ்ப் பெரியார் குமாரக்கடவுளின் அவதாரத்தின் நோக்கத்தைக் குறித்தார். கடவுள் மரணத்தை ஜெயமாக விழுங்கி முடிவில் வெற்றி சிறப்பார். ஆயினும் மரணத்துக்குக் காரணர் அவரல்ல; கொடியோனை வேறொருவன் என்பது எம்மதத்திற்கும் சம்மதமே. எப்படியெனில் ஜர்மானியரின் புராணங்களில் மரணத்திற்குத் தலைவன் நிட்கூறக் என்ற கொடிய சர்ப்பமும், அதற்குத் துணை நிற்கும் கோர உருவக் குழுவினருமாகக் கூறப்படுகின்றது. சில விடங்களில் அச்சத்துருவை லோக்கி (Loki) என்ற பூதத்தலைவனுகவும் கூறுவர். வேறு சிலவற்றில் அச்சத்துரு சற்ட் என்ற அழல் பூதம் என்று சொல்லப்பட்டிருகின்றது. கிரேக்கர் புராணத்தில் தியரசியஸ் என்ற பூதம் கீழ் உலகிற்கு அதிபதி என்று கூறப்பட்டிருக்கின்றது. நமது தமிழ்ப் பெரியார், மரணத்துக்கு நாயனை "யமன்" என்றும், "கூற்றம்" என்றும், "காளிங்கன்" என்ற சர்ப்பம் என்றும் கூறுவர்.

"மாயப்பொருபடை வாணன்"

"பையுடை நாகப் பகை"

"வன்புற்ற அரவின் பகை"

"சாலக் கொடுமைகள் செய் நமன்."

என்பது தமிழர் கூற்று. "மரணத்துக்கு அதிபதியான சாத்தான்" என்று நமது சத்திய வேதமும் இந்த உண்மையினை உறுதிப்படுத்தி முத்திரையிடுகின்றது.

ஆகவே மரணம் நமது சைவ சமய குரவர் நினைத்ததுபோல் அனுதிகாலமுதல் மனிதனுக்கு 'விதியினுல்' உண்டானதன்று, தன் அன்புள்ள தந்தையின் சித்தத்தை அறிந்து நடக்காமல் தீயோனுகிய பூதத்தலைவனுடைய தீய இச்சைக்கு மனிதன் சார்ந்ததனுல் வந்தது.

---

## 2. மனித சுயாதீனம்.

விக்கிரக வணக்கனுன நேபுகாத்நேச்சார் கனவில் கண்ட உலக சரித்திரக் காட்சியில் தோன்றிய சிலையின் இரகசியம் மேற்கூறிய உண்மையை நன்கு புலப்படுத்தும். சிலையின் சிரசு பசும் பொன்னுக வும், மார்பு வெள்ளியாகவும், இடை இரும்பாகவும், கால் மண்கலப் புள்ள இரும்பாகவும் இருந்தது. தானி. 2 : 31—33. நம் பாரத நாட்டில் வழங்கும் கிருதா திரேதா, துவாபரா கலியுகங்களின் சரித் திரமும் இச்சத்தியத்தையே விளக்குகின்றது.

குழந்தைகளின் போதனுமுறைக்கு அஸ்திபாரம்போட்ட ரூசோ, பெஸ்டாலஜி, ப்ரோபல் முதலிய கலைஞானிகளும், "குழந்தை பிறக்கும்போது பாவத்தோடு சம்மந்தப்படுவதில்லை. நன்மை தீமை யறியும் பிராயம் வரும்போதுதான் பலமுறையும் திகைத்துத் தீமை யைச் செய்கின்றது." என்று ஆராய்ந்து துணிந்திருக்கின்றனர்.

இயற்கைக் கவியாகிய வர்ட்ஸ்வர்த் என்பவர்போன்ற பெருந் தகையார், "பாலகரைச் சூழ்ந்து பரன் மகிமை ஜொலிக்கின்றது" என்று பாடுகின்ருர். தென்னட் என்ற மனநூல் வல்லாரும், "நன்மை தீமையறியும் நிலையில்தான் பாலகர் பாவத்தால் கறைப் படுகின்றனர்" என்று கூறுகின்றனர். இயற்கையிலுங்கூட தோன் றும்போது தளிர், மிருகத்தின் குட்டிகள், மானிடக்குழவிகள் முதலியன வெகு அழகாகக் காணப்பட்டு மனதை வசீகரிக்கின்றன. வளர வளர அழகுகெட்டு மாசுற்றுத் தோன்றுகின்றன.

இப்போது பார்த்த உதாரணங்களினின்று அறியக்கிடப்பது என்ன? பலர் நினைக்கிறபடி தீமை செய்யும் சக்தியைக் கடவுள் மனிதனுக்குள் உண்டாக்கவில்லை. தீமையினின்றும் நன்மையை வகையறுக்கும் பகுத்தறிவையே அவர் மனிதனுக்குள் அமைத்தார்.

என்று தெரிகிறது. வேதமும் அதைத்தான் கூறுகிறது. 'மனிதன் பாவம் செய்யாதபடி ஏன் கடவுள் தடுக்கக்கூடாது' என்று சிலர் கோண வழக்குப் பேசுவார். மனிதனை உயிரும், உணர்வுமற்ற ஓர் யந்திரம்போல் இருக்கக் கடவுள் படைத்திருந்தால், அப்படி அவனைத் தடுப்பார். ஆனால் அவர், மனிதன், நன்மை தீமை அறியும் பகுத்தறிவில் தேறி, நன்மையைக் கடைப்பிடித்து ஒழுகுவதால் ஜீவனில் வளர்ந்து, தம்மைப்போல் தெய்வீகத்தில் பூரணப்பட வேண்டும் என்றல்லவோ சித்தங்கொண்டார். அப்படியிருக்கும் போது மனிதனுக்குள் சிறப்பாக விளங்கும் சுயாதீனத்தை எப்படி அவர் பங்கப்படுத்துவார்?

நன்மையைத் தீமையிலிருந்து பிரிக்கும் இந்த பகுத்தறிவை மிகவும் விசேஷித்ததாக நமது பெரியார் கொண்டாடியிருக்கின்றனர். "மாவும் மாக்களும் ஐயறிவினவே மக்கள்தாமே ஆற்றிவினரே" என்றார் நமது இலக்கண நூலார். இந்த விசேஷித்த அறிவுதான் மனிதனை மிருகங்களிலிருந்தும் வேறுபடுத்திப் பிரித்து, 'அரிது அரிது மானிடராதல் அரிது' என்று உலகம் அதிசயிக்கும்படி செய்கிறது. தேவன் தம்முடைய சாயலாக மனிதனை உண்டாக்கினார் என்று வேதம் கூறுவதன் விசேஷமும் இந்தப் பகுத்தறிவாகிய தெய்வீக அறிவுபற்றியே.

தேவனுக்கு அசுத்தம் இன்னதென்றும், பரிசுத்தம் இன்னதென்றும் தெரியும். ஆனால் அவர் அசுத்தத்தில் பிரியப்படாமல் பரிசுத்தத்திலேயே பிரியப்படுகிறார். அப்படியே சத்தியம் அசத்தியம் இரண்டிலும் சத்தியத்தையே தமது அஸ்திபாரமாகக்கொண்டிருக்கிறார். இந்தத் தெய்வீக சக்தியைத்தான் தமது சாயலான மனிதனுக்குள்ளும் மாறாத நியாயப்பிரமாணமாகவும், நித்திய கற்பனையாகவும் அமைத்தார். தம்மைப்போல் மனிதன் ஸ்வாதீனனாக இருக்கவேண்டும் என்று விரும்பினார். ஆகவே சத்தியத்தினின்றும் அச்சத்தியத்தைப் பிரித்து, சத்தியத்தையே கொண்டொழுகும் சுயாதீனத்தை அவனுக்கே விட்டுவிட்டார்.

சகோதரரே! மனித சுயாதீனம் எத்தனை அருமையானது என்பது நம் எல்லாருக்கும் தெரியும். மனிதன் மாத்திரமல்ல, மிருகங்கள், பறவைகள் முதலிய பகுத்தறிவில்லாத பிராணிகள்கூட, தங்களுடைய சுயேச்சை மனிதனால் தடைப்படும்போது எத்தனை கோபமும், ஆத்திரமும், அமைதியின்மையும் அடைகின்றன. இப்போதும் நம் நாட்டில் எங்கே பார்த்தாலும் அன்னிய ஆட்சியினின்றும்

தம்மைப் பிரித்துத் தாமே சுயாதீனமாக சுயராஜ்ஜியம் பெறவேண்டும் என்று பலர் உழைக்கின்றனரே. எல்லா வகையிலும் மனிதரைப் பலவிதமான அடிமைத்தனத்திலிருந்து மீட்டு ரட்சித்து வரும் கிறிஸ்திறைவனின் பெயரைத் தரித்திருந்தும் நமது ஆங்கில ஆளுகை எத்தனையோ வகையில் தன்னயத்தால் சூழப்பட்டிருக்கிறது. இவ்வாறு பிறருடைய சுயாதீனத்தைக் குறைக்க நேர்ந்த காலங்களில் எல்லாம் அவர்களுக்குக் கர்த்தரால் உண்டான தண்டனை கவனிக்கத்தக்கது. மனிதனுக்கு மிக அருமையாய்ப் பரம பிதாவினால் அளிக்கப்பட்டது இந்தச் சுயாதீனம். இதுதான் பாவத்தின் இரகசியம். தமது பிள்ளை பாவத்தில் விழுந்து கெட்டழியவேண்டும் என்றல்ல, பகுத்தறிவில் பூரணப்பட்டு, மாமிச பஞ்சேந்திரியங்களை நன்மையே செய்யப் பழக்கவும், ஞானேந்திரியங்களை ஆவியின் வளர்ச்சியில் பழக்கித் தம் மகிமைக்கொப்பாக மனிதன் மறுரூபமாக்கப்படவுமே, தேவன் ஜீவ விருட்சத்தையும் மரண விருட்சத்தையும் அருகருகே அமைத்திருக்கிறார். இதுவே நமது இருதயத்தில் எழும் ஆவியின் பிரமாணமும் மனதின் பிரமாணமுமாகும். ஆவியின் பிரமாணமே நல் மனசாட்சி. ரோ. 7 : 22-24.

தீமையானதை நாம் செய்ய ஏவப்படுந்தோறும் பகுத்தறிவைக் கொண்டு நம்மை அதினின்றும் விலக்கி நன்மைசெய்யத் தூண்டுவது அதுவே. இந்த ஆவியின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்தால் பாவத்தில் விழவேண்டியது இல்லை. அதனால்தான் வேதமும்,

> "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான்" யாக். 1 : 12.

என்று கூறுகிறது. இப்படிச்செய்யாமல் மனிதன் தன் சுய இச்சைக்குக் கீழ்ப்படிந்து, அதனால் பாவத்தில் சிக்கி, ஆன்ம மரணத்தை அடைந்தால் யார் அதற்குப் பொறுப்பாளி? கடவுளல்ல, மனிதனே. இதைத்தான் வெகு அழகாக நமது பட்டினத்தடிகள்,

> "நின்னது குற்றம் உளதோ? நின்னை நினைந்து
> எண்ணருங்கோடி இடர்ப்பகை கடந்து
> கண்ணுறு சீற்றத்துக் காலனை வதைத்து
> இறப்பையும் பிறப்பையும் இகழ்ந்து சிறப்போடு
> தேவர் ஆவின் கன்றெனத் திரியாத
> பாவிகள் தமதே பாவம்"—என்று பாடினர்.

ஆகவே தீமைக்கும், பாவத்துக்கும் விலக்கமாகத் தன் முகத்தைத் திருப்பித் தன் அன்புள்ள பிதாவின் சித்தப்படியே செய்ய மனிதன் தன்னைச் சுயமாக ஒப்புக்கொடுத்தால்தான் கடவுள் மனிதனுக்கு என்த் தாம் கொண்ட அநாதி தீர்மானத்தை நிறைவேற்றக்கூடும். அவன் இஷ்டத்திற்கு மாறாக அவனை அவர் வற்புறுத்தி அவனுடைய சுயாதீனத்தைக் கெடார் என்பது சத்திய வசனம் கூறும் உறுதி.

"என் செயல் எனதே ; அதை உன் செயலாக
வன் செயலேன் படைத்தேன் ; புன்செய்வினை நீக்கி
உன் பொற்கழல் சேர்ப்பாய் அற்புச்சாகரமே"

என்று ஆங்கில பக்தன் கூறுகின்றது, நாம் யாவரும் கைக்கொள்ளத் தக்க சீரிய செயலாகும்.

"எனக்கெனச் செயல் (வேண்டேன்) யாவும் இங்கு
ஒரு நின் தனக்கே தரும் ; உடல் பொருள் ஆவியும்
தந்தேன் ; மனத்தகத்துள் அழுக்கெலாம் மாற்றி
யெம்பிரான் நீ நினைத்ததெப்படி அப்படி அருளுதல் நீதம்"

என்று பணியும் தாயுமானவர் கூற்றையும் கவனிக்க.

இந்த அறிவை யுடையவனாய் மனிதன் ஜீவிப்பானானால் அவன் செத்தாலும் நித்திய ஜீவனுக்கென்று உயிர்த்தான் ; இன்றேல் செத்தான் என்றறிக.

நண்பனே! இந்தச் சுயாதீனப் பிரமாணத்திற்கு முன் வைத்து உன்னை ஆராய்ந்து பார். அந்தோ பகுத்தறிவு சிறிதும் இல்லாத ஊரும் பிராணிகள்கூடத் தமது உணர்ச்சியறியும் கருவிகளால் (Feelers) தங்களுடைய உயிருக்கு இதமானது எது, அகிதமானது எது ,என்று சோதித்து அறிகின்றன. நன்மை தரக்கூடியதைப் பற்றிக்கொண்டு வாழ்கின்றன. அப்படியிருக்கும்போது அரிய மானிடப் பிறவிகளான நாம் தூய்மையானது எது, சத்தியம் எது, மறுமையில் இன்பத்திற்கு வழி நடத்தக்கூடியது எது என்பதை ஆராய்ந்து தேராவிட்டால் எத்தனை பரிதாபம்!

"தன்னால்தான் ஆகும் மறுமை" என்று நமது சைனப்புலவர் கூறுகின்றார். ஆகையால் பலவித எச்சரிப்புகளையும், கண்டிதங்களையும், நமக்கு விருப்பமில்லாதபடி கிறிஸ்து கூறினாலும் அவருடைய

வார்த்தையில்தான் நித்திய இன்பம் இருக்கிறது என்பதை உணர்வோமாக. வெங்காரம் வெம்மையை உடையதானாலும் நோயைத் தீர்க்கும்; சிங்கி மிகக் குளிர்ந்ததானாலும் உயிரை மடிக்கும். ஆகவே கிறிஸ்து மறுமைக்காக வைக்கும் வழி இம்மையில் மிக நெருக்கமானதும், இடுக்கமானதும், துன்பமும், பாடும், மரணமும் நிறைந்ததுமாயிருந்தாலும் மறுமையில் நிச்சயமாகவே பிதாவின் இன்பவீட்டுக்கு நம்மை நடத்தும் என்பது சத்தியம்.

"நான் உங்களுக்குச் சொல்லும் வசனம் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது." யோவா. 6 : 3—36.

---

# III. மறுமைத் தாற்பரியம்.

## 1. சர்வலோக வாஞ்சை.

உலகிலுள்ள எல்லா வேத சத்தியங்களையும் ஒன்று திரட்டி, அவற்றிலிருந்து எல்லாருக்கும் சர்வ சம்மதமான பொதுக்கொள்கைகளை மாத்திரம் பிரித்தெடுத்தால் பின் வரும் உண்மைகளைக் காணலாம்:—எல்லா மனிதரும் பாவிகள். பாவத்தின் சம்பளம் மரணம். இம்மரணத்திலிருந்து மனிதன் தன் சுய பிரயாசையால் தப்ப முடியாது. கடவுளின் அருளே பாவக்கட்டிலிருந்தும் மரணத்திலிருந்தும் மனிதனை மீட்டு முத்தி வீடு சேர்க்கவேண்டும். இப்படிச் செய்வதற்கு சத்தியபரரான கடவுளானவர் அருள் உருவான தமது திருக்குமாரக் கடவுளை உலகில் அனுப்பவேண்டும். இக்குமாரக் கடவுளானவரே பரிசுத்தமுள்ள தந்தைக்கும் பாவியாகிய மனிதனுக்கும் இடையில் மத்தியஸ்தனாயிருந்து இருவரையும் ஒப்புரவாக்கல் வேண்டும். இது மாத்திரமன்றி, இவரே மனிதனுக்கு அவனுடைய ஆதி மேன்மையையும், மறுமை சத்தியங்களையும் ஐயம் திரிபு இன்றித் தெளிவாகப் போதிக்கும் ஞானசிரியனாகவும் இருக்க வேண்டும். இவரே பாவத்தைப் போக்கும் பரிசுத்த பலியாகித் தன்னுயிரை ஈந்து மன்னுயிரைக் கரைசேர்த்துப் பிதாவின் வீடு சேர்க்கக் கடமைப்பட்டவர். இந்த வேத சத்தியங்கள் எம்மதத்தினராலும் சம்மதமாக அங்கீகரிக்கப்பட்டவை. உலகெங்கும் ஆதி காலம் முதல் காணப்படும் பலி முறைகளும் குரு முறைகளும் மேற்சொல்லப்பட்ட வேதக்கொள்கைகளை உறுதிப்படுத்துகின்றன.

மேற்கூறிய உலக இரட்சகரான குமாரக்கடவுளையல்லாமல் வேறு எவ்விதத்திலும் மானிடர் முத்திவீடடைய முடியாது என்பதை நம் பெரியார் திட்டமாய் நம்பினர். அதனால்தான் நமது சைவரும்,

“ஆசான் அருளால் முத்திசேர் ஞானம் வந்திடும் ;
மற்ற ஒன்றாலும் வாராது ”
“மெய் அருளாம் தாயுடன் சென்று பின் தந்தையைக்கூடி ”
“பந்தனையை அறுத்து அருள் பாலிக்கும் குருபரன் ”

என்று உறுதியாகப் பாடியிருக்கின்றனர். அதுமாத்திரமல்ல, இந்தச் சர்வலோகப் பாவ மீட்பரும், ஞானாசிரியரும் அருள் மார்க்க மெய்வழியுமான தேவ குமாரனை எதிர்ப்பார்த்தவண்ணமாக,

“எந்தையார் ... எவ்வகையார் கொல் ?”
“நாதன் ஒருதரம் உலகம் பார்க்க நண்ணானோ ?”

என்று ஆத்தும ஏக்கங்கொண்டு ஆவலுடன் காத்திருந்தனர்.

இவ்விதமாகப் பரம தந்தையின் திரு லட்சணங்களை உலகுக்கு வெளிப்படுத்திப் பாவிகளை அவரிடம் பரிவுடன் தூக்கிச்செல்லும் பரம குமாரனினது வேலையின் தன்மையைச் சிவஞான சித்தியார் பின்வரும் வரிகளில் நன்கு புலப்படுத்துகின்றார்.

“மன்னவன் மகன் வேடரிடத்தே தங்கி வளர்ந்து, அதனை அறியாது மயங்கி நிற்ப, பின் தந்தையும், என் மகன் நீ என்று பிரித்து, பெருமையோடு தானாக்கிப் பேணுமாப்போல, துன்னிய ஐம்புல வேடர் வலையில் பட்டு துணைவனையும் அறியாமல் துயர் உறும் உயிரை, மன்னும் அருள் குருவாகி......மலம் அகற்றித் தானாக்கி மலர் அடிக்கீழ் வைக்கும்.”

இந்தப்படி அகில உலக வேதங்களும் முழங்கிக்கொண்டிருந்து வரும், சகல மதப் பெரியாராலும் எதிர்ப்பார்க்கப்பட்டவருமான அருள் குரு யார்? சைவரைக்கேட்டால் அவர், எமது திருஞான சம்மந்தர், மாணிக்கவாசகர் ஆகிய சமய குரவரே அவர் என்பர்; வேறு சிலர் புத்தர் என்றும், மகமது என்றும் பலவாறாகக் கூறுவார். ஆயினும் நாம் எல்லோரும் அறிந்திருக்கிறபடி அவர்களெல்லோரும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டுப்போனார். இவர் உயிர்த்தெழுந்தார் என்றாவது, இன்றுவரையில் ஜீவாதிபதியாகிய கிறிஸ்துவைப் போல உயிரோடு இருந்துகொண்டு உலகில் அன்பின் திருப்பணியை நடத்துகின்றனர் என்றாவது, மானிடருடைய ஆத்தும ரட்சிப்பை

ஈடேற்றுகின்றனர் என்றாவது, யாராவது சொல்லக்கூடுமா? கூடாது. ஒருபோதும் கூடாது. இப்படியாகத் தாமே சாவை வென்று சாவாமையைத் தரித்துக்கொள்ளக்கூடாத, பாவிகளும் பலவீனருமான சமய குரவர் மனுக்குலத்தை எப்படி ரட்சிப்பார்? மனிதரை எப்படி சாவுக்கு விலக்கிக்காப்பார்? மறுமையில் எப்படி மோட்ச வீடு சேர்ப்பார்? அது ஒருபோதும் முடியாது.

ஆதலால் உலகமானது வேத உபதேசங்களால் பக்குவ நிலையை அடைந்திருந்தபோது, இரட்சிப்பின் மார்க்கமாகிய தெய்வீக அருள் மார்க்கத்தைக் காட்டும்படி, பிதாவினால் அனுப்பப்பட்ட கிறிஸ்துவாகிய திரு ஞானசிரியரே மெய்த்தேவ குமாரக் கடவுளாவார். இவரே சாவின் கூரை ஒடித்தவர். இவரே பாதாளத்தின்மேலும், மரணத்தின்மேலும் வெற்றிகொண்டெழுந்த ஜெயவீரர். இவரே மரித்தோருக்கும் உயிருள்ளோருக்கும் நித்திய நியாயாதிபதி. இவரே மறுமையின் கர்த்தர். ஆதலால் மரணத்துக்குப்பின் மறுமையில் நித்திய ஜீவனைப்பெற விரும்புகிற யாவரும் இவரையே வந்து அண்ட வேண்டும்.

இதுமட்டுமா? இல்லை, இல்லை. பாவமனிதரால் தாங்கமுடியாத மகாப் பரிசுத்த தேவ சக்தியின் உக்கிரகத்தை மனிதர் கண்டு, ருசித்து, அறியும் அளவில் தன்னிலே அடக்கி உலகுக்குக் காட்டக் கூடிய அந்தப் புண்ணிய புருஷன் எல்லாருக்கும் மிக எளியாராயிருக்கும்படி தாழ்மையில்தான் அவதரிப்பார் என்றும் உலகம் நம்பினது. இதற்கு,

> “இன்னருள் சக்தி குருவென வந்து (தீக்)
> குணம் பல நீக்கி (மோட்ச) சுகம் தரும்”

ஆகையால்,

> “அருபரத்து ஒருவன் அவனியில் வந்து குருபரனாகி
> அருளிய பெருமையைச் சிறுமை என்று இகழாதே”

என்று நமது சைவப்பெரியார் போன்றவர் கூறியிருக்கும் கவிகளே அத்தாட்சியாகும். இதைப் பாடிய சைவர், கிறிஸ்துவின் சரித்திரத்தை நன்றாய்ப் படித்து, வேதப்பொருளோடு ஒப்பிட்டு கிறிஸ்துவுக்கு அநேக நூற்றாண்டுகளுக்குப் பின் பாடினார்.

---

## 2. மறுமை வழி.

இப்படி எல்லாம் உலகின் மகாத்துமாக்கள் பாவ மீட்பருக்காக ஆவலுடன் பல்லாயிரம் ஆண்டுகளாக எதிர்ப்பார்த்திருந்தபோது தான், பிதாவோடு ஆதிமுதல் தமக்கு இருந்த விண்ணுலக மகிமையைத் துறந்து, மண்ணுலகில் மானிட உருவில் திரு. அவதாரமாகத் திருசித்தங்கொண்டார் கிறிஸ்து. பிதாவின் சித்தம் செய்ய,

"இதோ வருகிறேன். புத்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறதே" என்று முழங்கிக்கொண்டு இறங்கினர்.

இறங்கியும் என்ன? சர்வலோக மீட்பர் வருகிறார் வருகிறார் என்று யுகாயுகமாய் உலகின் ஞானியர் எதிர்ப்பார்த்திருந்த மெய்த் தேவ குமாரன் உலகுக்கு வந்தபோது அவரை உலகம் எப்படி ஏற்றுக்கொண்டது?

"மனித சரீரம் எடுத்த என்னை மூடர் புறக்கணிக்கின்றனர்" என்று பகவந்கீதையின் ஆசிரியர் கூறுவதுபோல், "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை." யோ. 1 : 11.

ஆயினும் என்ன? அவர் தமது ஒப்பற்ற திருப்போதனையாலும் சாதனையாலும் தாமே, உலகம் உண்டானது முதல் வேதம் முழங்கிக்கொண்டிருந்ததும், வேதியர் எதிர்ப்பார்த்திருந்ததுமான மெய்த்தேவ குமாரன் என்பதை தெளிவாய், ஒருவரும் அணுவளவேனும் மறுக்கக்கூடாதபடி ருசுப்படுத்தினர். மரணத்தின் வாயிலால் நித்திய ஜீவனுக்குள்போகும் ரட்சிப்பின் பாதையைத் திறந்து முடித்ததும், சிலுவையில் இருந்துகொண்டே "முடிந்தது" என்று மூவுலகைட்ம் சாட்சியாக வைத்துக்கொண்டு ஜெயதொனி முழங்கி, ஜீவாதிபதியாய் உயிர்த்தார்.

இவர் இப்படி பரிசுத்தராகிய பிதாவுக்கும், பாவிகளாகிய மானிடருக்கும் இடையிலே இருந்த பெரிய தடுப்புச்சுவரைத் தகர்த்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு நாம் பயமின்றி போகும்படியான ஜீவவழியைத் திறந்தது உண்மையே என்று கண்ட எண்ணுக்கடங்காதபேர் இவரைப்பற்றி இந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக ஓயாமல் சாட்சி பகருகின்றதை நாம் அறிவோம்.

வர்னலோகம் பூலோகம் பாதாளம் ஆகிய மூவுலகின் வாசிகளும் அவர் மானிட உருவில் இருந்தபோது, அவர், கடவுளையும்,

உயிரையும், மறுமையையும் பற்றிக்கூறிய சாட்சிகள் யாவும் மெய்யே எனச் சான்று பகர்ந்தனர். அவருடைய சிநேகிதர், பகைவர், ஆடவர், பெண்டிர், பிள்ளைகள், ஞானிகள், அறிவிற் குறைந்த பாமரர் யாவரும், அவர் மெய்யாகவே உலகை ரட்சித்துப் பிரகாசிப்பிக்கிற தேவகுமாரனாகிய ஞானாசிரியனே என்பதை மிகத் தெளிவாகக் கண்டு உறுதிப்படுத்தினர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இன்னோர் பலரும் அவரைக் குறித்துக் கொடுத்த சாட்சி சத்தியமானதே யென இப்போதிருக்கும் சகல தேசத்தாரும், பாஷைக்காரரும், நண்பரும், பகைவரும், சிறியோரும், பெரியோருமான நாம் யாவரும் சிறிதும் ஐயமின்றிக் கூறுவோம்

மரத்தின் தன்மையை அதன் கனிகளால் அறிவீர்கள் என்று கிறிஸ்துதாமே கூறி, என் சொல்லின் நிமித்தம் என்னை நம்பா விட்டாலும், என் கிரியைகளின் நிமித்தமாவது என்னை நம்புங்கள் என்று ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் தம்முடைய ஜனங்களைப்பார்த்துக் கூறினார். அப்படியே இந்த இருபது நூற்றாண்டுகளாக உலகின் எல்லாப்பாகங்களிலும் நடைபெறும் அன்பின் பணியும், ஆன்ம ஈடேற்றமும், "இவரே பூலோக மீட்பர்" என்று சாட்சி பகர்ந்துகொண்டு வருகின்றன.

"ஊண் உறக்கம், இன்பதுன்பம், பேர் ஊர், ஆதி ஒவ்விடவும் என்னைப்போல உருவங்காட்டி !"—தாயுமானார்.
"தன்னைத் தந்து என்னைத் தடுத்து ஆண்டநின் கருணைக்கு என் செய்வேன் !"—தாயுமானார்.
"உலகின்மேல் வரும்படியாக இறங்கின உன்திரு அருளின் தன்மையை என் சொல்வேன் !"—பட்டினத்தார்.

"தானாக வந்து என்னைத் தடுத்து ஆண்டு என்னை இன்பவானாகச் செய்த இன்பவானே !" என்று கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைச் சொல்லாமல் சொல்லுகின்ற சைவரைப்போல் எத்தனையோ எண்ணுக்கடங்காத இரகசிய சாட்சிகளும் எம்பெருமானாகிய கிறிஸ்துவுக்கு உண்டு என்பது சத்தியம்.

சாது சுந்தர்சிங்போன்ற பிறமதப் பெரியார் பலர் தமது மதப்பற்றின் குருட்டு வைராக்கியத்தால், முதலில் கிறிஸ்துவை அசட்டை பண்ணினாலும், வேத ஆராய்ச்சியால் அவரே வேதப் பொருளாகிய ஞானாசிரியன் என்று துணிந்தபின், தமது மதங்களைச்

"ஓ" என்று தள்ளிவிட்டு, கிறிஸ்துவின் சிலுவைக் கொடிக்கீழ் வந்து திரண்டு, அன்பின் பணியை உலகில் எங்கும் செய்கின்றதை நாமே நமது சொந்தக் கண்ணால் பார்க்கிறோம்.

கிறிஸ்துவைப்பற்றிக் கூறப்பட்ட தீர்க்கத்தரிசனங்களோடு அவருடைய சரித்திரத்தை ஒப்பிட்டு ஆராயும் சகல மதச்சத்திய வந்தர்களும், கிறிஸ்துவே வெளிப்பட்ட வேதப்பொருள் என்பதை உண்மையாகவே நம்புவார். நம்பி, அவரைக் கண்ணாரக்கண்டு சாட்சி கொடுத்த பக்தரைப்போல,

"ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடு இருந்தார். சகலமும் அவர்மூலமாய் உண்டாயிற்று. அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஜீவன் பிதாவினிடத்திலிருந்து வெளிப்பட்டது." 1 யோ. 1 : 1-3.

"வார்த்தை மாமிசமாகிக் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேரானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது." யோ. 1 : 10.

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின்கீழ் எங்கும் மனுஷருக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை." அப்போ. 4 : 12. என்று திடமாய் சாட்சி சொல்லுவார் என்பது திண்ணம்.

மேகம்போன்ற மிகத் திரளான சாட்சிகள் எழும்பி இவரே சர்வலோக மீட்பர் என்று இந்நாள்வரையிலும் தொனிக்கின்றனர். ஆகவே நாம் மிகவும் தைரியமாக, இவரே மறுமைக்குப் பிதா ஏற்படுத்திய ஒரே நித்தியவழி என்பதை நம்பி சாதிக்கலாம். இவரே தீர்க்கர் முன்குறித்த திருவேதப் பொருள். விண்ணுலகை நீத்து வந்த வேதியன். பொன்னுலகின் வழி காட்டியான புண்ணியன், தீமையை அற ஒழிக்கும் திரிலோகநாதன், சாத்தானை வென்று உயிர்த்த சாட்சாத் கடவுள். பாவியை ரட்சிக்கும் பரம அன்பு. பக்தருக்குக் காட்சிதரும் பரம ஒளி. கெட்டாரை மீட்கும் மட்டில்லா வல்லபன். எந்நாளும் இளமை பூண்ட ஈறில்லா இறைவன். தன்னைக்கொடுத்து உயர்ந்த தாரணி மன்னன். இருளைப் புறம்போக்கும் எழிலுடை ஜோதி. தஞ்சம் என்று அடைந்தோரை அஞ்சல்

செய்யும் அருளுரு. இந்த நம் அண்ணலாகிய கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு, அவருக்குள் ஜீவித்து, அவருக்குள் மரித்தவர்களே மெய்யான மோட்ச இன்பத்தை மறுமையில் நுகரக்கூடிய மெய்யான விசுவாசிகளானவர். ஏனெனில் யாவராலும் அஞ்சப்பட்ட மரணத்தை இனிய நித்திரையாக்கி, "உறங்குவதுபோலும் சாக்காடு, உறங்கி விழிப்பதுபோலும் உயிர்" என்று நமது தமிழ்ப் பெருந்தகையார் கூறிய சத்தியத்தை உலகுக்கு மெய்ப்பித்து, மூவுலகும் காண, மரித்த மூன்ஞம்நாள் உயிர்த்த திரு முருகன் இவர் ஒருவரே.

"கருப்படுத்தி என்னை எமன் கைப்பிடித்துக்கொள்ளாமல், உருப்படுத்தியாள உடன்படுவது எக்காலம்"? என்று மரணத்தை வென்று, மகிமையுள்ள சரீரத்தோடு மறுமையில் பிதாவாகிய தேவனுடைய வீட்டில் நித்தியமாய் இன்புறுவதை வாஞ்சித்துக் கதறும் பக்தகோடிகளின் திரு விருப்பம் நிறைவேறும் என்ற நம்பிக்கையை மானிடருக்குள் உண்டாக்குபவர் கிறிஸ்து ஒருவரே.

"ஒன்ருன மெய்த்தேவஞன உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசுக்கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்." யோ. 17 : 3.

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மறித்தாலும் பிழைப்பான்". யோ. 11: 25.

---

# IV. அன்பர் வீடு.

## 1 மறு பிறப்பு.

தேவன் தம்முடைய ஒரே பேருன குமாரனை விசுவாசிக்கிறவன் எவனே, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." யோ. 3 : 16.

"விசுவாசத்தினல் நீதிமான் பிழைப்பான்" என்று வேதம் சொல்லுகிறபடி இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிப்பதனுல் ஆவியில் பிறப்பது ஒன்று, அதிலே படிப்படியாய்த் தேறி, ஆவியின் வளர்ச்சியில் பூரணப்பட்டு, இந்த நித்திய ஜீவ ஆவியின் இராஜியத்தைப் பூமியில் நிலைநாட்ட கர்த்தரோடு ஒத்துழைத்து, அதன் பயனுக மறு

மையில் அரிய பெரிய பதவிகளைப் பெறுவது வேறொன்று. விசுவாசிகள் எல்லோருக்கும் மரணத்துக்குப்பின் ஒரே பிதாவின் சமூகம், ஒரே கிறிஸ்துவின் நித்திய போஷணை, ஒரே இளைப்பாறுதல், ஒரே சந்தோஷமும் சமாதானமும் இருக்கும். நமதாண்டவர் கூறிய திராட்சத் தோட்டத்து உவமையிலும், தாலந்து உவமையிலும் இது நன்கு காட்டப்படுகின்றது. அதிகாலமே துவக்கித் திராட்சத் தோட்டத்தில் சென்று சிலர் வேலை செய்தனர். சிலர் ஆறும், ஒன்பதாம், பதினோராம் மணி வேளையிலும் சென்று வேலை செய்தனர். ஆனால் திராட்சத்தோட்டத்து எஜமான், முதலில் வந்தவர் துவக்கி, கடைசியில் வந்தவர் மட்டும் யாவருக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லாமல் ஒரே கூலியைக் கொடுத்தான். தாலந்து உவமையிலுங்கூட அவரவர் தமது தாலந்தை உபயோகித்த திறமைக்கு ஏற்றபடி அவர்களுக்கு வெவ்வேறு பதவிகள் அளிக்கப்பட்டன; ஆனால் அவர்கள் ஒவ்வொருவரையும் பார்த்து எஜமான்,

"நன்றாய்ச் செய்தாய், உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று கூறினான்.

ஆகவே கிறிஸ்துவில் குழந்தைகளாயிருப்போருக்கும், அவரில் பூரண புருடராகிப் பந்தயப் பொருளைப்பெறும்படி உண்மையாய் ஜீவிய ஓட்டத்தை முடித்த பூரண விசுவாசிகளுக்கும் பொதுவாக இருக்கும் மறுமையைப்பற்றியே இனி விசாரிப்போம்.

"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜியத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்." என்பது மறுமையின் கர்த்தரான கிறிஸ்து கூறுவது. நமது பரமபிதா பட்சபாதமுள்ளவர் அல்ல. "பாவியினுடைய மரணத்தை அவர் விரும்பாமல், அவன் மனந்திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறார்." என்று வேதம் பலமுறை உரைக்கின்றது. ஆயினும் இரட்சிக்கப்படும்படி ஆவியில் பிறப்பதும், சாவாமை பூண்டு சுகித்து வாழ்வதும், மனிதனுடைய சித்தத்தைப் பொறுத்தது. சரீரப் பிறப்பும் வளர்ச்சியும் வேறு; ஆவியின் பிறப்பும் வளர்ச்சியும் வேறு. இந்தச் சத்தியத்தை உலகின் எல்லா வேதங்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. உலக அனுபவமும் இதை நன்றாக நமக்குக் காட்டுகின்றது. எப்படியெனில், லௌகிக அறிவில் நன்றாகத்தேறி, பல அரும்பெரும் பட்டங்களைப் பெற்று, மிக உயர்ந்த அந்தஸ்தில் இருக்கும் சிலர், தேவன் இல்லை

என்று சாதிக்கும் நாஸ்திகராக இருக்கின்றதை நாம் பார்க்கிறோம் அல்லவா? "நான்கு வேதங்களையும் ஆறு சாஸ்திரங்களையும் சப்தகோடி மகா மந்திரங்களையும் கற்றதினால் மாத்திரம் பரம ஞானம் வந்துவிடமாட்டாது" என்று நமது வைஷ்ணவப் பெரியார் கூறுகின்றார். ஒருவன் எத்தனைதான் கல்வியறிவில் தேறின நிபுணனாயிருந்தாலும் பரிசுத்தமான கடவுளைத் தேர்ந்து, அவருடைய சார்பில் வாழ்ந்தால் அல்லது மறுமையில் நல்ல பங்கை அவன் அடையமுடியாது என்பதை நமது திருவள்ளுவரும், "கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நல்தாழ் தொழார் எனின்," என்று கூறினார். "கற்றதும் கேட்டதும் எதுக்காக?...இன்ப நிஷ்டைகூட" என்றார் நமது சைவரும். ஆகவே வேதசாஸ்திரங்களை எல்லாம் கற்று பக்குவ நிலைகூடிய ஒவ்வொருவனும் அவ் வேதத்தின் பொருளான இயேசுக்கிறிஸ்துவாகிய பாவ மீட்பரைக் கண்டவுடன் அல்லது அவரைப்பற்றிக் கேட்டவுடன் இவரே நம்மை மீட்டு ரட்சிக்கும் சாட்சாத் குமரக்கடவுள் என்று விசுவாசியாமல் போனால் அவன் மறுமையில் நித்திய ஜீவனை அடைவது கூடாதகாரியம் என்று வேதம் திட்டமாய்ப் போதிக்கின்றது.

நமது வேதம் மாத்திரமல்ல, உலகின் பிறவேதங்களும் இதை ஒப்புக்கொள்ளுகின்றன. வைஷ்ணவரிடத்தில் காணப்படும் உபநயனச் சடங்கு, சைவரிடத்தில் காணப்படும் சிவதீட்சை, இவற்றை முன்னோருடைய பாரம்பரியச் சடங்காசாரமாக மாத்திரம் கொண்டு உட்பொருளை அறியாது பலர் கைக்கொள்ளுகின்றனர். ஆயினும் இச்சடங்குக்குள்ளானவர்களை "இரு பிறப்பாளர்" என்று பெரியார் குறிப்பதிலிருந்து, ஆவியில் மறுபடியும் பிறப்பதையே இவற்றால் தெரிவிப்பதாக நாம் அறியலாம். "மாம்சத்தில் பிறப்பது மாம்சமாயிருக்கும். ஆவியில் பிறப்பது ஆவியாயிருக்கும்" என்று வேதமும் கூறும். மனித வித்தினால் நாம் சென்மித்துப் பிறந்து இவ்வுலகில் வாழ்வதுபோல, மறுமையில் வாழ விரும்பினால் தேவ வித்தாகிய கிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தினால் ஒவ்வொருவரும் மறுபடியும் பிறக்கவேண்டியது அவசியத்திலும் அவசியம்.

இதை வற்புறுத்தியே வேத ஆராய்ச்சி வல்லாரான பக்தர், "இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்" 1 யோ. 5 : 1.

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்

களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்." யோ. 1: 12, 13. என்பவை போன்ற திருவசனங்களால் போதிக்கின்றனர்.

இவ்விதமாகப் பரிசுத்தமுள்ள தேவ ஆவியால் பிறந்தவுடனே, பரிசுத்த கர்த்தரால் பரிசுத்த ஜோதி நிறைந்த மோட்ச வீட்டிற்கு உரியவர்களாகும் பாக்கியத்தை யாவரும் அடைகின்றனர். நமது சைவ, வைஷ்ணவ மதங்களில் பிறந்து, அந்தந்த மதத்துக்கு உரிய ஞான தீட்சையைப்பெற்றும், தாயுமானவர் போன்றபெரியார், "பாவி என்ற பேர் படைத்துப் பாழ் நரகில் வீழாமல் ஆவி என்னும் சூத்திரத்தை அடைவது இனி எக்காலம்?" என்று ஏங்கினர்.

ஏனெனில் வேதம் திட்டவட்டமாய்ச் சொல்லுகிறதுபோல, தேவனுடைய "குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்" 1 யோ. 1: 7.

"நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்." 1 யோ. 2: 2.

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். 1 யோ. 1 : 9.

ஆகவே, பாவிகளின் நேசரும் பாவப்பிராயச்சித்த பலியுமாகிய கிறிஸ்து இயேசுவே இழந்துபோன மனுக்குலத்தை மலமகற்றி மகிழ்ச்சி யுலகு சேர்க்கும்படி கடவுளாகிய தந்தையால் இம்மண்ணுலகுக்கு அனுப்பப்பட்ட ஆன்ம குரு என்பதை ஆராய்ந்து உணர்ந்து, நம்பி, அவருடைய அருளால் பாவம் மன்னிக்கப்பெற்றுப், பரம வீட்டுக்குரிய இறைமக்களாக ஜீவிக்க உறுதி செய்து, அதற்கு அடையாளமாகத் தீட்சை பெறுவதே வேதம் காட்டும் மறுபிறப்பாகும். இத்தேவகுலப் பிறப்புக்குத் தங்களைப் பாத்திரவான்களாக்கிக் கொண்டு நித்திய இன்பமுள்ள அன்பர் உலகுக்கு உரியாராக முன் வருதல் மானிடர் யாவர்மேலும் விழுந்த கடமையாகும்.

## 2. பாவப் பிணையாளி

இனி, மேற் கூறப்பட்ட தேவ பிறப்பாளராக மனிதர் கிறிஸ்துவை அறிந்து விசுவாசிக்கத் தேவையில்லை என்று நமது இந்து நண்பரில் பலர் கருதுகின்றனர். இத்தகையோர் தமது மதச்சத்தியத்தையும் ஒரு சிறிதும் அறியாதவர் என்றே சொல்லவேண்டும். பாவ மனிதன் தானாக அல்ல, எல்லாம் வல்ல இறையவன் மகனாகிய குமாரக்கடவுள் மூலமாகவே மலம் நீங்கப்பெற்று முத்தியடைய வேண்டும் என்பதே சைவமத அஸ்திபாரம். இதை உறுதியாய் நம்பியே "எம்முடைய ஒரு சேய் வந்து வெம் சூரனினின்றும் உம்மைக் காப்பன்" என்றும், "இன்னருள் சக்தி தருவென வந்து துணம் பல நீக்கும்" என்றும், "நாகபாசத்தினால் கட்டுண்ட உயிர்கள் மூச்சைக் கடிதகல வலியவரும் ஞான சஞ்சீவியே...பூமி நடுவுள் உதித்த திவ்ய துணமேருவே" என்றும் சைவ பக்தர் பாடினர்.

கிறிஸ்து பாவிகளுக்காகப் பிணைப்படுவதையும், உலகின் பாவங்களையும் அதன் ஆக்கினையையும் தாமே சுமந்து பாவியை நித்திய ஆக்கினையிலிருந்து மீட்டு விடுவதையும் பற்றிக் கிறிஸ்தவரில் அநேகருக்குக்கூடப் பலவித சந்தேகமும் உண்டு.

ஆயினும் இயற்கைப் பிரமாணத்தையும், காட்சிப்பிரமாணத்தையும், மனித அனுபவப் பிரமாணத்தையும் உற்றுநோக்குவாருக்கு இச்சத்தியத்தைப்பற்றிய ஐயமோ மயக்கமோ சிறிதும் இராது. உலகத்தில் அறிவில்லாத சிறியவருக்காக அறிவுடைய பெரியார் பரிந்து பேசுகின்றனர். பலவீனருக்காகப் பலவான்களான சான்றோர் பிணைப்படுகின்றனர். தரித்திரருக்காக ஐசுவரியவான்களான பரோபகாரிகள் தம்மைத் தத்தம்செய்து தொண்டுசெய்கின்றனர். இது எங்கும் காணப்படும் அன்பின் பிரமாணம். பெரும் பாதகத்தைச் செய்து, தேச சட்டத்தால் ஆக்கினைத் தீர்ப்பிடப்பட்ட பாவிகளுக்காகப் பேரும் புகழும் உள்ள பெரியார் பிணைப்பட்டு ஜாமீன் கொடுத்து அவர்களை மீட்பதை நாம் பார்க்கிறோம். இத்தகையோர், அந்தப் பாதகருடைய தீச்செயலால் விளைந்த அவமானத்தையும் தண்டனையையும் தாமே சுமந்து, அவர்களை மீட்டார் என்று சொன்னால் தப்பிதம் இல்லையல்லவா? அன்றியும், பிறருடைய குற்றத்தின் தண்டனையைத் தம்மேல் ஏற்று, நியாயஸ்தலத்துக்குமுன் பாவியைத் தண்டனைக்குத் தப்புவிக்கும் சீரியரைக் காணும்போதும், அவரைப்பற்றிக் கேட்கும்போதும், நாம் அவருடைய பெருந்தன்மைக்காக அவரைப் புகழுவது இல்லையோ?

ஒரு தேசத்திலே பகைவர் படையெடுத்து வரும்போது அத்தேசத்திலுள்ள யாவரும் போய்ப் பகைவரோடு எதிர்த்துத் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளுவதுண்டோ? இல்லையே. அவ்விடத்திலுள்ள பேதைகள், பெண்கள், பாலகர், வயோதிகர், வீரமற்ற கோழைகள், வாயில்லா மிருகங்கள், இவர்களுக்கான பாதுகாவலைத் தேடி வைத்துவிட்டு, வீரரான ஆடவர் மட்டுமே சத்துருவோடு போர்செய்து, தம் தேசத்தைக் காப்பாற்றுகின்றனர். இதையே திருவள்ளுவர்,

"அமர் அகத்து வன் கண்ணர்போல தமர் அகத்து
ஆற்றுவார்மேற்றே பொறை."

என்று வைத்தார். ஆம் இக்குறளில் கூறியிருப்பதுபோல, ஒரு தேசத்தையோ, ஒரு குலத்தையோ, ஒரு குடும்பத்தையோ தாழ்விலிருந்து உயர்த்தி, மேன்மையுறச் செய்யவேண்டுமானால் அதற்கான அறிவும் ஆற்றலும் உள்ள ஒருவரோ, அன்றிச் சிலரோதான் எழும்பி உழைக்கின்றனர். "ங" போல் வளை" என்று நமது தமிழ்ப்பெரியார் கூறுவதன் கருத்து என்ன? ங என்ற வர்க்கத்தில் உள்ள எழுத்துக்களில் ஒன்றும் பதத்திற்கு முதல் எழுத்தாகும் பெருமையை அடையவில்லை. ஆனதால் தன் குலத்தின் இழிவை நீக்க இந்த வரியில் இவ்வெழுத்து முன் நின்றது என்பர். இப்படியாக, **இந்தியா** போன்ற ஒரு தேசத்தை, பாவியும் பலவீனனுமான **காந்தி** போன்ற ஒரு மனிதனும், அமெரிக்கா போன்ற ஒரு கண்டத்தை, பாவியும் பலவீனனுமான ஆபிரகாம் லிங்கன் போன்ற ஒரு மனிதனும், தீண்டப்படாத ஜாதியாரான ஒரு ஜாதியாரை, அறிவீனனும், பலவீனனும், பாவியுமான அம்பேட்கார் என்ற ஒரு மனிதனும், ரட்சித்து உயர்த்தக்கூடும் என்று நாம் நம்புகிறோம். அப்படியானால் பாவமில்லாத பூரண பரிசுத்த தேவசொரூபமும், பூரண தெய்வீக அறிவுமுடைய, பூரண மனிதத்தன்மையும் உள்ள கிறிஸ்து உலகின் பாவ ஆக்கினையைத் தன்மேல் சுமந்து பாவிகளை மீட்டு ரட்சிக்கிறார் என்று கூறுவதில் என்ன குறைவும் உண்மைத் தாழ்ச்சியும் உண்டு? ஒன்றும் இல்லையே. இது மிகவும் பொருத்தமானதும், எல்லாராலும் அங்கீகரிக்கப்படத்தக்கதுமான தெய்வீக சத்தியம். (1 தீமோ. 1 : 15)

மிருகங்கள் பறவைகளிலும் நாம் உற்று நோக்குவோம். பலவீனமான தம் குட்டிகளுக்கும் குஞ்சுகளுக்கும் சத்துருவால் ஆபத்து

நேரும்போது, தம் ஜீவனை விட்டாகிலும் அவற்றைத் தாய் மிருகங்களும், தாய்ப்பறவைகளும் காப்பாற்றுகின்றன. இப்படியாக இயற்கை முழுவதிலும் பகுத்தறிவில்லாத பிராணிகளிலும், சிற்றறிவுள்ள பாவ மனிதனிடத்தும், தமக்கென வாழாத பிறர்க்கு உரியாளர் இருப்பாரேயானால், இவர்கள் எல்லாரையும் படைத்த அருட் கடவுளாகிய பிதாவும், அவரது தற்சொரூபமும் சாயலுமான நித்திய பரிசுத்தராகிய குமாரக் கடவுளும் இவர்களைப் பார்க்கிலும் அன்பிலும், கருணையிலும், தன்னைத் தந்து மன்னுயிரைத் தடுத்தாட்கொள்ளும் தெய்வீக மீட்பின் செயலிலும் தாழ்ந்து காணப்படக் கூடுமோ? ஒருபோதும் இல்லை இல்லை. "உன் தகப்பனும் தாயும் உன்னைக் கைவிட்டாலும் நான் உன்னைக் கூட்டிச்சேர்ப்பேன்" என்று பாவிகளும் பலவீனருமான நம் எல்லாருக்கும் கிறிஸ்து திருவாக்களித்திருக்கிறார். ஆகவே உலகோரின் பாவங்களுக்கு நியாயமாய் வரவேண்டிய தீர்ப்பைத் தாம் சுமந்து, உலகைப் பிசாசின் அடிமைத்தனத்திலிருந்து கிறிஸ்து மீட்கிறார் என்ற சத்தியம் எம் மதத்தினருக்கும் சம்மதமான ஆறுதலின் சத்தியம். "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்பது நமது தமிழ்ப் பெரியார் வாக்கு. ஆனபடியால் சர்வலோகத்திற்கும் கிறிஸ்துவான ஒரே மத்தியஸ்தரும் மீட்பரும் இரட்சகரும் இருப்பது மிகவும் நியாயமே. வேதமும் பல இடங்களில்,

"தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துமூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார். நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரையடைந்தவர்களானாலும் தம்முடனேகூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே." 1 தெச. 5 : 9, 10 என்று தெளிவாகப் பேசுகின்றது.

இப்படிக் கிறிஸ்துவாகிய தேவ குமாரனால் உலகத்திற்கு உண்டான பாவ மீட்பைப்பற்றிய சத்தியத்தை அறிந்த சைவரும், இதன் கருத்தை ஒப்புக்கொண்டு, அதைத் தம் சமயத்திற்கேற்ப பஞ்சாட்சர மந்திரமாக இன்றுவரை ஓதி வருகின்றனர். 'சிவாய நம' என்பதே அந்த மந்திரம். சி என்பது பூரண பரிசுத்தராகிய கடவுளாம்; ய என்பது பாவ மானிடராம்; வா என்பது பரிசுத்தராகிய பிதாவுக்கும் பாவிகளுக்கும் இடையே மத்தியஸ்தனாக நிற்கும் அருட் சக்தியாம். நம என்பது மரணத்துக்கேதுவான பாவமாம். இந்தப் பாவத்திலிருந்து மானிடரை மீட்டுத் தன்னோடு சேர்த்துப்

பின் தந்தையாகிய பிதாவின் வீட்டிற்கு அழைத்துச் செல்வதே அருள் சக்தியின் குணமும் தொழிலுமாம். இதை வெறும் எழுத்துக்களாக, வெறும் ஏட்டில் வைத்துக்கொண்டு, வெறுமனே பொருளறியாது ஓதிக்கொண்டிருக்கின்றனர், நமது சைவ சகோதரரில் பலர். ஆனால் "சொல்முழக்கு எற்றுக்கு, சொல் முடிவைத்தானே தொடர்ந்துபிடி" என்று நமது சைவ ஞானியர் கூறுமாப்போல், இம்மந்திரத்தில் குறிக்கப்பட்ட அருள் சக்தியாகிய கிறிஸ்து, மெய்யாகவே மாம்சத்தில் வெளிப்பட்டு, இன்று காறும் விசுவாசத்தின் மூலமாய்த் தம்மிடம் சேரும் யாவரையும் பிசாசின் தீய சக்திக்கு விலக்கி மீட்டு, மறுமையில் முத்தி வீடளிக்கிறார். இதை மானிடர் நம்பவேண்டும். இவ்வுண்மையை எடுத்துக்கூறினால் நமது சைவ நண்பர் சீறிச் சினந்து, வெந்து வெளிறிக்கெட்டு அழிகின்றனர். அவர்களின் இவ்விருதயக் குருட்டாட்டத்தையும் மன அந்தகாரத்தையும் நினைத்தால் அந்தோ, நம் குடல் துடித்து, இருதயம் உருகிக், கண்கள் கண்ணீரைச் சிந்துகின்றன.

ஆ! என் அருமைச் சகோதரரே! நமதாண்டவராகிய கிறிஸ்துவின் திரு மரணத்தினாலும், நித்திய உயிர்த்தெழுதலினாலும், நமக்கும் உலகம் அனைத்திற்கும் கிடைத்திருக்கும் ஆத்தும மீட்பையும் மறுமையின்பத்தையும் நாம் இப்போது பூரணமாக உணராதிருக்கிறோம். மறுமைக்குச் சென்றவுடன் அதன் தாற்பரியத்தை அறியவேண்டிய பிரகாரம் அறிவோம். அப்போது தோமா, தாவீது முதலிய பக்தரைப்போல 'என் ஆண்டவரே, என் தேவனே, என் ராஜாவே! 'மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் எண்ணுகிறதற்கும் அவன் எம்மாத்திரம்!' என்று அதிசயித்து ஆனந்தித்து, சதா அவரைப் புகழ்ந்து துதிப்போம். இது சத்தியம் சத்தியம்.

---

## 3. விசுவாசிகளின் மறுமை.

இனி, கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்த விசுவாசிகளின் மறுமையைப்பற்றிச் சற்று பார்ப்போம். உயிர்த்தெழுந்தபின் நாற்பது நாளளவும் தேவனுடைய இராஜியத்தைப்பற்றிய தெளிவான உபதேசங்களைத் தமது சீஷருக்குப் போதித்து ஆண்டவர் பரமேறினார். பரமேறுமுன் தமது அன்பர்களின் பிரிவாற்றாமையை நீக்கும்படி அவர் உரைத்த வசனங்களை நோக்குவோம்.

"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. (பூரண பரிசுத்தமும் அன்பும் உள்ள பிதாவாகிய) தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். (அவரால் பூலோக இரட்சிப்புக்கென்று அனுப்பப்பட்ட) என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அனேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படி இல்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். (அவற்றில்) ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான்போய் உங்களுக்கு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும்வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்." யோ. 14 1—3.

இந்த ஜீவ வசனங்களினால் அறியப்படுவது என்ன? இம்மையில் நாம் எல்லோரும் பரதேசிகளான கூடாரவாசிகள். நிலையான வாசஸ்தலம் இங்கே நமக்கு இல்லை. நாம் மோட்சப்பிரயாணிகள். இம்மையில் இந்த உலகமாகிய கீழையூரில் நமது பரம பிதா நமக்குக் கொடுத்திருக்கும் அன்பின் ஊழியத்தை முடிப்போம்; பின்பு மரணத்தின்மூலமாக விடுமுறை பெறுவோம். நித்திய விடுமுறைக்குத் தந்தை நமக்காக ஆயத்தம் செய்துவைத்திருக்கும் ஒளி நிறைந்த இன்ப வீடாகிய மேலையூருக்குச்சென்று சதா வாழ்ந்து சுகிப்போம். ஆ! எத்தனை ஆறுதல், எத்தனை நம்பிக்கை, எத்தனை உற்சாகம், எத்தனை சந்தோஷம்!

இவ்விதமாக மரிக்கும் விசுவாசிகளின் ஆத்துமாக்கள் வாயுவேகம் மனோ வேகத்தைக் காட்டிலும் விரைவாய்ச்சென்று கர்த்தரின் சமூகத்தை அடைகின்றன. மரணத்தை யோர்தான் நதிக்கு ஒப்பிட்டு பக்தர் பேசுவதால் மரணத்துக்குப்பின் ஆன்மாக்கள் மறுமைசெல்ல ஏதோ அதிகதூரமும் நேரமும் எடுக்கிறதென்று நாம் கருதத்தேவையில்லை.

"கடைசி எக்காளம் தொனிக்கும்போது ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே நாம் எல்லோரும் மறுரூபமாக்கப்படுவோம்" 1. கொரி 15 : 51 என்று பரி. பவுல் கூறுகிறார். நமதாண்டவரைச் சாத்தான் இப்பூவுலக மகிமையால் மயக்கும்படி உயர்ந்த மலையின் மேல் கொண்டு நிறுத்தினபோது கர்த்தர், சர்வலோகத்தின் வாழ்வையும் ஒரு க்ஷணப்பொழுதிலே தமது ஆவியில் கண்டார் என்று வேதம் குறிக்கின்றது. ஆகவே சமயம் என்பதும், தூரம் என்பதும் மனிதன்

தன் சௌகரியத்தின்பொருட்டுப் பிரித்துக்கொண்ட பிரிவுகளே தவிர, மறுமையில் இத்தகைய பிரிவுகள் இல்லையென்றே கொள்ள வேண்டும்.

இம்மையிலுள்ள நமது கூடாரத்திற்கும் மறுமையிலுள்ள நமது இன்ப வீட்டிற்கும் இடையில் ஒரே ஒரு வாசற்படிதான். "நானே வாசல்" என்று மரணத்தின் கூரை ஒடித்து, பாதாளத்தின் திறவுகோலையுடைய வெற்றிவீரரான மறுமையின் கர்த்தர் கூறுகிறார். ஒரே வீட்டில் இரு பகுதி உண்டு என்று வைத்துக் கொள்வோம். ஒரு அறையின் கதவைத் திறந்ததும் மறு அறைக்கு உடனே செல்லலாம் அல்லவா? அதுபோலவே மரணவாயிலைக் கடந்ததும் அந்தக்ஷணமே மோட்ச வீட்டில் இருப்போம். இதுவே நமது கர்த்தராகிய கிறிஸ்து நமக்கு அளிக்கும் போதனை.

இனி மரணத்துக்குப்பின் அவ்விதமாக ஒரு க்ஷணப்பொழுதிலே விசுவாசிகளின் ஆத்துமாக்கள் எங்கு செல்லுகின்றன? அவைகள் க்ஷணப்பொழுதிலே சென்று கர்த்தருடைய சமுகத்தையே அடைகின்றன.

"ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில்...... தேவன் அவனை எடுத்துக்கொண்டார்."

"கர்த்தர் எலியாவைச் சுழல் காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக்கொண்டார்."

இவ்வசனங்கள், இம்மையை விட்டதும் விசுவாசிகள் தேவ சமூகத்தையே சேர்கின்றனர் என்பதைக் காட்டுகின்றன. இவ்விருவரும் மரணத்தின் மூலமாயல்ல, உயிரோடு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர் என்று சிலர் கருதலாம். நமது சிருஷ்டிகராகிய பிதா, மரித்தோருக்கும் உயிருள்ளோருக்கும் தேவனுவார். ஆகவே நாம் பிழைத்தாலும் மரித்தாலும் அவருடைய ஒரே ஜீவ பிரமாணத்தினால்தான் ஆளப்படுகிறோம். அன்றியும், மறுமையைப் பற்றிய தெய்வீக பாடங்களை எழுதும் பரி: பவுல் தனது நிருபத்தில்,

"இந்த தேகத்தைவிட்டுக் குடிப்போகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறேன்." 1 கொரி. 5: 7. என்கிறதின் கருத்து என்ன? மரணத்துக்குப்பின் உடனே சென்று கர்த்தரை அடைகிறோம் என்பதல்லவா?

கர்த்தர் மறுரூபமானபோது முறையே மரணத்தின்மூலமாயும், உயிரோடும் மறுமைக்குள் சென்ற மோசேயும் எலியாவும் கர்த்தரோடு சம்பாஷிக்கிறவர்களாகத் தோன்றினர்கள். இவர்கள் இருவரும் தேவனுடைய வீடாகிய பரலோகத்திலிருந்தே கிறிஸ்துவினிடம் அனுப்பப்பட்டிருக்கவேண்டும் என்பது திண்ணம்.

பின்னும் நமதாண்டவர் தமது மரணத்துக்குமுன் தமது சீடருடன் செய்த திருச்சம்பாஷணையில், தான் பிதாவினிடத்திற்குப் போகிறதாகவே கூறினர். தமது ஆவியை விடும்போதும், "பிதாவே உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று முழங்கினர். உத்தம மனிதன் பூரண ஜீவியம் செய்வது எப்படி என்பதற்குப் பூரண தேவனும், பூரண மனிதனுமான நமதாண்டவரே பூரண மாதிரி. ஆகையால் அவருடைய ஆவி மரணத்திற்குப்பின் பிதாவினிடம் நேரே போதுமானுல் அவருடைய விசுவாசிகளின் ஆவிகளும் அவ்வாறே செல்லும் என்பது சொல்லாமலே விளங்குகிறதல்லவா ?

கர்த்தருக்காக அரிய பெரிய காரியங்களையும் ஊழியத்தையும் இம்மையிலேயே செய்யும் பூரண விசுவாசிகளுக்குத்தான் ஒருவேளை மரணத்துக்குப்பின் உடனே சென்று கர்த்தரோடு இருக்கும் பாக்கியம் கிடைக்கும் என்றும், மற்றவர்களுக்கு அது கிடையாதென்றும் சிலர் சொல்லுவார்கள். அப்படியானுல் கர்த்தரோடு வலதுபக்கத்தில் சிலுவையில் அறையப்பட்ட கள்ளனைப்பற்றி என்ன சொல்வது? அவன் அதற்குமுன் கிறிஸ்துவைக் கண்டிருந்தான் என்பதற்கு சான்று இல்லை. ஒருவேளை அவர் அன்பின் திருப்பணியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். என்றாலும் தன் தோழனை இடதுபக்கத்துக் கள்ளனேடு சேர்ந்து இவனும் கர்த்தரை முதலில் நிந்தித்து ஏளனம் பண்ணினுன். சிறிது நேரத்திற்கெல்லாம் அவருடைய தெய்வீகத்தை அறிந்துகொண்டான். பூரண பொறுமைக்கு இருப்பிடமான சற்குணக்குன்றாகிய சாந்தமூர்த்தி இவரே என்றும், மன்னிக்கிறதே சுபாவமும் லட்சணமுமான தெய்வீக புருடோத்தமன் இவரே என்றும் அறிந்தான். பூரண பரிசுத்த தெய்வீக ஜோதியின் அருகில் தன் ஆத்தும அருவருப்பை உணர்ந்தான். தன் பாவத்தைக் கழுவும் பரம ஊற்று இந்த தெய்வீக மகா புருடனிடத்திலிருந்து ஓடுவதைத் தன் மனக்கண்ணுல் கண்டான். கண்ட மாத்திரத்திலே மறுமையின் ஒப்பற்ற காட்சி இவனுக்குத் தோன்றுகின்றது. ஆ! மறுமையின் கர்த்தரே, இதோ, தன்னைப்போல பாடுள்ள மனிதன்போல தொங்குகிறுர் என்பதும், இவர் தன் ஆதி மகிமை

யைப்பெற்று இராஜாதி இராஜாவாக நித்திய ராஜியத்தை ஆளும் காலம் நிச்சயமாகவே வரும் என்பதும் இவனுடைய சூட்சம கண் களுக்குத் தெரிகின்றது. இம்மையில் தன் பங்கு எதுவானாலும், மறுமையில் தனக்கு நித்திய பங்கைத் தந்து, ஜீவனையும் அளிக்கக் கூடியவர் இவரே என்று நம்புகிறான். உடனே கர்த்தரை விசு வாசித்து,

"ஆண்டவரே உமது ராஜியத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்று மறுமைக் கதிபதியினிடம் விண்ணப்பிக்கி றான். இழந்துபோனதைத் தேடி இரட்சிக்க வந்த ஒப்பற்ற ஜீவாதி பதியான கிறிஸ்திறைவன், அவனுடைய வாயின் சொல் பிறவாத தன் முன்னே, "இன்றைக்கு நீ என்னோடுகூடப் பரதீசில் இருப் பாய் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

இங்கே கூறப்பட்ட பரதீசு என்ற இடம் பூரண நிலையுள்ள மோட்சம் அல்ல என்பதை வேதம் தெளிவாகக் காட்டுகிறது. "இன்றைக்கு என்னோடுகூடப் பரதீசில் இருப்பாய்" என்று கள்ள னுக்குச்சொன்ன ஆண்டவர், உயிர்த்தெழுந்த தம்மைத் தொடவந்த மரியாளைப்பார்த்து "என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடம் போகவில்லை" என்றார். இதிலிருந்து பரதீசு வேறு, வானதிவானங்களிலுள்ள பிதாவின் சமுகம் வேறு என்பது தெளி வாகிறது. பரி. பவுல் இன்னொரு இடத்தில் தான் மூன்றாம் வானமாகிய பரதீசுக்குள் எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுஷர் பேசப் படாததும் வாக்குக் கெட்டாததுமான பாஷையைக் கேட்டதாகத் தன் நிருபத்தில் கூறுகிறார். 2 கொரி. 12 : 13 மற்றொரு இடத் தில், சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தமது சீடனாகிய யோவான் மூலமாய் ஆசியாவின் ஏழு சபைகளுக்கும் தெரிவிக்கும் போது, சபையின் விசுவாசிகளைப் பார்த்து ஆண்டவர், "ஜெயங் கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தி யில் இருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன்" வெளி. 2 : 7. என்கிறார்.

சகோதரரே! நமது பரம "பிதாவின் வீட்டில் அனேக வாசஸ்தலங்கள் உண்டு" என்று பிதாவோடு ஒன்றாயிருக்கும் கிறிஸ்து மொழிந்தார் என்று பார்த்தோம். விசுவாசம் எல்லோருக் கும் ஒன்றல்ல என்று வேதம் கூறுகிறதுமாத்திரமல்ல, நாமும் நமது

அனுபவத்தில் அறிவோம். சிலர் பூரண விசுவாசிகளாகி, தேவ ஆவியின் பலத்தினால் கர்த்தருடைய நாமத்தில் பலத்த அற்புத அடையாளங்களைச் செய்கின்றனர். இவர்கள், அதிசயிக்கத்தக்க விதமாய் ஏராளமான ஆத்துமாக்களை மெய்யான தெய்வீக ஒளிக்குள் நடத்துகின்றனர். சிலரோ என்றால் விசுவாசத்தில் பலவீனராய்த் தேவ மகிமையின் அதிசயத்தைக் கண்டுகளிக்கத் துணியாதிருக்கின்றனர். சரீரத்தின் வளர்ச்சியில் ஒரே பெற்றோரின் பிள்ளைகளில் மூத்தோர், இளையோர், பெரியோர், சிறியோர் பலசாலிகள், பலவீனர் என்ற பிரிவு உண்டல்லவா? அதுபோலவே ஆவியின் வளர்ச்சியிலும் உண்டு. வயதில் வளருகிறதுபோலவே தேவ ஆவியின் வளர்ச்சியிலும் நாம் பெருகிப் பலப்பட்டு பூரணப்பட ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். தேவனாகிய பிதாவும், அவருடைய தற்சொரூபமான குமாரக்கடவுளும், ஒருவரும் சேரக்கூடாத பரிசுத்த ஜோதியில் வாசமாயிருக்கின்றனர். பரிசுத்தம் இல்லாதவன் பூரணராகிய பரிசுத்தரைத் தரிசித்தல் எங்ஙனம் கூடும்? கிறிஸ்து, பதினாயிரம் சூரியனிலும் மிகுந்த பரிசுத்த ஒளியையுடையவர் என்று வேதம் போதிக்கின்றது. பக்தர்களான பூரண விசுவாசிகளாகிய மோசே, தானியேல், ஏசாயா, எசேக்கியல், எரேமியா, பரி. பவுல் முதலியோருங்கூட, கர்த்தராகிய கிறிஸ்துவின் திருச்சோதிக்கு முன் நிற்கக்கூடாமல் விழவேண்டியிருந்தது. அப்படியானால் விசுவாசத்தில் பலவீனராகி, பாவத்தோடு இரத்தம் சிந்தத்தக்கதாக போராடக் கூடாதவர்கள் எங்ஙனம் அந்த மகா மகிமையின் அருகே இருந்து, அந்தமகாப் பரிசுத்த ஜோதியின் வெம்மையைத் தாங்கக் கூடும்? இளங் குழந்தைகளின் கண்கள் பலவீனமாயிருப்பதால் சூரிய வெளிச்சத்தைச் சகிக்கக்கூடாமல் வெகுநேரம் கண்களை மூடியபடியே அக்குழந்தைகள் இருக்கின்றன. அவை வளர வளர சூரிய வெம்மையைத் தாங்கக்கூடும். அவ்வாறே ஆவியின் வளர்ச்சியில் எத்தனைக் கெத்தனை தேறி, ஞானேந்திரியங்களைத் தூய செயலில் பழக்கி, பர்வத்தை மேற்கொண்டு பரிசுத்தத்தில் பூரணப்படுகிறோமோ, அத்தனைக்கத்தனை கர்த்தருடைய ஜோதியின் மகிமையைத் தாங்கக்கூடியவர்களாகி, அவருக்குச் சமீபத்தில் இருக்கும் பாக்கியத்தைப் பெறுவோம். இம்மையில் நாம் அடையும் ஆவியின் பரிசுத்த வளர்ச்சிக்கு ஏற்பவே மறுமையில், பிதாவின் வீட்டில் நமக்கு வாசஸ்தலம் குறிக்கப்படும். ஆகவே பரதீசு என்பது நமது பிதாவின் வீட்டிலுள்ள அனேக அறைகளில் ஒன்றுதான். ஒரே பெற்றோரின் வீட்டில் தந்தையோடு சேர்ந்து வீட்டின்

பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் அறிவாளிகளான மூத்தகுமாரர் உண்டு. பொறுப்பை உணராத அறிவில் குறைந்த சிறியாரும் உண்டு. ஆனால் பெற்றோரின் போஷணை, அன்பு, பாதுகாப்பு எல்லாம் எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒன்றே. அவ்வாறே மறுமையில் நமது கர்த்தரின் சமூகத்திலும். வலது கள்ளன் கிறிஸ்துவுக்காகவோ, தேவ திரு ராஜியத்திற்காகவோ இன்னும் ஒரு சிறு ஊழியமும் இவ்வுலகில் செய்யாமல் இருக்கும்போதே மரணத்துக்குள்ளாக வேண்டியிருந்தது. ஆயினும் ஆண்டவர், "என்னோடு கூட பரதீசில் இருப்பாய்" என்று அவனுக்கு வாக்களித்தார். ஆனதால் இந்தப் பரதீசு, ஆவியின் வளர்ச்சியை துவக்கும் விசுவாசிகளுக்குக் குறிக்கப்பட்டதும், பிதாவின் வீட்டில் ஒரு பகுதியுமான இடமாகும். ஒரே சூரியன் உயர இருந்து பூமியின் எப்பக்கத்திலுமுள்ளோரையும் பிரகாசிப்பது போலவே, நீதியின் சூரியனான பரிசுத்த கிறிஸ்து, தமது அன்புள்ள இனிய பிரசன்னத்தினால் விசுவாசிகளான எல்லாரையும் ஒன்றுபோல் களிப்பிப்பார் என்று அறிவோமாக.

நாம் மரணவாயிலைக் கடந்தது அக்கரையில் நமக்குமுன்னே மறுமைக்குள் சென்றிருக்கும் விசுவாசிகளான நமக்கருமையானவர்களைக் கண்டு சந்திப்போம். தூரதேசம் சென்று, வெகு காலத்துக்குப் பின்பு தம் சொந்தத் தந்தையின் வீடு நோக்கி வரும் மைந்தருக்காக பெற்றோரும், பிறவிகளும், நண்பரும் ஆவலோடு காத்திருப்பார்கள். அவர்களைக் கண்டதும் அவர்களோடு அளவளாவி, பற்பல அன்பின் குறிகளால் அவருடைய வரவை நல்வரவாக்குவார். அவ்விதமே மறுமையிலும். மரித்த லாசருவை தேவதூதர் அழைத்துச்சென்று ஆபிரகாமின் மடியில் விட்டார்கள் என்று கர்த்தருடைய உவமை காட்டுகின்றது. நமதாண்டவர் தானும் பரத்திற்குச் சென்றபோது மேகம்போன்ற திரளான தேவலோகத்தினர் அவரை எதிர்கொண்டு அழைத்துச் சென்றனர். தமது ரட்சிப்பின் வேலையை முடித்துப் பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்த ஆண்டவர், தமது வசனத்தினிமித்தம் இரத்தசாட்சியாய் மரிக்கப்போகும் ஸ்தேவானை வரவேற்கும்படி எழுந்து நின்றார் என்று வேதம் காட்டுகின்றது. அப். 7 : 56, 59. அவ்விதமே விசுவாசிகள் யாவருக்கும் மறுமையில் வரவேற்பு இருக்கும். தூதர் நம்மை அழைத்துச் சென்று, அவரவருடைய ஆத்தும வளர்ச்சிக்கேற்ப கர்த்தரால் அவரவருக்கு ஏற்படுத்தப்பட்ட வாசஸ்தலத்தில் இருக்கச் செய்வார்.

பின்னும், நாம் மறுமைக்குள் செல்லும்போது நம்முடையவர்களை இம்மையில் அறிந்திருந்தபடியே அறிந்து அடையாளங் கண்டு கொள்ளுவோம் என்று வேதம் திட்டமாய்ப் போதிக்கின்றது. இம்மையில் நாம் அறிந்தபடி மாத்திரமல்ல, கர்த்தராகிய தேவன் அவர்களை அறிகிறபடி, இன்னும் அதிகமாகவே நாம் அறிந்துகொள்ளுவோம். ஏனெனில், இப்பூமியில் நமக்குப் பிரயோஜனமான எல்லாவற்றையும் நமக்குப் போதித்து உணர்த்தும்படியாகத் தமது தெய்வீக அபிஷேகமாகிய பரிசுத்தாவியை ஆண்டவர் நமக்குத் தந்திருக்கிறார். என்றாலும் இந்த உலகத்தில் பிசாசு, மாம்சம், உலகம் ஆகியவற்றால் உண்டாகும் பல மயக்கத்தாலும், தடைகளாலும் நாம் அறிய வேண்டியபிரகாரம் தெய்வீக சத்தியங்களை அறிந்துகொள்ளுகிறதில்லை. மறுமையிலோ இந்தத் தடைகள் எல்லாம் நீங்கப்பெற்று நீதியின் சூரியனாகிய கிறிஸ்துவின் தெய்வீக ஒளிக்கு அருகில் நாம் இருப்பதால், மூன்று உலகத்திலுமுள்ள மனிதர், தேவர், நரகர் முதலியோரையும், இங்கே நிகழும் நிகழ்ச்சிகளையும் பற்றி தேவன் அறிகிறபடியே அறிந்துகொள்ளுவோம். இம்மையில் ஐசுவரியத்தின் மயக்கத்தினால் கிறிஸ்துவை விசுவாசியாமல், பாவத்திலும் சிற்றின்பத்திலும் உழன்ற ஐசுவரியவான்கூட, மரித்ததும் தனது வாசலிலே பிச்சை கேட்டுக்கொண்டிருந்த லாசருவையும், பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் மரித்த ஆபிரகாமையும் அறிந்துகொண்டான் என்று உவமை கூறும். கிறிஸ்து மறுரூபமானபோது அவருடைய தெய்வீக ஒளியின் பிரகாசத்தினால், அவரோடு சம்பாஷித்த மோசே, எலியா என்ற மறுமைக்குள்ளான பக்தரை சீடர் அறிந்துகொண்டனர். இப்படியே நமது அருமை உற்றார், பெற்றார், நண்பர் இவர்களில், யார் எங்கிருந்தாலும் அவர்களை நாம் நன்றாய் அறிந்துகொள்ளுவோம். ஆ! நமக்கருமையானவர்கள் எல்லாரையும் கர்த்தராகிய இயேசுவின் சமுகத்தில் விசுவாசிகளின் கூட்டத்தில் காணக்கூடுமானால் எத்தனை இன்பம், எத்தனை ஆறுதல்! அன்புள்ள பெற்றோரே! உமது அருமைப் புதல்வர்களைவிட்டு மறுமையிலும் பிரிக்கப்படாமல், கிறிஸ்துவின் திருக்குடும்பத்தோடு ஏகமாய் ஐக்கியப்பட்டு, நித்திய இன்பம் அடைய விரும்புகிறீரோ? அப்படியானால் இம்மையிலேயே அவர்களுடைய ஆத்தும ரட்சிப்பைப்பற்றியும் வளர்ச்சியைப்பற்றியும் மிகுந்த ஜாக்கிரதையோடு, கண்ணும் கருத்துமாய் பிரயாசப்பட்டு ஜீவிப்பீராக. காதலரே! நீவிர் இம்மையிலிருப்பதைப்போலவே, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல், மறுமையிலும் கிறிஸ்துவின் ஒளியுள்ள திருக்குடும்பத்தின் நீங்காத அங்கமாக இன்புற ஆசிக்கின்

றீரா? அப்படியானுல் இங்கேயே, நீங்கள் இருவரும் கிறிஸ்துவுக்குள் ஒருமித்து, ஆத்தும வளர்ச்சியில் தேறி, மறுமையரசராகிய கிறிஸ்துவுக்குள் ஏகமாய்க் கனிகொடுக்கக் கருத்துடன் முயலுவீராக. தோழரே! உங்களுக்கு, மறுமையிலும் ஒருவரையொருவர் கண்டுகளித்து கிறிஸ்துவுக்குள் இன்புற ஆசையுண்டா? அப்படியானுல் ஒருவருக்கு ஒருவர் தூய வழியில் புத்திசொல்லிக்கொண்டு, கிறிஸ்துவில் ஐக்கியப்பட்டு, உங்கள் ஆத்துமரட்சிப்பை நிறைவேற்ற தவருதீர்கள்.

அன்பரே! சைவரும் பிறரும், இம்மையை விட்டுப்போன ஆண் பெண்ணுகவோ, பெண் ஆணுகவோ, மனிதர் மிருகமாகவோ, புல்லாகவோ, பிற தாவரங்களாகவோ மாறுகின்றனர் என்று நம்புகின்றனர். அவர்களுடைய இந்த நம்பிக்கைக்கு இயற்கையும் சுயானுபவமும் இடங்கொடுப்பதில்லை என்பதை நம்புங்கள். பல பிறவி நம்பிக்கை மகா மயக்கமுள்ளதும், பூரண அன்பும் பூரண ஞானமும் நிறைந்த தேவ லட்சணத்திற்கும், தூய மனித உணர்ச்சிக்கும் முற்றிலும் மாருனதுமானது: இத்தகைய பூதத்தலைவனுடைய இருண்ட கொள்கையை நாம் கிஞ்சித்தும் நம்பாமல், மறுமையில் நம்முடையவர்கள் யாவரையும், அவர்கள் இம்மையில் இருந்தபடியே அறிந்து கொள்ளுவோம் என்பதை மாத்திரம் ஆழமாய் மனதில்வைக்க நண்பர்களை வேண்டுகின்ருேம். அதே ஆள், அதே உருவம், அதே தோற்றம், அதே ஞாபகம் நம்மெல்லாருக்கும் மறுமையில் உண்டு என்பதை மறவாதிருப்போமாக. இதுவே சத்தியவேதம் நமக்குப் போதிப்பது. சவுலுக்குத் தோன்றின சாமுவேலின் தோற்றம், உருவம், பிராயம், புத்தி, சித்தம், ஞானதிருஷ்டிகுணம், ஞாபகம் யாவும், அவன் பூமியில் உயிரோடிருந்தபோது இருந்தது போலவே, கொஞ்சமும் மாருமல் காணப்படுகின்றது. அன்றியும் மறுமையில் இருந்த சாமுவேலுக்கு, இம்மையில் சவுலுக்கும் அவனைச் சேர்ந்தாருக்கும் நடக்கும் காரியங்களும் நன்ருய்த் தெரிந்தது. அப்படியே மோசே, எலியா முதலியோரின் உரு தோற்றம், புத்தி, ஞாபகம், இம்மையில் தமக்கருமையானவர்களுக்கு நடைபெறும் நிகழ்ச்சி முதலியவற்றை அறியும் பூரண அறிவு யாவும் மாருமல் காணப்படுகின்றது. யோபு தன் மரணத்துக்குப் பின் மறுமையில் தன் மீட்பராகிய கிறிஸ்துவைக் காணும் உறுதியான நம்பிக்கையால் பூரித்து, "என் மீட்பர் உயிரோடிருக்கிறர். ... இந்த என் தோல் முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாமி

சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்களல்ல, என் கண்களே அவரைக் காணும்" என்று கெம்பீரிக்கிறான். யோபு 19 : 25-27.

அப்படியே நமதாண்டவர் மாம்சத்தில் இருந்தபோது மூன்று வெவ்வேறான நிலையில் இருந்த மரித்தோரை உயிரோடு எழுப்பினதாகச் சரித்திரம் கூறும். யவீரின் மகளை மரித்தவுடனே எழுப்பினார். நாயீன் ஊர் விதவையின் மகனான வாலிபனை அடக்கம் பண்ணப்படக் கொண்டுபோகப்படும்போது எழுப்பினார். லாசருவை அடக்கம் பண்ணப்பட்டு நான்குநாள் சென்று எழுப்பினார். இந்த மூன்றுபேரும் இறந்துபோனதைப்பற்றி யாதொரு சந்தேகமும் இல்லை. ஆத்துமாவைக் கொல்லவும் உயிர்ப்பிக்கவும் உரிமை பெற்ற ஜீவாதிபதியாகிய மறுமையின் கர்த்தர், இவர்களைத் தமது சித்தப்படியே உயிர்ப்பித்து, அவரவர்களுக்கு அருமையானவர்களிடத்தில் அவர்களை ஒப்புவித்தார். இவர்களுடைய ஆத்துமா மறுமையில் ஏதோ ஒரு இடத்தில்தான் இருந்திருக்கவேண்டும். ஜீவாதிபதியின் ஜீவகட்டளை பிறந்தமாத்திரத்திலே அவர்கள் தத்தம் சரீரத்தில் வந்து புகுந்தனர். அவர்களுக்கு அருமையானவர்கள் அவர்களை நன்றாய் அடையாளங்கண்டு, யாதொரு ஆட்சேபனையும் இன்றி ஏற்று மகிழ்ந்தனர். இவ்வாறே பேதுரு, பவுலாலும், இன்னும் ஏனைய தாசராலும் உயிர்ப்பிக்கப்பட்ட யாவரும், அவரவர் தத்தம் சரீரம், தோற்றம், புத்தி சித்தத்தோடு உயிர்பெற்று எழுந்து, பிறரால் அங்கீகரிக்கப்பட்டனர். ஆகவே மறுமைக்குள் நம்முடையோரை பிறவுருவத்தில் அல்ல, அவரவர்க்குறியதாக நாம் அறிந்திருக்கும் உருவத்திலேயே காண்போம் என்பதைத் திட்டமாய் நம்பி, நாம் எல்லோரும் ஏகமாக இருளில் அல்ல, கிறிஸ்துவின் ஒளியில் ஆனந்திக்கும் பாக்கியத்திற்காக இம்மையில் கண்ணும் கருத்துமாயிருப்போமாக.

இனி, கர்த்தருக்குள் மரித்த விசுவாசிகளுக்கு மறுமையில் நித்திய கோப ஆக்கினைத்தீர்ப்பு இல்லை என்பதைச் சற்று பார்ப்போம். "இங்கே என் வினையையும் அறுத்திட்டு என்னை ஆளும் நாயகர்" என்று கந்த புராணத்தில் முருகனின் பெருமையைச் சைவர் குறித்தார். ஆகவே பாவத்தினின்றும் மானிடரை மீட்டுப் பரம் சேர்க்க பூமியில் திரு அவதாரம் செய்த நித்திய குமாரக் கடவுளாகிய கிறிஸ்துவின்மேல் விசுவாசிகளாகி மரித்துப்போகும் ஆத்துமாக்களுக்கு பாவத்திற்கு வரக்கூடிய ஆக்கினை மறுமையில்

கிடையாது. வேதமும் இதைத் திட்டமாய்ப் போதிக்கிறது. பாவி தன் பாவத்தை உணர்ந்து மெய்மனஸ்தாபப்பட்டு, தனக்காகப் பாவபிராயச்சித்தப்பலியாகி உயிர்த்த சர்வலோக ரட்சகராகிய கிறிஸ்துவினிடம் ஓடிவரும்போது, நிச்சயமாகவே இம்மையிலேயே அவன் பாவம் மன்னிக்கப்படுகிறது. பாவத்தைப்பற்றிய பேச்சோ நினைப்போ மோட்சத்தில் இல்லவே இல்லை என்று வேதம் போதிக்கின்றது.

"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்......நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்." எசா. 53 : 4, 5. என்பது, கிறிஸ்துவுக்குப் பல நூற்றாண்டுகளுக்குமுன், அவரைப்பற்றி ஞானதிருஷ்டிக்காரனாகிய ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தது.

பாவப்பலியான கிறிஸ்துவின் ரத்தத்தினாலும் கிருபையினாலும் விசுவாசிகளின் "பாவங்கள் சிவேரென்று இருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும். அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்." ஏசாயா 1 : 18 ; யோவான் 1 : 7-9, எசா. 43 : 25, எபிரே. 8 : 12.

"நான் நானே உன் மீறுதல்களை என்னிமித்தமாகவே குலைத்துப்போடுகிறேன் ; உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்." எசா. 43 : 25.

"அக்காலத்தில் இஸ்ரவேலின் அக்கிரமம் தேடப்பட்டாலும் அது காணப்படாதிருக்கும்." எரேமியா 50 : 20.

"நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமல் இருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." எபிரேயர் 8 : 12.

இத்தகையை ஆறுதலும், மன்னிப்பும், நல் நம்பிக்கையும் ததும்பிப் பொழியும் தேவ வாக்குத்தத்தங்கள் பாவிகளான யாவருக்கும் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே சைவரும் பிறரும் அங்கலாய்ப்பதுபோல இயேசுக்கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்தவர்கள், "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ அறிகிலேனே"

என்று ஐயமுற்று, அலமந்து அழிந்துபோகத் தேவையில்லை. நமக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிறவர்களுக்கு "ஏழுதரம் மட்டும் அல்ல, ஏழு எழுபதுதரம்" மன்னிக்கவேண்டும் என்று ஆண்டவர் போதித்தார். தமது சாதனையிலும் அவ்வாறே, தன்னை மரத்திலே தூக்கிக் கொலை செய்த பாதகருக்காக, "பிதாவே இவர்களுக்கு மன்னியும்" என்று மனமுருகி மன்றாடினார். ஆகவே, மன்னிக்கும் திரு லட்சண முள்ள நமது கர்த்தரால் நிச்சயமாகவே நாம் இம்மையிலேயே எல்லாப் பாவங்களும் நீங்கப் பெறுவோம். மறுமையில் நமது பாவங்களை அவரும் நமக்கு ஞாபகமூட்டார்; நாமும் நினைத்து வருந்தோம். ஆ! இத்தனை மாறாத மன்னிப்பை நமக்கு அளிக்கும்படி தமது கிருபையின் இருகரங்களையும் விரித்துக்கொண்டு, பாவிகளாகிய நம்மைத் தமது மார்போடு அணைத்து முத்தமிடக் கர்த்தர் ஆவலோடு காத்து நிற்கிறார். தம்மிடத்தில் வரும் எந்தப் பாவிகளையும் தாம் தள்ளுவதே இல்லை என்றும் வாக்களித்திருக்கிறார். எத்தனையாக பாவத்தில் முழுவதுமாகச் செத்து நாறிப்போன பாவக் குஷ்டரோகிகளுக்கும் கிறிஸ்துவினிடம் மன்னிப்பும், நித்திய ஜீவனும், சந்தோஷமும் உண்டு என்பதை மறவாதிருப்போமாக.

இனி, மறுமைக்குள் சென்ற விசுவாசிகளில் நடைபெறும் சில மாறுதல்களைப் பார்ப்போம். தந்தையாகிய கடவுள், நம்மெல்லாரும் தம்மைப்போல பூரணராகவேண்டும் என்று சித்தங்கொண்டிருக்கிறார்.

"நான் பூரண பரிசுத்தராயிருப்பதுபோல
நீங்களும் பூரண பரிசுத்தராயிருங்கள்"

என்பதே அவர் நம் ஒவ்வொருவருக்கும் இடும் அன்பின் கட்டளை. நாம், தமது ஏக குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவுக்கொப்பாய் மறுரூபமாகி, மகிமையின்மேல் மகிமையடையவே பிதா நம்மை அழைத்திருக்கிறார். ஆகவே வேதம் கூறுவதுபோல், இச்சையினால் உலகத்திலே உண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர்களாய் ஜீவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். விசுவாசம், தெய்வீக ஞானம், தெய்வீக தைரியம், இச்சையடக்கம், பொறுமை, மெய்த் தேவ பக்தி, சகோதர சிநேகம், பூரண அன்பு இவற்றோடு நாம் விளங்க வேண்டும். பரிசுத்தாவியின் கனிகளான அன்பு, சந்தோஷம், சமாதானத்துடன் நமது ஜீவியத்தை நிறைவேற்றவேண்டியவர்களாயிருக்கிறோம். இப்படியாகக் காலமெல்லாம் போதிக்கப்பட்டும்

பலத்த விசுவாசிகளாகி, ஆவியின் ஜீவியத்தில் வேகுவாய் முன்னேறிப் பூரணராகும்படி கடந்து போகிறவர்களிலும் கூட அற்பத்தனம், பொறாமை, எரிச்சல், சண்டை, பிரிவினை, புறங்கூறுதல், அவதூறு பேசல் ஆகிய பல பிசாசின் தன்மைகள் இடைக்கிடையே தோன்றுகின்றன என்பது நாம் அறிந்ததே. இவ்விதமாகக் கிறிஸ்துவின் சிந்தைக்கு மாறாகக் காணப்படும் இவைகளும், சகலவித அன்புத் தாழ்ச்சியும் நல்ல மரத்தில் பாயும் புல்லுருவிபோலும், கோதுமை மணியுடன் வளரும் களைபோலும் இருக்கின்றன. இத்தகைய தீய சுபாவத்தோடு நாம் பரிசுத்தராகிய கிறிஸ்துவின் சமூகம் அடையும்போது, அவர் தமது ஜோதியின் வெம்மையால் அவற்றை எரித்து, தகித்து, ஆத்துமாக்களைத் திரும்பவும் தமது பிரசன்னமாகிய அக்கினியால் புடமிட்டுத் தீமை நீக்கித் தமது பரிசுத்தம், அன்பு இவற்றிற்கு ஏற்கும் குணத்தையே மீதியாக விடுவார். கிறிஸ்துவின் முடிவான வேலை என்ன என்று வேதம் போதிக்கின்றது? விசுவாசிகளைக் கறைதிரை ஒன்றும் இல்லாதவர்களாயும், குற்றமற்றவர்களாயும், பூரணமாக்கப்பட்டவர்களாயும் பிதாவுக்கு முன் நிறுத்துவதல்லவா? ஆகவே மறுமைக்குத் தீய சுபாவத்தோடு செல்லும் விசுவாசிகளின் ஆத்துமாக்களிலுள்ள ஆகாதவைகளும், கசப்பானவைகளுமான சகலத்தையும் நீக்கிச் சுத்திகரிப்பதே முதல் வேலையாகும்.

"உன் தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே" என்று வேதம் எச்சரிக்கிறது. அக்கினியின் தொழில் என்ன? தன்னுடைய வெம்மையைத் தாங்கக்கூடாத உயிரற்ற எல்லாவிதக் குப்பை, சருகுகள் முதலியவற்றை எரித்துச் சாம்பலாக்குவதும்; தன் தழலின் அகோரத்தைச் சகிக்கக்கூடிய பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்களைச் சுத்திகரித்து, இன்னும் பதின்மடங்கு அதிகமாய் ஒளிவீசச் செய்வதுமே. அவ்விதமே மகாப் பரிசுத்தராகிய கிறிஸ்துவின் பிரசன்னத்தினாலாகிய ஒளிக்குமுன் நிற்கக்கூடாத சகல தீய சுபாவமும் நீக்கப்பட்டு, இம்மையில் நம்மில் வளரப்பெற்ற சகல தூய நற்சுபாவமும் முன்னிலும் பன்மடங்காக ஓங்கி ஜொலிக்கும்படி சுத்திகரிக்கப்படும் என்பதைத் திட்டமாக அறிவோமாக.

மறுமைக்குள் சென்ற விசுவாசிகள், இம்மை மறுமைகளில் நடக்கும் சகல நிகழ்ச்சிகளின் காரணம், முடிவு, முதலியவற்றைத் தேவஞானம் அறிகிறபடியே அறிந்துகொள்ளுவார்கள். நமக்கு நன்றாகப் பார்க்கக்கூடிய இரு கண்கள் நமது முகத்தில் இருந்தாலும்

சூரியன் வானினின்று எழுந்து உலகத்தில் பிரகாசித்தாலொழிய நாம் உலகத்தின் பொருள்களைத் தெளிவாகக் காணக்கூடாது. அது போலவே உலகத்தில் பிறந்த எல்லா மனிதரையும் பிரகாசிப்பிப்ப தாக வாக்களித்திருக்கும் தெய்வீக ஞான சூரியனாகிய கிறிஸ்துவால் போதிக்கப்பட்டாலொழிய நாம் உலகின் பலவித நிகழ்ச்சிகளைப் பற்றிப் பூரணமாய் அறிய முடிகிறதில்லை. "உன் வழிகள் என் வழிகளல்ல; உன் ஆலோசனைகள் என் ஆலோசனைகள் அல்ல" என்று நமது பிதா சத்தியவேதத்தில் கூறுகிறது நம் எல்லாருக்கும் தெரியும்.

"இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்." 1 கொரி. 13 : 12 என்று விசுவாசிகள் ஒவ்வொருவரையும்போல பரி. பவுல் கூறுகிறார். ஆம், கிறிஸ்துவுக் குள் மரித்து, மறுமையில் முகமுகமாய் அவரைத் தரிசித்து, நேராக அவருடைய தெய்வீக ஒளியால் நாம் போதிக்கப்படுவோம். அப் போது இம்மை மறுமையில் நேரும் பலவித காரியங்கள், கடவுள் மனிதரைப்பற்றிக் கொண்டிருக்கும் உண்மையான நோக்கம், மனித னுக்கு இப்பூமியில் நடக்கும் பலவித சோதனைகள், தீமைகளின் காரணம், அவற்றின் முடிவு முதலியவைகளை ஆண்டவர் அறிகிற படி நாமும் அறிந்துகொள்ளுவோம். இந்த உலகில் தேவனற்ற அநீதர் பெருகி வாழ்வதேன், கர்த்தருக்குள் பிழைக்கும் பக்தர் தாழ்வ தேன் என்றதுபோன்ற பலவித ஏற்றத் தாழ்வுக்கும் உண்மை யான காரணத்தை கண்டு, எல்லாவற்றையும் ஞானமாய் நடத்துகிற அதிசயமான கர்த்தரை அப்போது துதிப்போம்.

அன்றியும் இந்த அறிவினாலே நித்தியமானது எது, அநித்திய மானது எது; நிலைக்கக்கூடிய புகழைத்தருவது எது; நித்திய இழி வைத் தருவது எது; எல்லாம் அறிந்த வல்லமையுள்ள பிதாவின் திருப்பார்வையில் உயர்ந்தது எது தாழ்ந்தது எது என்பதையும் நாம் நன்றாய் அறிந்துகொள்ளுவோம். "மனிதன் முகத்தைப் பார்க்கி றான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" என்று வேதம் சொல் லுகிறது. அப்படியே இம்மையில் நாம் வெளித்தோற்றத்தைக் கொண்டே பெரும்பாலும் பலசாலிகள் இவர், பலவீனர் அவர்; தரித்திரர் இவர், தனவந்தர் அவர்; அழகும் அந்தஸ்தும் உள்ளவர்

இவர் ; அழகில்லாத சிறியர் அவர் என்று தீர்க்கிறோம். மறுமையிலோ இத்தகைய சிற்றறிவினாலாகிய பலவித அபிப்பிராயமும் மாறி, உட்கருத்தை உள்ளபடி அறிந்து களிப்போம்.

இவ்வாறு கர்த்தருடைய நீதியான செயலையும் அதன் முடிவையும் மறுமையில் நன்றாய் அறிகிற நமக்கு, நமது சகோதரரான பூரண விசுவாசிகளுக்கு நம்மைவிட மேலான பதவியும், பொறுப்பான உயர்ந்த திரு ஊழியமும் அங்கே கொடுக்கப்படும்போது எரிச்சலோ பொறாமையோ உண்டாகாது. நாம் நமதாண்டவராகிய கிறிஸ்துவை இம்மையில் நம்பினதற்கும், சேவித்ததற்கும், மறுமையின் பங்காக நாம் எதிர் பார்த்ததற்கும் மிகவும் அதிகமாகவே அவர் நம்மைப் பூரிக்கச் செய்திருக்கிறார் என்ற சந்தோஷத்தால் அப்போது அகமகிழ்வோம்.

ஆ! மறுமையைப்பற்றிய இத்தகைய தெளிவானதும் திட்ட வட்டமானதுமான தெய்வீக சுத்த திருப்போதனையைக் கிறிஸ்து தமது சத்தியவேதத்தின்மூலமாக அளிக்கிறார். இதை அல்லத் தட்டி, நமது சகோதரரான சைவரும் பிறரும் கோடிக்கணக்கான ஆத்துமாக்களை மயக்கம் நிறைந்த பூதத்தலைவனுடைய பொய்ப்போதகத்தால் நிரப்பி நரகிடைச் செலுத்துகின்றனரே அந்தோ! இவர்களுக்குத் தாங்கள் மரித்தபின் எங்கே செல்லுகிறோம், என்ன நிலையை அடைகின்றோம், எங்கே இருக்கின்றோம், என்ன செய்வோம் என்று இப்படிப்பட்ட காரியங்களில் எள்ளளவும் அறிவே இல்லை. ஆகையினால்தானே சைவத்திலும் பிறமதங்களிலும் மிக வாய்த் தேறின பெரியார்கூட மோட்சத்தைப்பற்றிப் பேசும்போது, அங்கே,

"நன்மையில்லை, தீமையில்லை, நாடுவது ஒன்றுமில்லை,
சீலமில்லை, தவமில்லை, சித்தமில்லை"
"நினைப்பு மறப்புகள் இல்லை"
"குணம் குறியில்லை"

என்றும்,

"சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா
யிருப்பதே மோட்சம்"

என்றும் இவ்வாறாகப் பயித்திய வேதாந்தம் கூறி வீணாக மாளுகின்றனர். அன்றியும் மோட்சம் என்பது சைவருடைய பிரமாணப்படி

சிவனது பாதங்களே. சிவன் தன் பக்தருக்கு மோட்சம் அளிக்கும் விதம், தன் பாதத்தை பக்தரது தலையின்மேல் வைத்துக் கீழே அழுத்துவதாம். அந்தோ அந்தோ! சிரசின்மேல் ஒருவன் அடி வைத்து மற்றவனை அழுத்தினால், அழுத்தப்பட்டவன்மேல் நோக்கியோ, அல்லது கீழே பாதாளம் நோக்கியோ எங்கே செல்வான்? இதை அறியாத அந்தகாரகும்படி நமது சைவ சகோதரரையும், பிறரையும் இப்பிரபஞ்சத்தின் தேவனான பூதகணத்தலைவன் எத்தனையாக இருளடையச் செய்திருக்கிறான் என்பதை நினைக்குந்தோறும் தேவ வைராக்கியம் நம்மைத் தகித்து உருகச்செய்கின்றது. நமது சத்திய நாதரோ, மோட்சம் என்பது பூரண அன்பும், பூரண ஞானமும் உள்ள நமது பரமதந்தை நமக்காக ஆயத்தப்படுத்தியிருக்கும் அழியாத வீடு என்று தெளிவாய்ப் போதிக்கிறார். அங்கே செல்லும்படி தாமே நம்மைத் தமது திருப்புயத்தில் அணைத்துத் தோளிலும், மார்பிலும் சுமந்தும், கைப்பிடித்து நடத்தியும் பத்திரமாய்க்கொண்டு சேர்ப்பதாக தாமே வாக்களிக்கிறார். அங்கே சகல தடைகளும் தீமையும் நீங்கப்பெற்று நீதியின் ஒளியால் பிரகாசிக்கப் பெற்று, அன்புள்ள ராஜாதிராஜனுடைய மக்களைப்போல எல்லா அறிவிலும் நல்ல சக்தியிலும் மேன்மேலும் பெருகி வளர்ந்து வாழுவோம் என்றும் திட்டமாய்க் காட்டுகிறார். அன்பரே! இவ்வுலகப் பாடுகள் மறுமையில் நமக்குக் கிடைக்கப்போகும் உன்னதப் பதவிக்கு ஏற்றதல்ல. ஆகவே கிறிஸ்துவைத் தனித்தனியே நமது ஆத்தும மீட்பராக ஏற்றுக்கொண்டு, அவரில் ஐக்கியப்பட்டு ஜீவித்து, மறுமையில் அவருடைய ராஜ்யத்துக்குப் பங்குள்ளவர்களாகக் கருத்துடன் இருப்போமாக. அன்றியும் நமது சகோதரரான பிறரையும் அந்த நித்திய ஜீவனுக்கும், நித்திய ஒளிக்கும் கொண்டுவருவதே நமது ஜீவியத்தின் நோக்கமாகக் கொள்ளுவோமாக.

"இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன்தாமே அவர்களோடுகூட இருந்து...அவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார். இனி மரணமுமில்லை. துக்கமும் இல்லை, அலறுதலும் இல்லை, வருத்தமும் இல்லை; முந்தின (துக்கங்கள்) எல்லாம் ஒழிந்துபோயின...சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம். நகரத்திற்கு வெளிச்சங் கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டியதில்லை; தேவனுடைய மகி

மையே அதைப் பிரகாசித்தது. ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு...இனி ஒரு சாபமும் இராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய முகத்தைத் தரிசிப்பார்கள்... அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்." வெளி. 21 : 3, 4, 22-25 ; வெளி. 22 : 3-5.

---

# V காவலிலுள்ள ஆவிகள்.

## 1. நரகப் பங்காளிகள்.

"அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பம் தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும்" யாக்கோபு 1 : 14, 15.

"பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்" எசே. 18 : 4.

"பாவத்தின் சம்பளம் மரணம்."

முந்திய அதிகாரத்தில் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்து, ஜீவித்து, மறுமைக்குள் சென்றவர்களின் நிலையை ஆராய்ந்தோம். இவ்வதிகாரத்தில் அவரைத் தமது ஆத்தும மீட்பராகவும், இரக்ஷகராகவும் ஏற்றுக்கொள்ளாமல், தமது சுய நீதியாலும், மனிதரின் மாய்கையான பொய் வேதங்களின் வாயிலாலும், ஆத்தும சுயாதீனம் அடைய முயற்சிப்போரின் மறுமையைப்பற்றிச் சிறிது பார்ப்போம். "பெருமையும் சிறுமையும் தான்தர வருமே" என்று நமது தமிழ்ப் பெரியார் கூறுவதுபோல், மறுமையில் காணப்படும் நித்திய ஏற்றத் தாழ்ச்சிக்கு அவரவரே பொறுப்பாளி என்பதை அடிக்கடி நாம் கருத்தில் வைப்பது நலம். மனித சுயாதீனமே அதற்குக் காரணம் என்பதை முன் பலமுறை கூறினோம். இப்பொழுதும் கூறுகிறோம். இவ்வுலகப் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு வித்தியாசம் செய்கிறதில்லை. தம் மக்கள் எல்லாரும் உயர்வுற்று வாழவேண்டும் என்பதே அவர்கள் வாஞ்சை. அதற்கான சந்தர்ப்பங்களையும், வழி வகைகளையும் எல்லா மக்களுக்கும் பட்சபாதமின்றி அளிக்கின்றனர். ஆயினும் அந்த நல்ல சந்தர்ப்பங்களை நல்ல வழியில் நல்லறிவோடு உபயோகிக்கும் நல்ல பிள்ளைகள் நல்ல

நிலையை அடைந்து, உயர்ந்து, கீர்த்தி பெறுகின்றனர். அப்படிச் செய்யத் தவறுவோர் சிறுமை அடைந்து இகழ்ச்சியுறுகின்றனர். வேதத்தின் உவமையில் கூறப்பட்ட கெட்ட குமாரனின் தந்தை, தன் இரு மக்களுக்கும் சமபாகத்தைத் தான் தயாரித்து வைத்திருந்தான். ஆனால் மூத்தவன் தன் பிதாவின் வீட்டில் தன் தந்தையின் பிரமாணத்துக்குள் அடங்கியிருந்து சுகம்பெற விரும்பினான். இளையவனோ தன் பிதாவின் சமூகத்தில் பிதாவுக்குக் கீழ்ப்படிந்திருக்க மனம் அற்று, பிரிந்துபோய் தன் சுய இச்சையில் கெட்டழிந்து பன்றிபோலானான்.

அவ்வாறே நமது பரம பிதாவும், யாதொரு வேற்றுமையின் நிழலும் இல்லாமல் மானிடராகிய தம் மக்கள் எல்லாருக்கும் ஒரே நல்ல பரம ஈவை அளிக்க ஆவலோடு காத்துக்கொண்டு, எல்லாரையும் மறுமையில் வாழ்விக்கப் பிரிய சித்தமுள்ளவராயிருக்கிறார்.

"துன்மார்க்கன் சாகிறது எவ்வளவேனும் எனக்குப் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்." எசே. 18 : 23.

> "பாவியினுடைய மரணத்தை அவர் விரும்பாமல், அவன் மனந் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறார்."
>
> "ஒருவனும் கெட்டுப்போகாமல் எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே தேவசித்தமாயிருக்கிறது"

என்று இப்படியாக வேதம் எத்தனையோ நூற்றாண்டுகளாகத் திரும்பத் திரும்பத் தொனித்துக்கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் தேவ சத்தத்திற்குத் தம் செவியைச் சாய்க்காத வணங்காக் கழுத்துள்ள அகங்காரிகள் மறுமையில் வேதனைக்கிடமான நரகத்தைத் தாமே சம்பாதித்துக்கொள்ளுகின்றனர்.

இனி, நரகத்திற்குத் தங்களை ஆளாக்கிக்கொள்ளுவோர் யார்? நமது சைவப் பெரியார், "பாவி என்ற பேர் படைத்துப் பாழ் நரகில் வீழாமல் ஆவி என்னும் சூத்திரத்தை அடைவது இனி எக்காலம்?" என்று ஏங்கித் தவித்ததைப்பற்றி முன் கூறினோம். இந்தக் கவிகளில் கூறப்பட்ட நரகத்துக்குக் காரணமான பாவமென்ன? ஆவியின் சத்தத்திற்குக் கீழ்ப்படியாமல் நடப்பதே. இது எந்த ஆவி? வேதத்தில் கூறப்பட்டிருப்பதாக நாம் முன் பார்த்த பரிசுத்த தேவா

வியே. உலகில் எத்தனையோ ஆவிகள் இருக்கின்றனவே, இவற்றில் எதை நாம் தேவாவி என்று தெரிவது? வேதம் கூறுகிறதாக நாம் முன் சொன்னபடி, நித்திய குமாரக்கடவுளாகிய "கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும்" தேவனால் உண்டானதே. ஏனெனில் அவராலே அன்றி வேறு ஒருவராலும் இரட்சிப்புக் கிடையாது என்பதை உலகம் நன்கறிந்து வருகிறது. எம்மதத்திலுமுள்ள "சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்" என்று கிறிஸ் திறைவன் கூறியது பொய்யல்ல. பிதாவினால் மானிட ரட்சிப்பின் அருள் மார்க்கத்தை வெளிக்காட்ட அனுப்பப்பட்ட மெய்த் தேவ குமாரன் இவரே, இவரே. இவர் வெளிக்காட்டிய தேவ அருளுக் கொப்பான அன்பின் மார்க்கத்தை உலகில் வேறொருவரும் காட்ட வில்லை.

> "என் வார்த்தைகளைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்" யோ. 5 : 24.

என்று நித்திய ஜீவனுக்குக் கர்த்தாவும் காரணருமான கிறிஸ்து, பல நூற்றாண்டுகளாக முழங்கிக் கூவி மானிடரை மோட்ச ஜீவனுக்கு அழைக்கிறார்.

இந்தத் திருச்சத்தத்தைக் கேட்டு அவ்வரை அண்டிக்கொள்ளுகிறவன், நித்திய இன்பத்திற்கென்று பிழைத்தான். அப்படிச் செய்யத் தவறுகிறவன் நித்திய வேதனைக்கென்று செத்தான்.

> "நான் எனப் பெயர்கொண்ட நச்சு மரம் நனி மிக முளைத்து, பொய்யென்ற வடுக்கள்போக்கி, செய்யும் பாவத்தைப் பரப்பி...கொடுமை அரும்பி, கடுமை மலர்ந்து, துன்பமாகிய காய் காய்த்து, பின்பு மரணம் பழுத்து, நரகிடை வீழ்ந்து" பட்டினத்தார்.

என்ற நமது சைவச்சான்றோர் கூறினதை உற்று நோக்குக. முந்திய அதிகாரத்தில் காட்டியபடி, கிறிஸ்துவே மெய்த்தேவ குமாரக்கடவுள் என்பதை வேதங்களைக்கொண்டு ஆராய மதியும் மனமும் அற்ற மானிடர் பலர் இருக்கின்றனர். சகல அசுத்தத்தையும் மோகத்தையும், கொலைபாதகங்களையும், வஞ்சகம் சூதினையும் செய்து காட்டி,

சாதாரண மானிடரிலும் கேடானதைச் செய்து, மரித்து மாண்டு போன கிருஷ்ணனும், அவனால் எழுதப்பட்டதாகத் தோன்றும் பொய்யும் முரணும் மலிந்த பகவத்கீதையும் எங்கள் ஆத்துமாவுக்குப் போதும்; கிறிஸ்துவும் அவருடைய அருள் வேதமும் எமக்கு வேண்டாம் என்று சேநக்குடன் கூறும் பலர் உளர். அதுபோலவே, சகலவிதப் பேய்த்தனத்தையும், அசுசிகளையும் தானே நடப்பித்து, மோகம், துர் இச்சை, தன் புணர்ச்சி, ஆண் புணர்ச்சிகளையும், தன்னை வழுத்துவோர் நெஞ்சத்தில் எழுப்பக்கூடிய துர் நீரோடும் மலத்தோடும் கலந்த ஆண்குறி பெண் குறியாகிய லிங்கபீடத்தைக் கடவுள் என்றும், ஜீவ வித்து என்றும் கூறி அதைக் கும்பிடக் கற்றுக் கொடுத்து, கணக்கற்ற அருமை ஆத்துமாக்களை நரக பாதாளத்துக்கு நேராக இழுத்துச்செல்லும் பூதகணத்தலைவனும் அழிவுக்குக் கர்த்தாவுமான சிவன் எங்களுக்குப்போதும்; கிறிஸ்துவைப் புறம்பே தள்ளுங்கள் என்று கூறும் வேறு பலரும் உளர். இப்படியே ஏனைய மதங்களைத் தழுவுவோரும், இவர் எல்லாம்; பட்டினத்தார் சொல்லுவதுபோல; "நான்" என்ற நச்சுமரமாகிய அகங்கார தருக்கள். இத்தகையோருக்கே "நரகம்" என்று சொல்லப்பட்ட இருண்ட வேதனை உலகம் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் திண்ணமாக அறிவோமாக. ஏனெனில் உத்தமமானவற்றை மனதார மறுப்போரும் வெறுப்போரும் சத்தியர்களல்ல. கிறிஸ்துவைப்போல் மாசற்ற உத்தம குணக்குன்றை வேறொரு மதத்திலும் காண்கிலோம்.

இனி நரகத்தின் தன்மை யாது? அசத்தியரும், அசுத்தரும் தங்களது மறுமைப் பங்காகத் தெரிந்துகொள்ளும் இடமாகிய நரகம் ஓர் இருண்ட பாதாளமாகும். இதற்குத் தலைவன் ஓர் கொடிய பாதாள அதிபதி. இவன் பிசாசு என்றும், ஆதிசர்ப்பம் என்றும், எமன் என்றும், சிவன் என்றும் பல பெரியோராலும் பலதிறப் பட்ட பேர் படைத்தவன். இதில் பாம்புகளும் கொடிய விஷ ஜெந்துக்களும் சம்மந்தப்பட்டிருக்கின்றன. இதனோடு சோழந்து விட்டெரியும் நித்திய அக்கினியும் சம்மந்தப்பட்டிருக்கின்றது. இதற்கு அதிகாரிகளான பூதங்களின் இயல்பும், அவற்றின் முக்கிய தன்மைகளுமாவன, பொய், மாயை, களவு, கொலை, கொடுமை ஆகிய சகலவித அசுத்தங்களுமாம். இதிற் செல்லுகின்றவர் நிலை வேதனையும், அழுகையும், பயங்கரமும் நிறைந்ததாகும். இதுவே சுருக்கமாக உலகின் சகல வேதங்களும் நரகத்தைப்பற்றிக் கூறிய தாகும்.

“ போல்லாத வாதனை என்னும், சத்த பூமி ” என்றார் நமது சைவரும். அவிசுவாசிகள் இவ்விடம் போவர் என்று வேதம் போதிக்கின்றது. இவரோடு இந்த இநள் சேறிந்த பூமிக்கு நேராகத் தம்மை நடத்துவோர் இன்னும் பலர் உண்டு என்று வேதம் கூறுகின்றது. இவர் யார்? கிறிஸ்துவே மாசற்ற தேவ உரு என்றும் மோட்சத்தின் ஒரே வழி என்றும் மனமாரத் தெரிந்தும், அவரை வெளிக்காட்டாமல், சத்தியத்தை அநியாயத்தினால் அடக்கிவைத்து, வீணான சடங்காசாரங்களையும், மனிதரின் பாரம்பரியப் பிரமாணங்களையும் மோட்ச ஏதுக்களாகப் போதிக்கும் குருடரான போலிக் குருக்கள், ஒன்றும் அற்ற ஏழையராயிருந்தும் எல்லாம் கற்ற ஞானியர்போல மாயம் பண்ணும் போலித்தலைவர், போலித் தேசத்தொண்டர், மடாதிபதிகள், போலிச் சாமிகள், போலி அத்தியட்சர், போலி ஊழியர் ஆகியவரும் இதில் அடங்குவார். மத். 7 : 15-23.

பின்னும் விதைக்கிறவனுடைய உவமையில் கண்டபடி, திருவசனத்தினிமித்தமும், தூய ஜீவியத்தினிமித்தமும் உபத்திரவமும் துன்பமும் வந்தவுடன் கிறிஸ்துவைவிட்டுப் பின்வாங்கிப் போவாரும் இதில் சேருவார். முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான். புத்தியற்ற கன்னியர் உவமையை உன்னி நோக்குக. மத். 5 : 11, 12.

அன்றியும், இறைவனால் அளிக்கப்படும் ஆத்தும இரட்சிப்புக்கான நற்சந்தர்ப்பங்களையும், ஆத்தும ஆதாயத்துக்கான நல்ல தாலந்துகளையும் வீணே கழித்துச் செல்லுபவரும் நரகப்பங்காளிகளாவார். மத். 25 : 30.

இன்னும், மாமிச அசுத்தம், மோகம், துர் இச்சை முதலிய எல்லாத் தீமையும் நரகத்திற்கே மானிடரை வழி நடத்தும் என்பது வேதபோதனை. முடிவாக நரகப் பங்காளிகளைப்பற்றி வேதம்,

“ பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரக ஆராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் ” என்கிறது. வெளி. 21 : 8.

அன்பரே! காலமெல்லாம் மெய்ப்போதகத்தைக் கேட்டாலும் சத்தியத்திற்குச் செவிசாய்க்காத நிர்விசாரிகளும் உண்டென்பதை

நாமறிவோம். " தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்," " ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது " என்று நமது பெரியார் கூறுவதுண்டு. ஐயோ! தீமைக்கு ஒருமுறை இடம் கொடுத்தோமானால் அது நம்மை எத்தனை எளிதாக அடிமைப்படுத்திக்கொள்ளுகின்றது! இதை யார்தான் தமது சொந்த அனுபவத்தில் அறியாதிருப்பர்? பாவம் மன்னிக்கப்படும்படி, பாவநாசரும் பாவிகளின் நேசருமான இயேசுவண்டை திரும்பினால் சரி; இல்லாவிட்டால் அது வரவரக் கேடானவைகளை நாம் செய்யும்படி நம்மைத்தூண்டி, முடிவில் நரகக் கேட்டுக்கே வழி நடத்தும் என்பது திண்ணம். இரும்பு முதலியவற்றால் செய்யப்பட்ட ஆயுதங்களைப் பழக்கப்படுத்தாமல் வெகுகாலம் ஓரிடத்தில் போடுவோமானால், என்ன நடக்கிறது? துருப்பிடித்துக் காலம் ஆக ஆக மடித்து தூளாய்ப்போம். அப்படியே ஆத்துமாவை நித்தியத்திற்கு வழி நடத்தும் தெய்வீக சத்தமாகிய நல் மனசாட்சியை அடிக்கடி நன்மையிலும், சத்தியத்திலும், தூய்மையிலும் பழக்காமல் அசுத்தத்தில் நிலைக்கச்செய்தால் முடிவில் கேடுறும் அல்லவா? நமது நாட்டில் துர்நாற்றமுள்ள மலம் முதலிய கழிவுகளையும், அசுத்தத்தையும் கூடையில் வைத்துத் தம் தலையின்மேலும், இடுப்பிலும் தூக்கிக்கொண்டு போகும்போதே, பலகாரம், பழம் முதலிய தின்பண்டங்களைக் குதூகலத்துடன் அவர்கள் தின்றுகொண்டு போவதை நாம் பார்க்கலாம். அவர்களுக்குத் தாங்கள் சுமந்து செல்லும் அசுத்தத்தின் துர்நாற்ற உணர்ச்சியே கிடையாது. ஏன்? காலமெல்லாம் அசுத்தத்திலேயே பழகிவிட்டபடியால், அந்த மலத்திற்கும் தாங்கள் அருந்தும் இனிய பழத்திற்கும் யாதொரு வித்தியாசமே யில்லாதது போல் இருக்கிறது. ஆனால் நாமோ துர்நாற்றமுள்ள வஸ்து நமக்கு வெகு தூரத்தில் இருந்தாலும் மோப்பத்தினால் உணர்ந்துகொள்ளுவோம். அப்படியே அசத்தியத்திலும் சகலவித அநவநுப்பிலும் வெதுகாலம் பழகுகிறவர்களுக்கு நன்மை தீமையறியும் தெய்வீக சக்தி மாண்டு மறைகிறது. பின்பு துர்நாற்றத்திலே உழன்று கிடந்தாலும், தாங்கள் நறுமணச்சோலையிலே உலாவுகிறதாகவே அவர்களுக்கு மனோபாவனை. அதற்காகத்தான் நம்முடைய வேதம், " பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் " என்றும், ஞானேந்திரியங்களைத் தூய வழியில், துவக்க முதல் பழக்க ஜாக்கிரதைப்படவேண்டுமென்றும் போதிக்கின்றது. இத்திருப்போதகத்திற்குச் செவிசாய்க்காதோர் நரகப் பங்காளிகளாவது நிச்சயம்.

நரகம் என்பதற்கு வேதம் கொடுக்கும் போதனை என்ன? பாம்புகளில் பலவிதம் உண்டு. உயிர் கொல்லியான விஷம் நிறைந்த நாகப்பாம்பானது, எப்போதும் மறைந்துகொண்டு வசிக்கும். ஆனால் விஷமற்ற நீர்ப்பாம்போவென்றால் பயமின்றி வெளியில் வந்து உலாவும். அதுபோலவே, குற்றம் செய்த மனசாட்சியை உடையவர்கள் யாவரும், தங்களுடைய பாவத்தை ஒருவரும் காணாவிட்டாலும், தங்களுக்குள்ள ஒருவித அச்சத்தால் பீடிக்கப்பட்டு, மறைந்துகொண்டு திரிவர் என்பது உலகானுபவம். ஆதாமும், ஏவாளும் அதற்கு வேத உதாரணமாகும். தேவ கட்டளையை மீறினவுடனே "ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சன்னிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள்." ஆதி. 3 : 8 தன் எஜமானுக்கு விரோதமாக வஞ்சனை செய்த கேயாசி, தன்னைப் பாவதுஷ்டம் பிடித்ததும் தானே தன் ஆண்டவனின் சமுகத்தை விட்டுப்போனான். அப்படியே யூதாசும் சத்தியபரரைக் காட்டிக்கொடுத்ததினால் பாவம் செய்தபின் தனித்துப்போய் நான்றுகொண்டு செத்தான்.

---

## நரகவேதனை விளக்கம்.

மரிப்பதென்றால் என்ன? நமக்கு அருமையானவர்களிடமிருந்து பிரிந்துபோவதுதான். ஆத்துமா சாகிறது என்றால் என்ன? "இனியவர் கூட்டம் வீடே" என்றார் மோட்சத்தைப் பாடிய பெரியார். சொல்லமுடியாத பிரகாசமும் ஆறுதலும் நிறைந்த மோட்சத்தில் பக்தர்களோடு இன்பம் அனுபவிப்பதிலிருந்து பிரிக்கப்பட்டுப் பாதாளத்தில் தனித்து வேதனைப் படுவதே நரகத் துன்பம். பிரதம மின்சார ஸ்தலத்திலிருந்து மின்சாரம் ஒவ்வொரு வீட்டுக்கும் கம்பிகளின் வாயிலாகச்சென்று, வீட்டைப் பிரகாசிக்கச் செய்கின்றது. ஆனால் இடையிலே அந்தக் கம்பி அறுபட்டதானால் என்ன நடக்கிறது? வீடு இருளால் நிறைகின்றது. ஏன்? மின்சாரக் குறைவினாலோ? அல்ல. மின்சார உற்பத்தி ஸ்தானத்தில் ஏராளமான மின்சாரம் வேண்டியதற்கு மேலாகவே இருக்கின்றது. ஆனால் அதை அங்கிருந்துகொண்டு செலுத்துகின்ற கம்பி அறுபட்டதால் மின்சாரம் வீட்டிற்குள் பாய இடமில்லை; வீடும் இருளடைகின்றது. இதுபோலவே பாவம் செய்கிற ஆத்துமா, தனது ஜீவனுக்கு இருப்பிடமாகிய தேவனுடைய பிரசன்னத்திலிருந்து தன்னை அறுத்து நீக்

கிக்கொள்ளுகின்றது. பின்பு ஆத்துமா இருளடைந்து, இருண்ட ஜீவியமே பழக்கமாகி, இருண்ட உலகுக்கு முடிவில் தானே போகிறது.

சகோதரரே! இந்தப் பாவ அந்தகாரம் எத்தகையது என்பது, நாம் பரிசுத்தத்தில் பழகப்பழகவே தெரியவரும். நமக்குயிருக்கு உயிரான நண்பர், காதலர் இவர்களைவிட்டு ஒரு க்ஷணமும் நீங்கியிருக்க நாம் விரும்புகிறதே இல்லை. அப்படியே பலகாரணங்களின் பொருட்டு சில காலம் நீங்கி இருக்க நேர்ந்தாலும் பிரிவாற்றாமையால் நாம் படும் கடுந்துயர் நமக்கே தெரியும். தேவ அன்பை நசித்தவர்கள் தேவ பிரசன்னத்தைவிட்டுக் கொஞ்சமும் விலகியிருக்க விரும்பார். தேவனோடு மிகவாய் நெருங்கிப் பழகி ஐக்கியப்பட்ட பக்தனாகிய தாவீது,

“நீர் உமது முகத்தை என்னைவிட்டு மறைத்தபோது நான்
கலங்கி, இருளில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பானேன்”

என்று சங்கீதத்தில் பாடுகிறான். தாவீதின் வம்சத்தில் பிறந்தவரும், சர்வலோகத்தின் பாவத்தின் ஆக்கினையையும் மாசற்ற தமது இருதயத்தில் தாங்கினவருமான கிறிஸ்து, சிலுவையில் தொங்கும்போது பாவத்தின் சம்பளமாகிய மரண அந்தகாரத்தால் போர்த்தப்பட்டார். இது அவருடைய சொந்தப் பாவத்தினால் வந்ததல்ல; உலகின் பாவத்தால் சூழ்ந்த இருள்; இதனால் ஒரு க்ஷணப்பொழுது தமது அன்புள்ள பிதாவின் சமுகத்தை இழந்தார். உடனே கதறிக் கூவி,

“என் தேவனே, என் தேவனே என்
என்னைக் கைவிட்டீர்?

என்று சத்தமிட்டார். இதன் பூரண இரகசியத்தை இன்னும் ஒருவரும் அறியவில்லை. ஆனால் பாவமானது முடிவில் பராபரனுடைய ஜோதியுள்ள இனிய சமுகத்திலிருந்து பாவியைப் பிரித்து நித்திய பாதாள அந்தகாரத்தில் வைக்கும் என்பதும், அந்தப் பிரிவின் கொடுமையைச் சகிக்க முடியாதவனைப் பாவிக்கு நித்திய “அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்” என்பதும் மாத்திரம் தெளிவாய்த் தெரிகிறது.

நாங்கள் ஒருமுறை விழுப்புறம் என்ற ஊரில் கூடாரத்தில் தங்கியிருந்தோம். அங்கே ஓர் இடத்தில் இந்திய ஆங்கில ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து ஓர் விசேஷித்த தினத்தில், மிக விமரிசையாக அலங்கரிக்கப்பட்டு, மின்சார விளக்குகளால் ஜோதிமயமாக

விளங்கின ஓர் அறையில், மிக அழகாகத் தங்களை அலங்கரித்துக் கொண்டு நடனம் ஆடினர். இதை நாங்கள் பார்க்கும்படி சென்று, அறையின் உட்புறத்தில் ஓர் இடத்தில் அமர்ந்தோம். உள்ளே வரக்கூடாமல் வெளியே நின்று பார்த்துக்கொண்டிருந்தவர்களில் ஓர் எளிய சிறுவனும் நின்றுகொண்டிருந்தான். அவன் மிக அழுக்குப்பிடித்த கந்தை பொதிந்தவனும், துர்நாற்றத்தையுடையவனுமாயிருந்தான். அவன் எங்களைப் பார்த்து 'உள்ளே என்ன செய்கிறீர்கள்?' என்றுகேட்டான். 'நீயே வந்து பார்' என்று சொல்லி, அவன் கையைப் பிடித்துப் பலவந்தமாய் உள்ளே இழுத்துச்சென்று, அவனை ஓர் இடத்தில் நிறுத்த முயன்றோம். ஆனால் அங்கே மகாப் பிரகாசமாய் ஜொலிக்கின்ற அந்த அறைக்குள் சென்றதும், பையன் தன் அழுக்கு நிலையைக் குனிந்து பார்த்துக்கொண்டு, சில நிமிடங்களில் வெளியில் ஓடிவிட்டான். சகோதரரே! இது உலகானுபவம், இதைவிடச் சொல்லவொண்ணாத துக்கமும், வெட்கமும் நிறைந்திருக்கும் அசுத்தத்தோடு, பாவம் மன்னிக்கப்படாமல் மறுமையில் செல்லும் பாவியின் நிலை. ஆண்டவர் ஒருவரையும் தள்ளவே மாட்டார். ஆனால் தனது ஆத்துமா துர்நாற்றமும், கந்தையும் நிறைந்திருப்பதால், பாவி தானாகவே இனிய பிரகாசம் பொருந்திய நீதியின் சூரியனாகிய கிறிஸ்துவின் திருச்சமுகத்திலிருந்து நீங்கி, பரிசுத்தவான்களாகிய அன்பருலகைக் கிட்டாமல், நரகமாகிய துன்ப உலகையடைகிறான்.

வெகுநாட்களாக பெயர்க்கப்படாதிருக்கிற மரம், கல் இவற்றின் கீழே பலவித சிறிய பூச்சி புழுக்கள் அடைந்து வசிப்பதுண்டு. இந்த மரம், கல் முதலியவற்றை திடீரென்று நீக்கும்போது என்ன நடக்கிறது? இதன் கீழே மறைந்து வசித்த பூச்சிபுழுக்கள் கலவரப்பட்டு, திகிலினால் அங்கும் இங்கும் ஓடித் தங்களை மறைத்துக்கொள்ளக்கூடிய வஸ்துக்களைத் தேடி அலைகின்றன. இப்படியே, காலமெல்லாம் பாவம் கழுவப்பட தம்மிடத்தில் அழைத்தும், செவி சாய்க்காமல், தன் இருதயக் கடினத்திலும் பாவத்திலும் மரித்துக் கெட்டழிந்து மறுமை செல்லும் அவிசுவாசிகளுக்கும் நடக்கும். ஆண்டவர், தமது இரண்டாம் வருகையைப் பற்றிய போதனையிலும் இத்தகைய பாடத்தைக் கற்பித்திருக்கின்றார். மனுஷகுமாரன் மகிமை பொருந்தியவராய்த் திரும்ப வரும்போது அவரை விசுவாசியாத பலர் அவருடைய பிரசன்னத்தின் அகோரத்தைக் கண்டு, அந்த மகா தெய்வீக ஒளிக்குமுன் நிற்கக் கூடாதவராய், "மலைகளேஎங்

களை மறைத்துக்கொள்ளுங்கள், குன்றுகளே எங்கள்மேல் விழுந்து, குமாரனின் கோபத்திற்கு மறைவாக எங்களை மூடிக்கொள்ளுங்கள்'' என்று அலறிக் கதறுவார்கள் என்று சொன்னார். அது அப்படியே ஆகும். சத்தியம்.

'நரகம்' என்ற இடத்தைக் குறிக்கும் வார்த்தை இரண்டு அர்த்தம் கொடுக்கும் என்று, ஆராய்ச்சி வல்லார் கூறுகின்றனர். ஒன்று பாதாளம் அல்லது கீழ் உலகம்; மற்றொன்று ஆவிகளின் உலகம் என்பதாம். புதியேற்பாட்டில் ஹேடீஸ் என்றும், கேஹென்னா என்றும் இரண்டு கிரேக்கப் பதங்கள் நரகத்தைக் குறிப்பதாகும். அதற்கு முறையே பாதாளம் என்றும் மரித்தோரின் ஆவி தங்கும் இடம் என்றும் அர்த்தமாம். எருசலேம் நகரத்திற்குப் புறம்பே கேஹென்னா என்ற இடத்தில் புராதன காலத்தில் சிசுக்களை அக்கினி தேவதைக்குப் பலியிடும் கொடிய பழக்கம் இருந்ததாம். இப்பூதப் பழக்கம் நிறுத்தப்பட்ட பின்பு அந்த இடத்திலே, ஊரிலுள்ள அசுத்தக் குப்பை கூளங்கள் எறியப்பட்டதாம். அன்றியும், இறந்த மிருகங்கள், கொலைத்தண்டனை பெற்று மாண்டோரது சரீரம், இவற்றை எறியவும் இந்த இடம் உபயோகப்பட்டது. இங்கே அக்கினி சதா எரிந்தபடியே இருக்குமாம். எருசலேமுக்குப் புறம்பே இருந்த இந்தத் தீராத அக்கினி எரியும் அசுத்தக் குப்பைக் குழியிலிருந்து தான் ஆண்டவர் நரகப்படத்தை உவமையாக போதித்தார் போலும். "அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலும் இருக்கும்'' என்று அன்பின் மூர்த்தியே கூறுவாரர்கில் நரகத்தின் வேதனையை யாரால் விளக்கக்கூடும்?

ஐசுவரியவானை ஆத்தும தரித்திரனைப்பற்றி ஆண்டவர் குறித்த உவமையைக் கவனிக்க. அவன் "பாதாளத்திலே (தான்) வேதனைப் படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும், அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிச் சுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்.'' லூக். 16 : 14.

இங்கே குறிக்கப்பட்ட வேதனை என்ன? வேதத்தில் பலதரம் இந்த நரகவேதனை குறிக்கப்படுகின்றது. இவ்வேதனை பலதிறப்

படுகின்றது. ஒரு கொடிய பிணியால் வரும் தாங்கமுடியாத வேதனை, பிரசவவேதனை, புயல் காற்றில் தண்டு வலித்தலினால் வரும் வேதனை, பிறரால் துன்புறுத்தப்படுவதால் வரும் மனோ வேதனை, சின்றச்சாலைத் தலைவனைக் கண்டமாத்திரத்தில் கைதிகளுக்கு இருக்கும் வேதனை, சர்த்தானால் கலியுக இறுதியில் உலகத்துக்கு உண்டாகப்போகும் கொடிய வேதனை, பாபிலோனின் மகா பயங்கர முடிவின் வேதனை, நித்திய நியாயத்தீர்ப்பில் வரும் பாவ தண்டனையின் வேதனை, இருதயக் கொதிப்பினாலும் ஆத்திரத்தினாலும் உண்டாகும் நாவரட்சி ஆகிய இத்தகைய பொருளைக் கொடுக்கின்றது, வேதம் கூறும் நரகவேதனையைக் குறிக்கும் தொடர். இதை வாசிப்போர் சிந்திப்பார்களாக.

இது நித்திய வேதனையோ என்று சிலர் கேட்கலாம். தமது மக்களாகிய மானிடரைத் தமது அன்பைவிட்டுப் பிரித்துப் பாவத்தில் விழப்பண்ணின ஆதி வலுசர்ப்பம் என்று சொல்லப்பட்ட பூதத் தலைவனுக்கும் அவனுடைய பூதகணங்களுக்கும் இது நித்திய நரக வேதனையாக இருக்கலாம். இந்தப் பூதகணங்களுக்காகவே பாதாளம் நியமிக்கப்பட்டது. ஆனால் மானிட ஆத்துமாக்களைப்பற்றிய விஷயத்தில் சிருஷ்டிகராகிய அன்பின் சொரூபியான அருள்நாதர் அத்தகைய கொடிய தண்டனையில் நித்தியமாக அவர்களை விட்டிருப்பாரென்று நினைக்கக்கூடவில்லை.

பாதாளத்திலும் பாவமன்னிப்பு உண்டா? நாம் அடிக்கடி பார்த்ததும், சத்திய வேதம் தெளிவாய்க் காட்டுவதுமான பூரண தேவ அன்பின் இலட்சணத்தின்படி பார்த்தால் பாவமன்னிப்பு அருளப்படலாம் என்று தெரிகிறது. ஆனால் மானிட இருதயக் கடினத்தை நோக்கும்போது, மனந்திரும்பி, பாவத்திற்காக மெய் மனஸ்தாபப்படுவது நரகத்தில் உண்டாகுமோ என்பது சந்தேகந் தான். மெய்மனஸ்தாபம் உண்டானாலன்றி பாவமன்னிப்பு எப்படிக் கிடைக்கும்? வெளிப்படுத்தின விசேஷத்தில் பரிசுத்தவான்கள் எடுத்துக்கொள்ளப்பட்டபின், பூமியிலே பதினாலுவிதமான கொடிய சோதனைகளும், வேதனைகளும் பூமியின் அவிசுவாசிகளான கோத்திரத்தாருக்கு நேருகிறதை நாம் பார்க்கிறோம். அன்பின் அழைப்புக்குச் செவிகொடாத வணங்காக் கழுத்துள்ள முரட்டுப் பிள்ளைகளைத் தண்டனையின்மூலமாகவேனும் சத்தியத்தைப் பின்பற்றச் செய்கிறோம் அல்லவா? அப்படியே உலக மீட்புக்கென்று அனுப்பப்பட்ட தமது திருக்குமாரனாகிய கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவருடைய

இரத்தத்தால் பாவமறக் கழுவப்பட்டு, அவரால் பரம வீடு அடையும் படி பூலோகத்தாரை எத்தனையோ நயமான அன்பின் வகையில் ஆண்டவர் திரும்பத் திரும்ப மன்றாடுகிறார். இதற்குத் தமது இருதயத்தை மூடிக்கொள்ளுவோரை தண்டித்தேனும் தம்மை விசுவாசிக்கும்படி செய்து, வீடுசேர்க்கவேண்டுமென்று கருதியே அத்தகைய வேதனைகளை வரவிடுகிறார். ஆனால் முடிவில் அத்தனை கொடிய தண்டனைக்கும்கூட அசையாமல் இருதய அந்தகாரத்தால் கட்டுண்டவர்கள் சிலர் இருக்கின்றனர் என்று வெளிப்படுத்தின விசேஷத்தில் பார்க்கிறோமே. அவர்கள் மனஸ்தாபப்பட்டு மனந்திரும்புகிறவர்களாக அல்ல, மகிமையின் அதிபதியான கிறிஸ்துவைச் சபிக்கின்றவர்களாகவே முடிவுமட்டும் காணப்படுகின்றனர்.

ஆகவே கிறிஸ்துவின் அன்பு நேற்றும், இன்றும், என்றும் மாறாதது. அவர் 99 ஆடுகளைப் பாவத்திலிருந்தும், பாதாளவேதனையிலிருந்தும் மீட்டு ரட்சித்து, ஒரே ஒரு ஆடு தவறிப்போனாலும் அதையும் தேடி வீடு சேர்க்கும்வரையில் இளைப்படையாத மட்டற்ற அன்புள்ள கர்த்தர். தாம் மரணவாயிலைக் கடந்து மூன்றுநாள் பரதீசிலிருக்கும்போதும், அங்கேயும் பாதாளலோகத்திற்குச் சென்று, தம்முடைய அன்பின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் என்று வேதம் கூறுகின்றது. பாதாளத்தின் திறவுகோலும் அன்பின் சொரூபியாகிய சாந்தமூர்த்தியான அவரிடத்தில்தான் இருக்கிறது. ஆகவே அவர் எக்காலத்திலும் மனந்திரும்பும் பாவியை மன்னித்து இன்பம் அளிக்கக் காத்துக்கொண்டிருப்பார் என்பது திண்ணம். ஆயினும் இம்மையில் இந்த தெய்வீக அன்பை அல்லத்தட்டிக்கொண்டே மரித்து, முடிவில் பிசாசோடும், அவனுடைய தூதரோடும் நித்திய ஆக்கினையை அடைந்து அக்கினிக் கடலில் வேதனைப்படுவோரும் சிலர் இருந்தே தீருவார் என்று இவ்வுலக இயற்கைப் பிரமாணம் திட்டமாய்ப் போதிக்கின்றது. சத்தியவேதமும் அதை உறுதிப்படுத்துகின்றது.

"பெற்றோரெல்லாம் பிள்ளைகளல்ல" என்பது நமது தமிழ்ப் பெரியார் கூற்றாகும். அப்படியே ஆத்தும விஷயத்திலும் தமது மக்களில் சிலரையேனும் சிருஷ்டிகரான தந்தை நித்தியமாக இழக்க நேரிடுவது ஆச்சரியமல்ல. மலையில் உற்பத்தியாகும் எல்லா ஆறுகளும் கடலில் விழும்வரையில் ஓடுகிறதில்லை; சில இடையிலேயே வறண்டு, இல்லாமற்போகின்றன. கனிமரங்களாக இயற்கை

காட்டுகிற மரங்களில், சில கனிகொடாமல் வறட்டு அல்லது மலட்டு மரமாகின்றன. இப்படிப்பட்டவற்றை நெருப்புக்கிரையாக்கிவிடுகிறோம். கோதுமையோடு களைகளும் இருக்கின்றன; இக்களைகளைப் பறித்து அடுப்பில் போடுகிறோம். கோதுமையை தூற்றி அதிலே சேரும் பதரை அடுப்பில் போட்டு எரிக்கிறார்கள். ஒவ்வொரு வருட முடிவிலும் நாம் நமது வீட்டுச் சாமான்களையும், துணிகளையும் சோதிக்கும்போது, சிலவற்றை வேண்டாம் என்று குப்பையில் எறிகிறோம். இப்படியாக எத்தனையோ ஏராளமான திருஷ்டாந்தங்கள் நமக்கு உண்டு. இதுபோலவே மறுமையின் போராட்ட முடிவில், முடிவு பரியந்தம் ஆசைத் தந்தை நயத்தினாலும் பயத்தினாலும் ஏவியும், மனந்திரும்பி ஒளியைப் பற்றிக்கொள்ளாத பாவ ஆத்துமாக்களும் இருப்பர். லோத்தின் மனைவியைத் தேவதூதர் அன்பினால் பலவந்தம்பண்ணி, கையைப் பிடித்து, சோதோம் கொமோராவின் தண்டனைக்குத் தப்பும்படி தீவிரமாய் இழுத்து ஓடினார். என்றாலும் அவர்களையும் திமிறிக்கொண்டு அவள் திரும்பிப் பார்த்து உப்புத் தூண் ஆனாளே. அப்படியே கேட்டின் மகனாகிய யூதாசை, அன்பும், பொறுமையும் நிறைந்த ஆண்டவர் எத்தனையாகத் தம்மோடு கூடவே வைத்து போஷித்துப் போதித்து, பலமுறை எச்சரித்து, தம்மைக் காட்டிக்கொடுத்த அந்தட்சணமுங்கூட அவனை மெய் மனஸ்தாபத்திற்குத் தூண்டும் திருநோக்கத்தோடு "சினேகிதனே" என்றார். ஆனால் அவன் மனந்திரும்பி பேதுருவைப்போல பாவ மன்னிப்பை அடைவதை விட்டு நான்றுகொண்டு செத்தானே. இரண்டு கள்ளரில் ஒருவன் கடைசிமட்டும் ஆண்டவரைத் தூஷித்து இறந்தானே. இந்த சரித்திரங்களெல்லாம் எதைக் காட்டுகின்றன? நித்திய அக்கினிக்குத் தங்களை இரையாக்கும்படி, பாவத்தையும் அசத்தியத்தையும் விட்டு மனந்திரும்பி கிறிஸ்துவாகிய பாவநாசரைப் பற்றிக்கொள்ளாமல் சிலர் முடிவுமட்டும் இருப்பார்கள் என்ற உண்மையையே.

அன்பரே! நரகத்தில் எத்தனைபேர் இருப்பார்கள், நரகவேதனை எத்தனை காலம் இருக்கும் என்றித்தகைய பிரயோஜனமற்ற வினாக்களை நாம் கேட்டுக்கொண்டு காலத்தைப் போக்காதிருப்போமாக. நரகத்தை மறுமையில் நமது பங்காக்குகிறவர்களாக இம்மையில் ஜீவிக்காமல், தூய நற்கந்தத் தருவும் மறுமையின் கர்த்தாவுமான கிறிஸ்து இயேசுவைப் பற்றிக்கொண்டு, பாவம் மன்னிக்கப்பட்டவர்களாய்ப் பரமபிதாவின் வீடுசேர்ந்து இன்புறுவதிலேயே நாம் கருத்தா

யிருப்போமாக. கிறிஸ்துவை அறியாத நமது ஏனைய சகோதரரை யும், கிறிஸ்துவண்டை கொண்டுவந்து, இப்படியாக நரகத்தின் தலைவனோடு நித்திய ஆக்கினையை அடையாதபடி எல்லாரையும் மோட்ச பாதைக்குத் திருப்பும்படி கிறிஸ்துவோடு ஒத்துழைப் போமாக.

"தீங்கனுபவி; சுவிசேஷகனுடைய வேலையைச் செய்."

---

# VI. உயிர்த்தெழுதல்

## உலக நம்பிக்கை

"நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன்."

"பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேக ரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக் கும் விழித்தெழுந்திருப்பார்கள்." தானி. 12 : 2.

மரித்தோரின் உயிர்த்தெழுதலைப்பற்றி நம்மில் யாருக்கும் ஐயம் சிறிதேனும் இராதென்று நம்புகிறேன். நமது சத்தியவேதம் இவ் வுண்மையைப்பற்றி மகா தெளிவும் திட்டவட்டமானதுமான சுத்த போதனையை அளிக்கின்றது. இப்போதனை உலகிலுள்ள ஏனைய மதாசிரியருக்கும் பொருத்தமானது. அற்றின் என்ற கிரேக்கர் தலைவன், ஓடின் என்ற ஜர்மானிய கடவுள் தலைவன்; உறியாசிந் தால் என்ற வீரர் முதலியவரின் உயிர்த்தெழுதலைப்பற்றி அவரவருக் குரியவரால் பேசப்படுகின்றது. இதின் உண்மை எதுவாயிருப்பி னும், உயிர்த்தெழுதலைப்பற்றிய சந்தேகம் எம்மதத்தினருக்கும் இல்லை என்பது தேற்றம்.

எகிப்தியர், சீனதேசத்தார் முதலிய கீழ்த்தேச மக்கள் மரித்த தம்முடையோருக்கு நீர்க்கடனாற்றல் முதலிய பழக்கமும் இந்த உண்மையை ஒருவாறு விளக்குகின்றது. நமது தமிழ்ப் பெரியார், ஞானிகள், துறவிகள் யாவரும் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை வைத் திருந்தனர். "ஆரமர் செய்துளாரைக் (கொன்று) உயிர் நல்கி" என்றார் கந்தபுராண நூலார். "சுட்டம் முடிவில் சுட்டு எலும்பா கும், ஆதலால் உடலுறு வாழ்க்கையை உள்ளுறத் தேர்ந்து நினை மின்" என்றார் திருமூலர். 'ஒழுக்கு இயல் அருந்தவத்து உடம்பு

நீங்கினர் அழிப்பரும் பொன் உடம்பு அடைந்தது ஒப்ப " என்றார் திருத்தக்க தேவர். " தேகம் சித்திபெற ஜீவன் காயசித்திபெற்று " என்றார் தாயுமானவர். ' அடியேமோடும் நின்னொடும் பிரிவின்றி வடிவாய் நின்மலர் மார்பினில் வாழ்கின்ற " என்றார் வைஷ்ணவப் பெரியார்.

இவ்வாறு உலகின் கற்ற ஞானியரும், கவிகளும் கொண்டிருந்த இந்த உறுதியான நம்பிக்கை இயற்கையாலும் முத்திரிக்கப் படுகின்றது. இலையுதிர் காலத்துக்குப் பின் தோன்றும் தாவரங்களின் புதிய உயிர், புதைக்கப்பெற்ற நல்ல வித்துக்கள் புத்துயிர் பெற்று முளைத்தல் ஆகிய நிகழ்ச்சிகள் இதற்கு உதாரணம். மரித்தோரின் உயிர்த்தெழுதலைப்பற்றி வேதகால பக்தர் எள்ளளவும் சந்தேகம் கொண்டாரில்லை. வாழ்விலும், தாழ்விலும் அவருக்கு இவ்வுயிர்த்தெழுதலின் நம்பிக்கையே உற்சாகத்தையும், நீங்காத சமாதானத்தையும் அளித்தது. ஆதி. 22 : 5; ஏசா. 26 : 19; ஓசியா 13 : 14; யோபு 19 : 26. தற்கால மனநூல் வல்லாரின் ஆராய்ச்சியும் இதை மிகவும் உறுதிப்படுத்துகின்றது.

இனி சத்திய வேதத்தில் இருவித உயிர்த்தெழுதலைப்பற்றிப் பேசப்படுகின்றது. பாவத்துக்குச் செத்து நீதிக்கென்று எழும்பும் கிறிஸ்துவின் விசுவாசிகளுக்குச் சம்பவிக்கும் முதலாம் உயிர்த்தல். இது " மேன்மையான உயிர்த்தெழுதல் " (எபிரே 11 : 35), " நீதிமான்களின் உயிர்த்தெழுதல் " (லூக். 14 : 14), " பூரணராக்கப்பட்ட நீதிமான்களின் உயிர்த்தெழுதல் " (எபிரே. 12 : 33), " ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற விசுவாசிகளின் உயிர்த்தெழுதல்," " புத்திரசுவிகாரம் " அடைந்தவரின் உயிர்த்தெழுதல் (பிலி. 3 : 10, 11), என்று பலவாறு கூறப்படும். இக்காட்சியையே பத்முதீவில் பரி. யோவான் ஞானதிருஷ்டியில் கண்டு, " முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும், பரிசுத்தவானுமாயிருக்கிறான். இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. இவர்கள் தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடேகூட ஆயிரம் வருடம் அரசாளுவார்கள் " என்றார். வெளி. 20 : 4-6.

" கிறிஸ்துவே நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார் " என்று வேதம் போதிக்கின்றது. சகோதரரே, கிறிஸ்துவின் உயிர்த்

தெழுதலைப்பற்றி நாம் விரிவாய்ப்பேச தேவையில்லை. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தேசகால வர்த்தமான சரித்திரத்தில் உலகோர் காண நடைபெற்ற ஓர் சம்பவமாகும்.

"உமது பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" என்று பக்தனாகிய தாவீது கிறிஸ்துவைப்பற்றி, அவர் பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் உரைத்தான். அந்தத் தீர்க்கதரிசனப் படியே கிறிஸ்து மரித்து, பின் மூன்றாம்நாள் உயிரோடு எழுந்தார். இவர் இப்படி உயிரோடு எழுந்ததை அக்காலத்தில் அவரை சிலுவை யில் அறைந்து கொன்ற சத்துருக்களும் எதிர் மறுக்கக்கூடாதிருந் தது. அன்றியும் கிறிஸ்து உயிர்த்தெழுந்ததற்குப் பற்பல பலமான ஆதாரங்களுண்டு. அதை விரிக்கிற் பெருகும். இங்கே நாம் விரும்புவது, கிறிஸ்து எப்படி முதற்பலனானார் என்றும், அதுவே அவருக்குள் மரிக்கும் பூரண விசுவாசிகளுக்கும் மாதிரியாகும் என் றும் மாத்திரம் பார்ப்பதே.

"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து நித்திரையடைந்த வர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால் மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதா முக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன் தன் வரிசையில் உயிர்ப் பிக்கப்படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து. பின்பு அவர் வருகை யில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." 1 கொரி. 15 : 20-23.

இத்தகைய உன்னத பதவியை அடைவதற்குக் கிறிஸ்து பூமி யில் செய்ததென்ன? கிறிஸ்து, எல்லாவற்றிலும் தம்மைத் தாழ்த்தி, தமக்குப் பிரியமானதையல்ல, தம்மையனுப்பின பரமபிதாவுக்குப் பிரியமான சித்தத்தையே கண்ணும் கருத்து மாய்ச் செய்து முடித்தார். யோ. 4 : 34, 6 : 38, 8 : 50, 55.

"தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று உலகின் பெரியோர் திட்டமாக கூறியிருக்கிறார். ஆகையால்தான் பிதாவானவர் "இவர் என்னுடைய நேசகுமாரன்; இவரில் பிரிய மாயிருக்கிறேன். இவருக்கு செவிகொடுங்கள்" என்று கிறிஸ்து வை உலகின் ஒளியாகவும் பூரண நியாயப்பிரமாணமாகவும், பூரண மனிதத்துவத்துக்கும் பூரண தேவத்துவத்துக்கும் மாதிரி

யாகவும், நித்திய ஜீவனுக்கு வழி காட்டியாகவும் ஏற்படுத்தச் சித்தங்கொண்டார். ஆனபடியால் மரித்தோரிலிருந்து எழுந்தவர்களில் முதன்மையான சர்வலோக ரட்சிப்பின் சேனாதிபதியாக இவரைப் பிதா நிறுத்தியிருக்கிறார். *கிறிஸ்துவுக்குள் மரிக்கிற யாவருக்கும் இவருக்கு நடந்தபடியே உயிர்த்தெழுதலில் நடக்கும்.* கிறிஸ்து குறிக்கப்பட்ட நாளில் உயிர்த்தெழுந்தார். உயிர்த்தபோது மகிமையுள்ள சரீரத்தோடு எழுந்தார். இம்மையில் மனிதசரீரத்தில் தம்மைக் கட்டியிருந்த தடைகளெல்லாம் நீங்கப்பெற்று, தாம் நினைத்தபடியெல்லாம் கூடியபொழுதில் தோன்றவும் மறையவும், பூட்டியிருக்கும் அறைக்குள் சென்று தம்மைக் காட்டவும், பல இடங்களில் பலருக்கு தென்படவும் தக்கதாக அரிய தெய்வீக சக்தியையுடையவராய் இருந்தார். இப்படியாக அருபியாகவும், ரூபியாகவும், அருபரூபியாகவும் தம்மை விளக்கினார். *இவரை அறிந்திருந்தவர்களுக்கு இவரே கிறிஸ்து என்பது தெரிந்தது.* உயிர்த்த சரீரத்தில் இருந்துகொண்டு தமது சீடருக்கு நாற்பது தினங்கள் போதித்தார். *உயிர்த்த பின் தம்முடையவர்களோடு தங்கி, சம்பாஷித்து அப்பம் புசித்து இப்படியாக தம்மை ஜீவனோடிருப்பவராக வெளிப்படுத்தினார்.* ஆகவே இவரை விசுவாசித்து, இவரில் நிலைத்து, இவருக்குள் மரிக்கும் நம்மெல்லாருக்கும் இவருக்கு நடந்ததுபோலவே நடக்கும். *இவரைப்போலவே நாமும் நமக்குரிய மகிமைக்கேற்ற சரீரங்களுடன் உயிர்த்து நம்முடையோருடன் கூடி ஐக்கியப்பட்டு இன்ப மகிழ்ச்சியால் பூரிப்போம். கிறிஸ்துவைப்போல* இம்மையில் பிதாவின் சித்தத்தையே நிறைவேற்றி, பாவத்துக்கு விலக்கித் தம்மை காத்துக்கொண்டு, பாவம், உலகம், மாம்சத்தோடு இரத்தம் சிந்தும் படியாக முடிவுபரியந்தம் போராடி மரிக்கும் யாவருக்கும் இவரோடுகூட "முதலாம் உயிர்த்தெழுதல்" என்னப்பட்ட மேலான பாக்கியத்தில் நிச்சயமாகவே பங்கு கிடைக்கும்.

*கிறிஸ்து மூன்றாம் நாளில் எழுந்தபோது அவரோடு எழுந்து அநேகருக்குக் காணப்பட்ட பரிசுத்தவான்கள், கிறிஸ்து மகிமை பொருந்தியவராக இரண்டாந்தரம் வரும்போது அவருடைய சத்தம் கேட்டு மரித்தோரை விட்டு எழுந்து ஆகாயத்தில் அவரைச் சந்திக்க செல்லும் பாக்கியவான்கள், கொடிய துன்பத்திலிருந்து கிறிஸ்துவின் இரத்த சாட்சிகளாக மரித்துப்போகும் பக்தர், பாவத்துக்குச்*

செத்தவராக, கிறிஸ்து வரும்போது உயிரோடிருக்கும் பக்தர் ஆகியோர் இந்த முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவார்களென்று வேதம் கூறுகின்றது.

"இதோ கடைசி எக்காளம் தொனிக்கும் அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும்....அப்போது மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டதென்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்." 1 கொரி. 15 : 51-54.

"கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடு வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல் அவர்களோடேகூட எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாக கர்த்தருடனேகூட இருப்போம்." 1 தெச. 4 : 15, 16.

"அல்லேலூயா, ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன், சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்" வெளி. 19 : 6-9.

இவைபோன்றவை முதலாம் உயிர்த்தெழுதலைப் பற்றிய சத்தியவசனங்கள். இந்த முதலாம் உயிர்த்தெழுதல் எப்பொழுது சர்வலோகத்துக்கும் உண்டாகும்? கிறிஸ்து பூமியின் இராச்சியபாரத்தை ஒப்புக்கொண்டு, சர்வலோகத்தின் ராஜாக்களும் அதிகாரிகளும் குடிகளும் பார்க்க உன்னத ஆசனத்தில் வீற்றிருந்து பூமியை சகல நன்மைகளாலும் சமாதானத்தாலும் நிரப்பும்படி இரண்டாந்தரம் வரும்போது இந்த உயிர்த்தெழுதல் நடக்கும். அப்போது ஆதாம் துவக்கி, அதாவது ஆதிமனிதன் துவக்கி கிறிஸ்து இராஜாவாக இறங்கும் அந்தக்காலம் வரையில் பூலோக முழுமையுமுள்ள சகல ஜாதிகளிலும் அவருக்குள் சத்தியவந்தர்களாய் மரித்த உத்தமரான

ஆண்கள், பெண்கள், பிள்ளைகளான யாவரும் உயிர்த்து எழுந்து அவரவர்க்குரிய சரீரங்களோடு விளங்கி, கிறிஸ்துவை ஆகாயத்தில் எதிர்கொண்டு சென்று சந்திப்பார். சிலர் சரீர உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிப்பார். ஆயினும் இதுவரையில் எல்லா மதங்களினின்றும் எடுத்துக்காட்டிய உதாரணங்களும், அவைகள் எல்லாவற்றையும் பூரணமாக ஒருங்கே தன்னிடத்தேயுள்ள நமது சத்தியவேதமும் அச்சாதனையை மதிப்பதில்லை. இம்மையில் நமக்கிருக்கும் பிணியும், பலவீனமும், சகலவித இழிவும் ஆகிய சகல சிறுமையும் நீக்கப்பட்டு, சாவாத ஜோதியுள்ள சரீரம் கொடுக்கப்படும். இதைப்பற்றி அறிய விரும்புவோர் 1 கொரி. 15ம் அதிகாரத்தையும் அதுபோன்ற மற்ற வேதப் பகுதிகளையும் வாசிப்பாராக.

இவர்கள் இவ்விதமாய்க் கர்த்தருடன் சேர்ந்து ராஜரீகரும், ஆசாரியக்கூட்டமுமாக இருந்து பூமியின் குடிகளை நீதி நெறிப்படி பூரண அன்புடன் ஆளுவார். ஆயிரவருட அரசாட்சி முடிந்தவுடன் தான் அவிசுவாசிகளான பூமியின் மனிதர் உயிரோடே எழும்புவர்.

"ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துகொண்டு வானத்திலிருந்து இறங்கி ...பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவும் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதை பாதாளத்திலே தள்ளி அடைத்து, அதன்மேல் முத்திரை போட்டான்...ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளை...யுத்தத்திற்கு கூட்டிகொள்ளும்படிக்கு புறப்படுவான்.

"அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துபோட்டது. மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் இருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான்." வெளி. 20 : 1, 2 7—10.

"சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது. மரணமும் பாதாளமும் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன." வெளி. 20 : 11, 13. மேற் கூறப்பட்ட திரு வசனங்களில் காட்

டப்பட்டவர்களே இரண்டாம் உயிர்தெழுதலுக்கு உரியவர் ஆவர். இவர் உயிர்த்தபின் நித்திய நியாயத்தீர்ப்பு உண்டாகும். அதன்பின் மரணமும் பாதாளமும் அக்கினி கடலிலே தள்ளப்படும். இதுவே இரண்டாம் மரணம். கிறிஸ்துவை சர்வலோக மீட்பரும் ஜீவாதிபதியும் மறுமையின் நித்திய ஒளியும் வழிகாட்டியுமாக விசுவாசியாதவன் யாராவது இருந்தால் அவனும் இந்த அக்கினி கடலில் தள்ளப்படுவான் என்று வேதம் கூறுகின்றது. வெளி. 20 : 14, 15.

"பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல குமாரனும் தமக்கு சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்...என் வசனத்தை கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினை தீர்ப்புக்குட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன். மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும். அதை கேட்கிறவர்கள் பிழைப்பார்கள்." யோ. 5 : 21, 24, 25.

"பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவராய் இருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராய் இருக்கும்படி அருள் செய்கிறார்.. பிரேதக் குழிகளில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் கலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள் நித்திய ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்." யோ. 5 : 26—29.

"நானே உயிர்த்தெழுதலும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்."

---

# VII. நியாயத்தீர்ப்பு

## 1. மறுமைச் சட்டம்.

"உமது வேதம் சத்தியம், உம்முடைய நீதி நியாயங்கள் எல்லாம் நித்தியம்."

"என்னுடைய வசனமே உங்களை நியாயந்தீர்க்கும்." நியாயப்பிரமாணம் இல்லாத புறஜாதிகள்......தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள். அவர்கள் மனசாட்சியும்கூட

சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு, குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப் பிரமாணத்துக்கேற்ற கிரியைகள் தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்..........தேவன், இயேசுக் கிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களை நியாயத் தீர்ப்புக்குக் கொண்டுவரும் நாளிலே இது விளங்கும்.'' ரோமர் 2 : 14-16.

நீதி நியாயத்தைப்பற்றிய அறிவு தேவசாயலான் மானிடத்துக்குரிய விசேஷ இலட்சணம். இது இம்மையோடு ஒழிந்துபோகும் தன்மையன்று. மறுமையிலும் ஆத்துமாக்கள், தாங்கள் பூமியில் செய்த கிரியைக்கேற்ப கடவுளால் நியாயந் தீர்க்கப்படுகின்றனர் என்ற சத்தியத்தை உலகின் எம்மதத்தினரும் நம்புகின்றனர். எல்லா மதங்களின் வேதங்களும் இதை ஒத்துக்கொள்ளுகின்றன.

சகோதரரே! நீதி நியாயங்களைப்பற்றி பலரும் பலவாறாகக் கருதலாம். ஒவ்வொரு தேசத்திற்கும் அததற்குரிய விசேஷித்த சட்டமுண்டு. அவைகள் அந்தந்த தேசத்தின் ஜனங்களுடைய நடையுடை பாவனையைப் பொருத்தது. ஒரு தேசத்தின் சட்டம், திடகாத்திரமற்ற சிசுக்களைப் பிறந்தவுடன் கொன்றுவிடவேண்டும் என்றிருக்கும்; இன்னொரு தேசத்தின் சட்டம், கருப்பத்திலுள்ள கருவை அழித்தாலும் கொலைக்குற்றமாகத் தீர்க்கும். ஒரு தேச சட்டம் பிரயாணிகளுக்கு அனுகூலமாக வண்டிகளும் வாகனங்களும் இடப்புறமாகப் போகவேண்டும், வழிநடப்போர் வலப்புறமாகப் போகவேண்டும் என்றிருக்கும்; மற்றொரு தேசத்தில் வாகனங்கள் வலப்புறமும் வழிநடப்பார் இடப்புறமும் போகும்படி தீர்த்திருக்கும். வலப்புறம் நடக்கவேண்டும் என்ற சட்டத்தைப்பெற்ற ஒருவன், இடப்புறம் நடக்கவேண்டும் என்ற சட்டமுடைய தேசத்திற்குச் சென்று, தன்தேச சட்டப்படி வலதுபக்கம் நடப்பானானால் என்ன நேரும்? அத்தேசத்தார் அந்த அந்நியனைத் தமது தேச சட்டத்தின்படியே குற்றவாளிகளாக்கித் தண்டனைக்குட்படுத்துவார் அல்லவா? குற்றவாளியும் தன் தேச சட்டத்தை நியாயஸ்தலத்தில் கொண்டுவந்து வழக்கிடக்கூடுமா? கூடாது. அதுபோலவே, மறுமையில் ஆத்துமாக்களை, அவரவருடைய வினைக்கேற்ப நியாயந் தீர்க்கும்படியான, சத்திய சட்டங்கள் உண்டு. அவைகள் மறுமைக் கரசராகிய மகாப் பரிசுத்த தேவனால் பூலோகம் முழுவதற்கும்

கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டப் புஸ்தகத்தின் நீதி நியாயங்களுக்கு, இம்மையில் சிற்றறிவுள்ள மனிதன் எழுதி வைத்திருக்கும் தேச சட்ட புஸ்தகத்தின் நீதி நியாயங்கள் கொஞ்சமும் வந்து எட்டத்தக்கனவல்ல. ஏசாயா 55 : 8, 9.

பரிசுத்தம் அசுத்தம், சத்தியம் அசத்தியம் என்பவற்றைப்பற்றி மானிடருக்கு இருக்கும் அறிவும், அபிப்பிராயமும் அவரவர் சிறுவமுதல் கற்றுப் பழகிய நூலுக்கேற்றது. "தாம் கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு" என்றார் நம் தமிழரும். ஆயினும் உலகின் சகல வேதங்களின் தாற்பரியத்தையும் சீர்தூக்கி ஆராய்ந்தார் யாவருக்கும் ஒப்பமுடிந்த சில தெய்வீக நியாயங்களை ஒருவரும் மறுப்பதில்லை. உலகில், மனநூல் வல்ல நிபுணரால் பிளான் எழுதப்பட்டு, கட்டிட வல்லாரால் தூக்கு நூல், சமகுண்டு முதலியவற்றின் உதவிகொண்டு மிக நேர்மையாய்க் கட்டப்படும் உயர்ந்த மாடமாளிகைகள் உண்டு. அப்படியே சாஸ்திர அறிவு சிறிதும் இல்லாத அறிவற்ற மனிதர் தங்கள் கண்களாலும் கைகளாலும் அளவு பார்த்துக் கட்டிய சிறு குடிசைகளும் உண்டு. இருவகைகளும் கட்டிடங்களே. இருவகைகளும் தங்களில் குடியிருப்போருக்கு ஏதோ ஒருவகையில் நிழல் தரக்கூடியவைகளே. ஆனால் முன்னதைத்தான் சாஸ்திர மேதாவிகள் சிறந்ததென்று தீர்ப்பார். அவ்வாறே தமிழ் வேதம் என்றும் ஆரிய வேதம் என்றும் ஒவ்வொரு பாஷைக்காரர் ஜாதியாருக்கு உரிய சட்டமாகிய வேதங்களுண்டு. ஆயினும் சர்வ சாதியாருக்கும் சகல தேசத்தாருக்கும் சகல பாஷைக்காரருக்கும் பொதுவும் பொருத்தமுமான உன்னத சட்டமாகிய திரு வேதமும் உண்டு.

"உலகெலாம் புகழ்ந்து ஓதுதற்கு அரிய" என்று சைவரும் பிறரும் தம் வேதத்தின் சிறப்பைக்கூறினால் கூறட்டும்; ஆயினும் இக்கூற்று ஆராய்ச்சி அறிவின்முன் நிற்காது என்பதை சில உதாரணங்களால் காட்டுவோம். மறுமை நிலையைப்பற்றி சைவர், "சிவ பக்தர் பாவம் பயிற்றினும் நரகில் விழார்." என்கின்றனர். நமது சத்தியவேதமோ கர்த்தருடைய பக்தரே ஏனையோரைப் பார்க்கிலும் மிகுந்த பரிசுத்த ஜீவியம் செய்யவேண்டும் என்று ஓயாமல் ஏவுகிறது. 1 பேது. 2 : 16 ; 4 : 17, 18 ; 5 : 3.

ஆத்துமாக்களுக்காக இறைவன் கொண்ட நீதியைப்பற்றிய இடங்களில் "சிவனை விட்டுச்செய்யும் நல்வினையும் தீவினையாம்.

ஆயினும் சிவன்மேலுள்ள பரிவால் பாதகத்தைச் செய்யினும் பணியாகிவிடும்" என்பர் சைவர். நமது வேதமோ "எந்த ஜனத்திலாகிலும் அவருக்குப் பயந்து நீதியைச் செய்கிறவன் அவருக்கு உகந்தவன் என்று கற்பிக்கின்றது. அப். 10 : 35 ; ரோ. 2 : 8-10; எசே. 18 : 26-36.

சத்தியத்தைப்பற்றிய போதனையில், "தீது பயப்பதான ஒரு பொய்யை நன்மை பயப்பதான மற்றொரு பொய்யால் மாற்றுதல் மேலோர் நிறுத்திய ஒழுங்கு" என்பர் சைவர். வேதமோ "உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள். இதற்கு மிஞ்சினது தீமையால் உண்டாயிருக்கும்" என்று எச்சரிக்கின்றது.

கடவுளுக்குச் செய்யும் திருப்பணிக்கான முறையில் சிவபக்தர் பிறரை வஞ்சித்தோ களவாடியோ, மாயம் பண்ணியோ மாணிக்கவாசகர் செய்ததுபோல் செய்யலாம் என்கிறார் சைவர். நமது வேதமோ பலியைப்பார்க்கிலும் இரக்கமும், அக்கிரமத்தோடே ஆசரிக்கும் வழிபாடுகளைப் பார்க்கிலும் தீமையை அகற்றுவதுமே கர்த்தருக்கு உவந்தது என்று திட்டமாய்ப் போதிக்கின்றது. ஏசா. 1 : 10-17.

இம்மை மறுமை யறிவுப்பிரமாணத்தைப்பற்றிச் சைவர், பக்தருடைய "அறிவை மயக்கி, இயற்கை நிகழ்ச்சியோடு ஒவ்வியதும் ஒவ்வாததுமான இந்திரஜாலம் செய்வதே சிவன் செயல்" என்கிறார். நமது வேதமோ கடவுள் தமது பக்தர்மேல் "ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியையும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியையும், கர்த்தருக்குப் பயப்படும் பயத்தையும் அருளும் ஆவியையும்" பொழிந்தருளுவார் என்று போதிக்கின்றது. விரிக்கிற் பெருகும்.

இதன்றி அவர் வேதம், அரசர், அந்தணர், ஆடவர், பெண்டிர், கற்றோர், கல்லாதார், உயர்ந்தார், தாழ்ந்தார் ஆகியவருக்கு ஏற்றபடி பலதிறப்பட்டது. ஆனால்,

"இதோ நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர். அவர்கள் சகல நாட்களிலும் எனக்குப் பயப்படும்படிக்கு அவர்களுக்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கட்டளையிட்டு...... நாட்டுவேன்." எரே. 33 : 27-29. என்று சர்வலோக சிருஷ்டி

கர், சர்வலோகத்திற்கும் ஒரே சமநிலைப் பிரமாணத்தையே அநாதி காலமுதல் திட்டம் பண்ணியிருக்கிறார் என்று நமது வேதம் கற்பிக்கிறது. ஏசாயா 23:2-3 ; 51 : 4.

இந்த அகில உலக தெய்வீக சட்டப் புஸ்தகத்தில் வெளிக்காட்டப்பட்ட நியாயங்கள் உலகில் பிறந்த ஒவ்வொரு மானிட இருதயமாகிய ஏட்டிலும் முத்திரிக்கப்பட்டிருக்கின்றது. இதை ஆராய்வார் அறிந்துகொள்ளுவார். இதைத்தான் வேதம்,

" மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார் ; நியாயம் செய்து இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்குமுன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதையல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் ?" மீகா. 6 : 8 என்று வினவுகின்றது.

இதுவரையில் பார்த்த தெய்வீக நியாயப்பிரமாணம், தெய்வீக மனிதப் பிரமாணம் ஆகிய இரு நித்திய சட்டப் புஸ்தகங்களைத் தவிர தெய்வீக விசுவாசப்பிரமாணம் என்ற நித்திய சட்டமும் உண்டு. இதுவே முந்திய இரு பிரமாணங்களைப் பார்க்கிலும் மெத்த விசேஷித்தது. ஏனெனில் முன் பலமுறை கூறியபடியும், மனுக்குலம் தன் சொந்த அனுபவத்தினால் அறிந்திருக்கிறபடியும் தன் சுயநீதியாலோ, சுயமுயற்சியாலோ தன் ஆத்தும மீட்பைத் தானே அடைய முடியாதென்று திட்டமாக உலகம் கண்டது. அதினாலேயே தன்னைப் பாவப் பிரமாணத்திலிருந்தும் மீட்டுப் பரன் வீடு சேர்க்கும்படியான அருள் குருவான மத்தியஸ்தனாகிய தேவ குமாரக்கடவுளை ஆவலோடு உலகம் எதிர்பார்த்திருந்தது. முன் நாம் பார்த்தபடி இம்மெய்த் தேவகுமாரன் வெளிப்பட்டார்.

வெளிப்பட்ட வேதப்பொருளாகிய அவரை விசுவாசிக்கவேண்டியது சத்தியமுள்ள எந்த ஆத்துமாவின்மேலும் விழுந்த கடமையாகும். இதை பக்தனாகிய பவுல் தனது ரோமர் நிருபத்தில் மிகத் தெளிவாய் விளக்குகின்றார்.

> " எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்குமுன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை......நியாயப்பிரமாணம் இல்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது ...அது கிறிஸ்து யேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் பலிக்கும் தேவநீதியே. விசுவாசிக்கிற எவர்கள்மேலும் அது பலிக்கும்,

*வித்தியாசமே இல்லை. எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்." ரோமர் 3 : 20-24.*

*என்பனபோன்ற வசனங்களைச் சிந்திக்க.*

ஆகவே நியாயப்பிரமாணத்தை யூதரைப்போல எழுத்தின் மூலமாக மட்டும் பெற்று அதின் பொருளாகிய கிறிஸ்துவைப்பற்றிக் கேட்கவோ, அறியவோ சந்தர்ப்பம் அருளப்படாமல் மறுமைக்குள் செல்லும் யாவரும், தாங்கள் அறிந்த நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவார். எழுத்தின் மூலமாய்ப் பெறாமலும், கிறிஸ்துவைப் பொருளாகக்கொண்ட சத்தியவேதத்தை ஒரு முறையேனும் கேட்கவோ, வாசிக்கவோ இம்மையில் சந்தர்ப்பம் அருளப்படாமலும் மரிப்பவர்கள் யாவரும் மறுமையில் தங்கள் இருதயத்திலுள்ள ஆவியின் பிரமாணத்தினால் நியாயந் தீர்க்கப்படுவார். கிறிஸ்துவையும் அவருடைய சத்தியவேதத்தையும் கேட்கவும் பார்க்கவும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டவர்கள் யாவரும் அதற்கேற்ப நியாயந் தீர்க்கப்படுவார் என்றறிவோமாக.

---

## 2. நியாயாதிபதி.

"பிதாவைக் கனம் பண்ணுகிறதுபோல எல்லோரும் குமாரனையும் கனம் பண்ணும்படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்குக் கொடுத்திருக்கிறார்." யோவான் 5 : 22.

*இவ்வுலகின் கண்ணுள்ள ஒவ்வொரு தொழில் துறையிலும், கல்வி இலாக்காவிலும் மனிதர் உத்தியோகம் பெறும்படி விதிக்கப்பட்டிருக்கும் சட்டம் என்ன? அந்தந்தத் துறையில் சென்று வினை புரிய விரும்புவோர் கற்று அறிந்து தேறும்படி, அந்தந்தத் துறையிலே கல்வியில் பேர்பெற்ற நிபுணரால் எழுதப்பெற்றிருக்கும் பல புஸ்தகங்களையும், சாஸ்திரங்களையும் முதலாவது கற்கவேண்டும். பின்பு கற்ற அறிவை அந்தந்தப் பகுதிக்கு உரிய பெரியோர் சோதிக்கின்றனர். இந்தச் சோதனையில் நன்றாகத் தேறியவர்களுக்கே,*

சட்டத்திலே குறிப்பிடப்பட்ட எல்லா வகையிலும் திருப்திகரமாக யிருந்தால் அந்தந்த இலாக்காவிலே வேலை செய்யும் உத்தியோகங் களையும் பதவிகளையும் அளிக்கின்றனர். அப்படியே மறுமையைப் பற்றிய தெய்வீக காரியங்களிலும்,

> "மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக் குரியவைகளை அறிவான்? அப்படிப்போல தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட் டான்......ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதா னிக்கிறான்." 1 கொரிந்தியர் 2: 11, 15.

என்று வேதம் சொல்லுகின்றது. ஆகவே ஆன்ம அறிவில் தேறிய வர்களாகமட்டுமல்ல, ஆவியின் ஜீவியத்தில் உலகம் முழுவதுக்கும் பூரண முன்மாதிரியாகவும், சர்வலோகத்தையும் ஆன்ம ஒளிக்குள் வழி நடத்தும் ஆற்றலுடையவர்களாகவும் தம்மை விளக்குகின்றவர் யாரோ, அவரே இந்த உலகத்தை விட்டு மறுமைக்குள் செல்லும் ஆத்துமாக்களையும் நியாயந்தீர்க்கும் உரிமையை யுடையவராவார்.

வேதம் கூறுவதுபோல் தந்தையாகிய பிதாவானவர், உலகமா னது, ஆத்தும வளர்ச்சியில் தேறி பக்திவிருத்தியடையும்படியே அங்கங்கே அப்போஸ்தலர்களையும், தீர்க்கதரிசிகளையும், போதகர் களையும், குருக்களையும், மடாதிபதிகளையும் ஏற்படுத்தினர். ஆயி னும் முன்னே நாம் பலமுறை பார்த்தபடி, மெய்த்தேவனுக்கும், அவரால் பூலோக ரட்சணைக்கென்று அனுப்பப்பட்ட ஒன்றான மெய்த் தேவகுமாரனுக்கும் உரிய தெய்வீக இரகசியத்தை அறிந்து போதிப்பதற்குப் பதில் அநேகர் அதற்குப் பகைஞரானார்கள். வேதம் எச்சரிக்கிறபடி அவர்கள் எல்லோரும் லௌகீக ஞானத்தினாலும் மாயமான தந்திரத்தினாலும் ஆன்மாக்களைக் கொள்ளைகொண்டு, மனிதர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாட்டையுமே தெய்வ அறிவாகப் போதித்தனர். இவர் போதனையைப்பற்றித் தான் வேதம்,

> "இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையை யும், மாயமான தாழ்மையையும் சரீர ஒடுக்கத்தையும்பற்றி ஞானம் என்கிற பேர் கொண்டிருந்தாலும், இவைகள் மாம் சத்தைப் பேணுகிறதற்கே யொழிய மற்றென்றிற்கும் பிரயோ ஜனப்படாது" கொலோசியர் 2: 23.

என்று கூறும்.

கிறிஸ்துவாகிய நல்ல ஆத்தும மேய்ப்பன், ஏனைய மதக் குருக்களையும், மதாசிரியரையும், சமய குரவரையும்போல அழிந்துபோகிறதாகிய இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல அழியாததும், மறுமைக்குள் வழி நடத்துகிறதுமான மெய்த்தேவ ஞானத்தையே போதித்தும் சாதித்தும், ஆத்துமாக்களுக்குப் பரம ஞானத்தை மிகத் தெளிவாகக் காட்டினார். அவர் "எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்." அதுமாத்திரமல்ல; இந்த ஆராய்ச்சியறிவைத் தமது பக்தர்களுக்கும் போதித்து, "ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்மந்தப்படுத்தி" உலகை போதிக்கும்படி அவர்களைத் திருச்சபையின் மெய்யான ஆத்தும மேய்ப்பராகவும், ஆசாரியர்களாகவும் ஏற்படுத்தினார். அந்த மேய்ப்பர்களே இன்றுவரையில் சர்வலோகங்களையும் மெய்த்தேவ அறிவால் நிரப்பி, மறுமைக்கரசாகிய கிறிஸ்துவண்டை அநேகரை வழி நடத்துகின்றனர் என்பதை நாமே நமது சொந்தக் கண்களால் கண்டு களிகூருகின்றோம்.

> "அரசன் தான் முதலில் பணிவுடையவனாகி அதன்பின் முறையே புதல்வரையும், மற்றை வினை செய்வாரையும், பணிவுடையவர்களாகப் பண்ணுவித்தல் வேண்டும். வேந்தன் தான் ஒழுகிக் காட்டாது பிறருக்கு உபதேசிக்கும் அளவில் திறனுடையனாய் இருத்தல் கூடாது"

என்று சுக்கிரநீதி நூலாசிரியர் கூறுவர். ஏனையோருக்கும் இது ஏற்கும். அவ்விதமே தேசச்சட்டம் அரசனுக்கு ஒரு மாதிரியாயும் ஆண்டிக்கு மற்றொரு மாதிரியாயும் இருக்கக்கூடுமோ? அப்படியிருத்தல் தகாதே; அவ்வாறே, தமது மக்களாகிய மனுவோருக்கு எழுதிக்கொடுத்திருக்கும் சகல சத்திய வழிகளையும், பரிசுத்த பிரமாணங்களையும்கர்த்தர் தாமும் அணுவளவும் மீறாமல் சாதித்துக்காட்டி, "நான் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவே வந்தேன்" என்று கூறுகின்றார். அவர் சகல நியாயப்பிரமாணத்தின்படியும் தான் போதித்தபடியே ஒழுகியும் சென்றார் என்பதை யார் மறுக்கக்கூடும்? சத்தியவேதம் முழுவதிலும் தாம் நடந்தபடியே தமது சீடரான போதகரும், சபையோரும் நடக்கத் தவறாதிருக்கக் கட்டளையிட்டும் இருக்கிறார். (பிலி. 2 : 3-8 ; எபிரே. 2 : 10-18 ; 4 : 15; 5 : 8-10 ; 13 : 14-17 ; ரோமர் 2 : 18-23 முதலிய திருவசனங்களைப் பார்க்க.)

இந்த நியாயாதிபதியின் திரு லட்சணங்களைப்பற்றி விரிவாக அறிய விரும்புவோர் பின் குறிக்கப்பட்ட திரு வசனங்களைப்போன்ற

ஏராளமான சத்திய வசனங்களைப் படித்தறியலாம். எரேமி. 32 : 19; 23 : 29; ஏசாயா 9 : 6, 7; 11 : 1, 5; 32 : 1, 16; 5 : 20-24.

இதுவரையிலும் கூறினவற்றிலிருந்து, பூலோகத்தார், மரணத்துக்குப்பின் மறுமையில் நியாயந்தீர்க்கும்படியாக, இம்மையிலேயே அவர்களுக்குப் போதனையும் வழிகாட்டியுமாக அளிக்கப்பட்ட நியாய சட்ட புஸ்தகம் கிறிஸ்துவின் வேதமே என்பது ஒருவரும் மறுக்காதபடி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

"நாம் யாருக்கும் குடியல்லோம்...நரகத்தில் இடர்ப்படோம்" என்று கூறி பொய்யும் மாயையுமான துன்மார்க்கத்தைப் பிறப்பித்து மனுக்குலத்தை நித்திய அழிவுக்கு நடத்தும் பூதகணத்தலைவனை நம்பி இறுமாப்புற்றிருக்கிற சகல ஜனங்களே, எச்சரிக்கை, எச்சரிக்கை. மரணத்துக்குப்பின் நீவிர் கற்றதும் கேட்டதுமான சகல வேதாந்த சித்தாந்த கொள்கைகளும் அறிவும் ஒன்றுக்கும் உதவாது என்பதை ஒரு ஷணப்பொழுதில் அறிந்துகொள்வீர். மனந்திரும்ப அது காலமல்ல. ஆகையால் சர்வலோக நியாயாதிபதியும், ராஜாதிராஜாவுமான கிறிஸ்துவாகிய மறுமைக்கரசை மறுமையில் முகமுகமாய்த் தரிசித்துத் தவித்து அலறுமுன் இப்பொழுதே, சங்கீதக்காரன் ஆலோசனையைக் கேட்டு நடப்பீரானால் பிழைத்தீர். அவன்,

> "இப்பொழுதும் ராஜாக்களே, உணர்வடையுங்கள். பூமியின் நியாயாதிபதிகளே எச்சரிக்கையாயிருங்கள். பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள். நடுக்கத்துடனே களிகூறுங்கள். குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு அவரை (இப்பொழுதே) முத்தம் செய்யுங்கள். கொஞ்ச காலத்திலே அவருடைய கோபம் பற்றி எரியும். அவரை அண்டிக்கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள்." சங்கீதம் 2 : 10-12

என்கிறான்.

---

## 3. மூன்றுவித நியாயத்தீர்ப்பு.

### 1. நியாயத்தீர்ப்பு.

"பரலோக ராஜியம் புறத்தேசத்திற்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள்வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல் இருக்கிறது." மத்தேயு 25 : 14.

"நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள் அவனவன் தன்தன் வேலைக்குத்தக்கதாய்க் கூலியைப்பெறுவான்" 1 கொரி. 3 : 8.

"அவனவனுடைய வேலைப்பாடுவெளியாகும்...அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்." கொரி. 3 : 13.

இனி மறுமையில் மனிதர் அடையும் நியாயத்தீர்ப்பு, நமது சத்தியவேதத்தில் முத்திரப்படும். கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளானவர்களுக்கு அவர் இரண்டாந்தரம் வரும்பொழுது அவரவர் வேலைத்திறத்திற்கேற்ப அளிக்கப்படும் பலனைப்பற்றிய தீர்ப்பு; அவர் தமது பரிசுத்த ஊழியரோடு பூமியின் ராஜாங்கத்தை நடத்தும்போது பூமியில் உயிரோடிருக்கும் இராஜாக்கள் கோத்திரத்தார் ஆகியவருக்கு நடக்கும் விசாரணை; ஆயிர வருட அரசாட்சி முடிவில் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழும்பும் அவிசுவாசிகளுக்கு உண்டாகும் தீர்ப்பு ஆகிய மூன்றே. இதை

"பூமியின் அஸ்திபாரங்கள் குலுங்கும்......தேசம் அசையவே அசையும்....அக்காலத்திலே கர்த்தர் உன்னதமான சேனையை உன்னதத்திலும், பூமியின் ராஜாக்களைப் பூமியிலும் விசாரிப்பார். அவர்கள் காவலில் அடைக்கப்பட்டு அநேகநாள் சென்றபின் விசாரிக்கப்படுவார்கள்." ஏசாயா 25 : 18-23.

என்பனபோன்ற சத்திய வாக்கியங்களில் அறிக.

விசுவாசிகளின் மறுமையைப்பற்றிப் பேசியபோது, கர்த்தருடைய பிள்ளைகளுக்கு இம்மையிலேதானே அவரவர் செய்யும் பாவத்திற்கான தண்டனை உடனுக்குடன் அளிக்கப்படுகிறதென்றும், அப்படியாக சிட்சையை ஏற்றுக்கொண்டு பாவத்தை உணர்ந்துவிட்டு, மன்னிப்புக் கேட்கிறவர்களுக்கு எல்லாப் பாவங்களும் இம்மையிலேயே மன்னிக்கப்படுகின்றன என்றும், ஆகவே மரணத்துக்குப்பின் ஆக்கினைத்தீர்ப்பு அவர்களுக்கு இல்லை என்றும் கண்டோம். 1 கொரி. 11 : 32; எபிரே. 12 : 5-11; 12 : 4; யாக். 1 : 12; 1 கொரி. 5 : 5.

"என் வசனத்தைக்கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்." யோ. 5 : 24.

என்று மறுமைக்கரசும், ஜீவாதிபதியுமான கிறிஸ்து திருவுளம்பற்றினார். இதை ருசித்த வேத சித்தரும்,

"நாம் இனி பாவத்திற்கு ஊழியம் செய்யாதபடிக்குப் பாவ சரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக நம்முடைய பழைய மனுஷன் அவரோடே சிலுவையில் அறையப்பட்டது." ரோ. 6 : 6.

"(ஆகவே) நமது ஜீவன் கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கிறது" என்று திட்டமாகப் போதித்திருக்கின்றார். கொலோ. 3 : 3.

அன்பரே! ஆக்கினைத் தீர்ப்பில்லாத இந்த நித்திய ஜீவநிலை நாம் எல்லோரும் அடைந்த ஒரு நிலையாகாது என்பதைத் திண்ணமாகக் கருத்தில் வைப்போமாக. இது கிறிஸ்துவினால், அவரை விசுவாசிக்கிற யாவருக்கும் ஆயத்தமாக முடிவு கட்டப்பட்டிருக்கும் ஓர் நிலை. இதில் பங்குபெற முன் வருவது அவரவர் பொறுப்பாகும். எகிப்தியரின் தலைச்சங்காரத்திற்குத் தப்பவேண்டுமென்று விரும்பினவர்கள் யாவரும் ஒரு காரியம் செய்யும்படி கட்டளை பெற்றார்கள். அவர்கள் பழுதற்ற ஆட்டுக்குட்டியை அடித்து, அதன் இரத்தத்தை எடுத்து வீட்டுநிலை வாசற்படியிலும், வீட்டிலுள்ள தலைச்சன் பிள்ளைகளின்மேலும் தெளிக்கவேண்டும் என்றும், சங்காரதூதன் இந்த இரத்தத்தின் அடையாளத்தையுடைய தலை மக்களைக்கொல்லாமல் கடந்துபோவான் என்றும் கர்த்தரால் கட்டளை பெற்றனர். ஆட்டுக்குட்டியை அடித்து அதின் இரத்தத்தை தலைச்சன் பிள்ளைமீது தெளிக்காமல், அல்லது வீட்டின் நிலையில் பூசாமல், ஒரு பேசின் அல்லது பாத்திரத்தில் சிலர் வைத்திருந்தார்களென்று கொள்ளுவோம். அப்போது சங்காரத்திற்குத் தப்பியிருப்பார்களா? ஒரு போதும் இல்லையல்லவா? அதுபோலவே பாவிகளுக்காகப் பாவப் பிராயசித்தபலியான மாசற்ற தேவாட்டுக்குட்டியாகிய கிறிஸ்தேசு, மானிட இரட்சிப்பைத் தமது மரணத்தில் ஆயத்தம்செய்து 'முடிந்தது' என்று ஜெய முழக்கமிட்டு உறுதி செய்திருக்கிறார். ஆயினும் யார் யார் அவருடைய திரு ரத்தத்தினால் வந்த ஆத்தும மீட்பைப் பெற விரும்பி அவரை வந்து அண்டிப் பாவம் மன்னிக்கப்பெறுகின்றனரோ, அவர்கள்தான் மறுமையில் ஆக்கினைத் தீர்ப்புக்குத் தப்புவார்கள் என்பதை நிச்சயமாக நாம் நம்பக்கடவோம். வேதமும், "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்" என்கிறது. ஒருவன் கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்ததினால் அல்லது கிறிஸ்துவின் வேதத்தைப் படிக்கிறதினால் அல்லது திருச்சபை சடங்காசாரங்களைக் கைக்கொள்ளுவதனால் இந்த மீட்புக்கு

உரியவனுகமுடியாது. அவனவன் தனித்தனியே, "கிறிஸ்துவே பாவமீட்புக்கென்று அனுப்பப்பட்ட மெய்யான தேவகுமாரன்," என்று நம்பி அவரைத் தன் மீட்பராகக்கொண்டு, பாவ வழியை விட்டுப் பிழைக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களே, நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு கர்த்தரால் காக்கப்படுவார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஆக்கினை நியாயத்தீர்ப்பு இல்லையானுல்,

"சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படி நாம் எல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்குமுன்பாக வெளிப்படவேண்டும்" 2 கொரி. 5 : 10.

என்று வேதம் கூறும் நோக்கம் என்ன என்று சிலர் ஐயுறலாம். இவ்வசனம் பொதுவாகக் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்குமுன் நிற்கும் விசுவாசிகள், அவிசுவாசிகள் யாவரையும் குறிக்கும். விசுவாசிகளுக்கு அப்போது வரும் தீர்ப்பைப் பின்வசனத்தில் தெளிவாய்க்காணலாம்.

"அவனவன் வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனுல் நஷ்டமடைவான். அவனே இரட்சிக்கப்படுவான்." 1 கொரி. 3 : 13-15.

என்பனபோன்ற திருவசனங்களில் விசுவாசிகளுக்கு உண்டாகும் நியாயத்தீர்ப்பின் நோக்கத்தைக் காணலாம். "கிரியையில்லாத விசுவாசம் செத்ததாகும்" என்றும், பரிசுத்தர்விக்குள் நாம் எல்லோரும் ஏராளமான கனிகளைக் கொடுக்கவேண்டும் என்றும், அப்படிக் கனிகொடாத ஆத்துமாக்கள் சுட்டெரிக்கப்படும் என்றும் வேதம் சதா தொனித்துக்கொண்டேயிருக்கின்றது. ஆகையால் நாம் நம்முடைய சுத்த சத்திய ஜீவியத்தாலும் முயற்சியாலும் ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணி, பூரண அன்பினிடத்திற்கும், தெய்வீக ஒளியினிடத்திற்கும் கொண்டுவரவேண்டும் என்பதுதான் நமது கர்த்தரின் சித்தம். உலகுக்கு வெளிச்சமாகவும், உப்பாகவும், மலையின்மேல் கட்டப்பட்ட பட்டணமாகவும் நம்மைக் கர்த்தர் ஏற்படுத்தினது இக்கருத்துப்பற்றியே. (எரே. 2 : 21 ; 11 : 20 ; ஏசா. 5: 2 ; 48 : 7.

இத்திரு நோக்கத்தை இந்த ஜீவியத்தில் நிறைவேற்றும் உத்தம தேவ ஊழியருக்குக் கர்த்தர் அளிக்கும் பலனைப்பற்றி வேதம் என்ன சொல்லுகிறது?

"பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்." 1 பேதுரு 5 : 4.

இத்திரு வசனத்தில் குறிக்கப்பட்டபடி, கிரீடம் என்பது உலக வழக்கில் ராஜத்துவத்தைக் காட்டுகிறதல்லவா? ஆம் தாலந்தின் உவமைகளிலும் இது நன்கு வெளிப்படுகின்றது. தனக்களிக்கப்பட்ட தாலந்தைக்கொண்டு வேறு அதிகமான தாலந்துகளைச் சம்பாதித்த ஒவ்வொருவனும், அவனவன் கூட்டின தாலந்துக்கேற்ற கணக்கின் படியான பட்டணங்களின்மேல் அதிகாரியாக நியமிக்கப்பட்டான். கர்த்தரும், தமது சீடரைப் பார்த்து "பயப்படாதே சிறு மந்தையே, உனக்கு ராஜியத்தைக் கொடுக்க பிதா சித்தமுள்ளவராயிருக்கிறார்." என்று சொன்னார். அன்றியும் தமக்காகவும், தம்முடைய பரிசுத்த அன்பால் பூரணப்பட்ட சத்திய தேவராஜியத்தைப் பூமியில் நாட்டுவதற்காகவும் பாடுபடப்போகிற தம்முடையவர்களைப் பார்த்து,

"மறுஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தில் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்களும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயம் விசாரிக்கிறவர்களாக பன்னிரண்டு சிங்காசனங்களில் வீற்றிருப்பீர்கள்" மத்தேயு 19 : 28.

என்றார். இதை மறுமையில் தேவ ஊழியருக்குக் கிடைக்கும் ஏதோ ஒருவித ஆவியின் நிலையென்று சிலர் எண்ணுவது தவறு. நிச்சயமாகவே கர்த்தர் ராஜாதி ராஜாவாகத் தமது உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களோடு ராஜரீகமும் ஆசாரியத்துவமும் பெற்று, இப்பூமியில் மாமிசமானவர்கள் யாவரும் தங்களுடைய சரீரக் கண்களால் காணும்படி அரசாளுவார். அப்போது சத்தியத்திற்காகவும் பூரண தேவ அன்பை பூமியில் நிலைநிறுத்தவும் அவரோடு ஒத்துழைத்த பக்தர் யாவரும் இப்பதவியைப் பெற்றுச் சுகிப்பார். இது மறுக்கப்படாத சத்தியம். 1 கொரி. 6 : 2; வெளி. 5 : 9, 10 முதலிய திருவசனங்களைக் கருத்தாய் வாசித்து உண்மையறிய அன்பர்களை வேண்டுகின்றோம்.

இந்த ராஜயோக பதவி நீதிமான்களின் உயிர்த்தலுக்குப் பின் இப்பூமியிலேயே பக்தரான ஊழியரால் அனுபவிக்கப்படும்

என்பதை அறிந்தோ அறியாமலோ உலகின் பிறமதப் பெரியாரும் நம்பினர். இறந்து, மேலுலகம் சென்று மீண்டும் இப்பூமியில் இறங்கி இன்பம் துய்ப்பர் பக்தர் என்பதை நமது இந்து மதமும் திட்டமாய் நம்புகிறது. "மெய் திகழும் அஷ்டாங்கயோக பூமிக்குள் வளர் வேந்தர்......என்றைக்கும் அழியாத இராஜயோகர்" என்று நமது தமிழர் பாடியிருக்கிறது அதற்குச் சான்றாகும். அன்றியும் "பொறுத் தார் பூமியாள்வர்" என்பது பெரியோர் அனுபவத் திருவாக்கு. இதன்படி ஆத்துமாக்களைப் பாவ இருளிலிருந்து மீட்கும்படி துன் பத்தையும் அவமானத்தையும் பொறுத்தார், கிறிஸ்துவும் அவரது மெய்யடியாருமே. ஆகவே அவர் உயர்ந்து, பூலோகத்தார் கண் பார்க்க ஆளுவது கிரமமே.

வேதத்தில் குறிக்கப்பட்டிருக்கும் பற்பல கிரீடங்களைப் பற்றிய ஆராய்ச்சியை வாசிப்போர் செய்யும்படி வேண்டுகின்றோம். சோதனை யைச் சகிக்கிறவனுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட "ஜீவ கிரீடம்" யாக். 1: 12; வெளி. 2: 10; 1 கொரி. 9: 25; ஆத்தும ஆதா யம் செய்யும் உத்தம தேவ ஊழியருக்களிக்கப்படும் "மகிழ்ச்சி யின் கிரீடம்" 1 தெச. 2: 19; "மகிமையுள்ள வாடாத கிரீ டம்" எபேசி. 4: 16; விசுவாசத்தில் பொறுமையாய் ஓடி முடிக்கிறவர்கள் பெறும் "நீதியுள்ள கிரீடம்" 2 தீமோ. 4: 88 தீத்து 2: 11—19. முதலியனவாகும்.

இப்பலன், கர்த்தரின் இரண்டாம் வருகையின்பொழுது நடக் கும் முதலாம் உயிர்த்தெழுதலுக்குப்பின் கிடைக்கப்பெறும் என்பது வேதபோதனை. "இதோ சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியையின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே வருகிறது" வெளி. 22: 12. என்று ஆண்டவர் தமது சபையைப் பார்த்துக் கூறுகிறார். பரி. பவுலும் தமது உண்மையுள்ள விசுவாச ஓட்டத்தின் முடிவில் தனக்கு வரப்போகும் பலனைப்பற்றிப் பேசும் போது "நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதி யுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்." 2 தீமோ. 4: 8 என்று திட்டமாகக் கூறுகிறார். லூக். 14: 14. 10; 35 முதலிய திரு வசனங்களை இதனோடு ஒப்பிட்டுப்பார்க்க.

## 2. நியாயத்தீர்ப்பு.

"மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தியவராய் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்போது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும் வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார்." மத். 25 : 31-35.

இங்கே கூறப்பட்ட செம்மறியாடும் வெள்ளாடுமான கூட்டத்தார் யார்? பூலோகத்தின் ஆத்துமாக்களைப் பாவ இருளிலிருந்து மீட்டுப் பரனுடைய ஒப்பற்ற அன்பின் திருக்குடும்பத்தில் சேர்க்கும்படி உழைக்கும் மெய்த்தேவ தொண்டருக்குத் தங்களாலான நன்மைகளைச் செய்து வந்தோர் செம்மறியாடுகளாவர். அப்படிச் செய்யத் தவறின ஆத்தும நிர்விசாரிகளே மற்றவர். ஆண்டவர் மாம்சத்தில் இருந்தகாலத்தில், "என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தின் நிமித்தமாகவும் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போவதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். அந்த வாக்கு இந்த நியாயத்தீர்ப்பில்தான் நிறைவேறும். அன்பரே! ஆத்தும ஆதாயம் செய்யும் திருச்சபையோடு நாமும் ஒத்துழைத்தல் அவசியம். அன்றியும் சமயம் வாய்த்தபோதெல்லாம் நமது பொருளாலும் பிறவற்றாலும் சுவிசேஷகரின் தேவைகளை நிவர்த்தியாக்க முன்வருவோமாக. அப்படிச் செய்வாருக்குப் பரம பிதா ஆயத்தப்படுத்தியிருக்கும் உன்னத இன்பத்தை ஒருவராலும் அளவிடமுடியாது. மல்கியா 3 : 15-18 ; 1 யோவா. 2 : 28 ; கொலோ. 3 : 22 2 யோவா. 8.

நீதியும் அன்பும் நிறைந்த உத்தம ஊழியத்தை ஒப்புக்கொண்டு அதற்கு உதவிய பூமியின் கோத்திரத்தைப் பார்த்து,

"வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதற்கொண்டு உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராஜியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் ......மிகவும் சிறியரான என் சகோதரராகிய இவர்களில்

ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்" மத். 25: 34-40.

என்று உரைக்கின்றார். மெய்யான தெய்வீக அன்பின் தொண்டு தனைக் கண்டும் காணாதார்போல் இருப்பது மாத்திரமல்ல, அதை மறுத்தும், அதற்கான உதவியைச் செய்யத்தவறுவதுமல்லாமல், அதைத் தடுக்கப் பல எத்தனங்களையும் எடுக்கும் நிர்விசாரிகளான அசத்தியரைப் பார்த்து சாபமொழிகளைக் கூறுகின்றார். மத். 25: 41-46.

---

## 3. நியாயத்தீர்ப்பு.

"பின்பு நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின் மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்......மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்......புஸ்தகங்கள் திறக்கப்பட்டது. (அதில்) எழுதப்பட்டபடியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்." வெளி. 20: 11, 12.

இந்த நியாயத்தீர்ப்பு, ஆண்டவருடைய ஆயிர வருஷ அரசாட்சி முடிவில், அவிசுவாசிகள் உயிர்த்தெழுந்தபின் நடைபெறும். இந்த இரண்டாம் உயிர்த்தெழுதல், வேதத்தில், "தீமை செய்தவர்களின் ஆக்கினைக்கான உயிர்த்தெழுதல்" என்றும், யோ. 5: 29. "அநீதிமான்களின்......உயிர்த்தெழுதல்" என்றும் அப். 24: 15. பேசப்படுகிறது. (தானி. 12: 2.) பூலோக மீட்பராகிய கிறிஸ்து மத்தியஸ்தனாகவும், ஞானாசிரியனாகவும், மனிதனாகவும், இராஜாதி ராஜாவாகவும் இருந்து நயத்தாலும், பயத்தாலும் தம்மால் கூடியமட்டும் பாவாத்துமாக்களைச் சாத்தானுடைய வலையிலிருந்து மீட்டுப் பரன் வீடு சேர்த்துக் களிப்பிக்க எல்லாப் பிரயத்தனங்களையும் செய்து முடித்தார். என்றாலும் இன்னும் சிலர் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள மனமற்றவராகி இருக்கின்றனர். இனி தேவ தயவும், தேவ அன்பும் கிருபையும் இவர்களுக்காக செய்யக்கூடியது ஒன்றுமில்லை. ஆதலால் இவர்கள் தாங்கள் தெரிந்துகொண்டு, முடிவு மட்டும் பற்றிக்கொண்ட இருளுக்குத் தக்கதாக ஆக்கினை அடைய வேண்டியதே.

"புஸ்தகங்கள் திறக்கப்பட்டன." மனித நேர்க்கங்களையும் செயல்களையும் குறித்து வைத்திருக்கும் கிரியையின் புஸ்தகம்,

அதை மனிதனுக்கு ஞாபகமூட்டும் ஞாபக புஸ்தகம், சத்தியத்தைக் கைக்கொண்டதனால் வந்த நித்திய ஜீவனாகிய பலனைக் குறிக்கும் ஜீவ புஸ்தகம் ஆகிய புஸ்தகங்கள் உண்டு. மேற்பாக்குச் சொல்ல இடமில்லை. சர்வலோக நியாதிபதியான கர்த்தர், அவனவனுக்குச் சத்தியத்தையறிந்து உத்தம ஜீவவழியைத் தெரிந்துகொள்ளும்படி அளித்த சந்தர்ப்பங்களுக்குத் தக்கதாகவே நீதி செய்யப்படும். லூக். 12 : 47-49 ; லூக். 16 : 25 ;

> "ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவன் எவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்" வெளி. 20 : 15.

இதுமாத்திரமல்ல ; இப்படியாக உலகைப் பூரண சம, சந்தோஷ நிலைக்குக் கொண்டுவந்து, கிறிஸ்துவானவர் ராஜியத்தைப் பிதாவினிடம் ஒப்புக்கொடுக்குமுன் மனுக்குலத்தை அதுவரையில் கட்டியிருந்த மரணமும் இல்லாதொழியச்செய்வார். எப்படியெனில்,

> "அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன." வெளி. 20 : 14.

இதன்பிறகுதான் ஆதியிலே மனிதனுக்கும் தேவனுக்கும் இருந்த ஏக ஐக்கிய நிலையும் நித்திய இன்பமும் உண்டாகும். இதன் விபரத்தை வெளிப்படுத்தின விசேஷம் 21 : 22 அதிகாரங்களில் கண்டுகொள்ளுக.

---

# கள்ளப்போதகம்

## 1. பல பிறவிக் கோள்கை.

நமது பூமண்டலத்தைப் பார்க்கிலும் எத்தனையோ பன்னூறு மடங்கு விஸ்தீரணத்தையுடைய பன்னூறு அண்டகோளங்கள் வானத்தில் இருக்கின்றன. ஆயினும் அவைகள் எல்லாவற்றையும் பார்க்கிலும் மனித வாசத்துக்கான இப்பூவுலகமே சிறந்தது. இதன் காரணம் என்ன ? உபாத்திமைத் தொழிலிலும், ஏனைய தொழிற்றுறையிலும் உத்தியோகம் செய்யப் புகுமுன் அவ்வுத்தியோகத்துக்கான காரியங்களில் பழகும்படி, உலகின் அந்தந்தத் துறைக்கான பயிற்சி சாலைகளில் (Training Schools) மனிதர் பழகுகின்றனர். தெய்வீக வீடாகிய மோட்சத்திற் குரியராகுமுன் ஆத்துமாக்கள் இந்த புவியில்

இருந்துகொண்டுதான் அந்த மேலான நித்திய உன்னத பதவிக்குத் தங்களைப் பக்குவப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று இறைவனுகிய பரம தந்தை தீர்மானித்திருக்கின்றூர். மரணத்துக்குப்பின் மனிதர் அடையும் மறுமை நிலை, அவரவர் இப்பூமியிலிருந்து செய்யும் செயலில் இருந்தே தீர்க்கப்படும். இங்கே சத்தியத்தைத் தெரிந்தொழுகுகின்றவர் அங்கே சத்திய உலகுக்கும், இங்கே அசுத்தத்தைத் தம் பங்காக்கிக்கொள்ளுகின்றவர் அங்கே இருளுலகுக்கும் சேர்வது தெய்வீக இயற்கைச் சட்டம். ஆனுல் ஒருமுறை இவ்வுலகை நீத்தவன் திரும்பவும் இவ்வுலகில் மனிதனுகவோ, அன்றி பிற ஜந்துவாகவோ, பிறப்பான் என்பதற்கு இதுவரையிலும் சகல தத்துவத் துறைகளிலும் உத்தமர் கண்டு ஆராய்ந்து முடிவுகட்டிய உலகறிந்த உண்மைகளிலும் ஆதாரமில்லை.

அப்படியிருந்தும் நமது இந்து நண்பரும் பிறரும் மனிதர், தம் நல் தீவினையின் பயனை அனுபவிக்கத் திரும்பத் திரும்ப எண்பத்து நான்கு கோடி பிறப்பு எடுக்கின்றனர் என்று கூறுவது ஏன்? தத்துவ சாஸ்திரிகளாகிய பிளேட்டோ முதலிய கீழ்த்தேசத்துப் பெரியார், சாஸ்திர காலத்துக்குட்படாத காலத்தில், உலகின் ஏற்றத் தாழ்ச்சியையும், நன்மை செய்கிறவனுக்குச் சந்தோஷமும் தீமை புரிபவனுக்குத் துன்பமும் உண்டாகும் இயற்கைப் பிரமாணத்தோடு, நல்லோர் துன்புற்றுப் பொல்லார் இன்புறுவதையும், தூயோர் தாழ்ந்து தீயோர் உலகில் வாழ்வதையும் உற்று நோக்கி, ஒன்றுக்கொன்று முரண்பாடான இவற்றின் காரணத்தை ஆராயும் திறமற்றூராய், இந்தப் பல பிறவிக் கொள்கையை எளிதில் நம்பினா.

முன்சென்றவர் எழுதிவைத்த ஆன்ம தத்துவங்களைப் பின் வந்தவர் ஆராயாமல், தாமும் தத்தமது புல்லறிவுக்குத் தோன்றிய படியெல்லாம் உண்மை ஈதெனக் காணக்கூடாதவாறு, ஒவ்வாததும் ஒவ்வியதுமான பல சிக்கல்களை எழுதிக் குவித்துவிட்டனர்.

> "புல்லாகிப், பூவாகிப், புழுவாய், மரமாகிப், பல் மிருகமாகிப், பறவையாய்ப், பாம்பாகிக், கல்லாய், மனிதராய்ப், பேயாகிப், பேய்க் கணங்களாய், வல்ல சுரராகி, ஆதி முனிவராய்த் தேவராகி, செல்லா நின்ற இத்தாரக சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்து."

உழன்று மயங்கி ஆன்மாக்கள் மாளுவதாக மனிதருக்குப் போதித்தார். தம்மை இம்மாயப் பிறவி வலைக்குள் சிக்கும்படிசெய்த மாயக்

கடவுளிடம் பழிக்குப் பழிவாங்க நினைத்தார்போலவும், அவன் வெட்டிய குழியில் அவனையே விழப்பண்ண உறுதி செய்தார்போலவும், அவனையும்,

> "இரு நிலனாய்த், தீயாய், நீருமாகி......எரியும், காற்றுமாகித், திங்களாய், ஞாயிறாகி, ஆகாசமாய்" "கல்லாகிக், களராகிப், புல்லாகிப், பூண்டாகி, மாதாப் பிதாவாகி, மக்களாகிப், பெண்ணாகி,...ஆணுமாகி, ஊனாய், உயிராய், உணர்வாய், நேற்றோடு இன்றுமாகி நாளையாகி."

இன்னும் அப்பாலுக்கப்பாலும் செல்லும்படி செய்துவிட்டனர்! இப் பல பிறவிக் கோள்கையைப்பற்றி விரிவாகப் பேச இங்கு இடமில்லை. என்றாலும் இதில் நம்பிக்கையுடைய நமது சைவரும் பிறரும்கூட இதைப்பற்றி பலவிதமான மனக்குழப்பமும், ஆன்ம மயக்கமும் அடைந்து இடர்ப்படுகின்றனர் என்பதைமட்டும் இங்கு சுருக்கமாகக் காட்டி, இக்கோள்கை, அன்பும், நீதியும், பரிசுத்தமும் நிறைந்த கடவுளின் தன்மைக்கு முற்றிலும் மாறானது என்பதைமட்டும் கூறுவோம். மூலக்கிரகணம் (Evolution) இப் பலபிறவிக் கொள்கைக்கு இடம் தருவதாக நமது இந்து நண்பரின் பாவனை. ஆயினும் இதைப்பற்றிய நூல்களை உண்மை அறியும்படி ஆராய்வோர், அது அப்படியல்ல என்பதைத் தெரிந்துகொள்ளுவர். இம்மூலகிரகணம் உண்மையானாலுங்கூட அதன்படி தாழ்ந்த உயிரிலிருந்து படிப்படியாகத் தேறி மனித நிலை, மரணத்துக்குப்பின் மேன்மையுறவேண்டுமே தவிர, மனிதனாக ஒருமுறை பிறந்தவன் திரும்ப எந்த விதமான தாழ்ந்த பிறவியையும் எடுக்கவேகூடாது. லார்ட்டு கெல்வின் போன்ற மேதாவிகள் கூறுவதுபோல, உயிரானது உயிரிலிருந்தே தோன்றவேண்டும். ஒரு மனித உயிரைச் சிருஷ்டி செய்ய இரு மனித உயிரின் சேர்க்கையே அவசியமே தவிர, மனிதனும் தாவரமுமோ, அன்றி கல்லும் மிருகமுமோ சேர்வதில்லை.

மேலும் தாழ்ந்த ஒருயிர்ப் பிராணியானது உயர்ந்ததொரு மிருகம், பறவை, முதலியதாகவோ, உயர்ந்த ஜீவனானது தாழ்ந்த ஜீவனாகவோ ஒருபோதும் மாறுவதே கிடையாது; ஆதியில் அமீபாவாக இருந்த ஓரணுப்புழு இந்நாள் பரியந்தம் அமீபாவாகவே இருக்கின்றது, ஆதியில் மனிதனாகக் காணப்பட்டவன் இன்றுகாறும் அப்படியே மனிதனாகவே இருக்கிறன். இந்த உண்மையை சர். ய. தாசன் போன்ற ஆராய்ச்சி யறிவாளர் எதிர் மறுக்கக்கூடாதபடி

எழுதியிருக்கின்றனர். இது நமது பகுத்தறிவுக்கும் பொருத்தமா கின்றது. எப்படியெனில் ஒரு சுண்டெலியிலிருந்து வௌவால் வளர்ந்தது; ஒரு குழி முயலிலிருந்து ஒரு அரபிக்குதிரை முளைத்தது, ஒரு கோழி முட்டையிலிருந்து பன்றி தோன்றிற்று, அடைக்கலான் குருவியிலிருந்து மனிதன் தோன்றினன் என்பதை உலகம் எப்போ தாவது கண்டதுண்டா? இது சாத்தியம் என்பதை எந்த சாஸ்திர மேதாவியாவது சோதித்து ரூபிக்கக்கூடுமோ? கூடாது.

இப்படியெல்லாம் இருக்க, பக்திமிகுந்த நமது சைவரும் பிற ரும், கடவுளற்ற எவலூஷன் கோட்பாடுடையாரின் உண்மையற்ற உரையை நம்பிக்கேடுதல் எத்தனை வெட்கமும் துக்கமுமான காரி யம். வேதம் கூறுவதுபோல், இப்பிரபஞ்சத்தின் தேவனான பூத கணத் தலைவன், இன்னார் உண்மை காணாதபடி அவரது பகுத்தறிவை மயக்கிப்போட்டான். முதலாவது இக்கொள்கை, கடவுள் உண்டு என்ற உலகறிந்த உண்மைக்கும், அவர் அம்மையப்பனுக் கொத்த அன்புடையார் என்பதற்கும் எவ்வளவும் பொருந்தவே பொருந்தாது.

எப்படி? கடவுளின் அருளாலன்றி மனிதன் தன் சுயசக்தியால் ஆத்துமமீட்பை யடையக்கூடாது என்று நமது சைவரும் பிறரும் நம்புகின்றனர். அப்படியிருக்க ஆத்துமாக்கள் தங்களுடைய தீமைக்கு மாத்திரமல்ல, நன்மைக்கும் தண்டிக்கப்பட்டு எண்ணற்ற பிறவிகளை யெடுத்து வருந்தித் தாமே மோட்சமடைய முயலுவதைப் பார்த்துக் கொண்டு எவ்வாறு கடவுள் நிர்விசாரியாய் இருப்பார்?

அன்றியும் அன்பின் தன்மை என்ன? 1 கொரி. 13: 4-7. "சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயின் பொறுப் பது கடனே" என்றும், அன்புடையார் எலும்பும் உரியார் பிறர்க்கு என்றும் நமது நூல்கள் பிரமாதமாகக் கழறுகின்றனவே. அப்படி யானல் பல பிறவிக்கொள்கை, இந்த தெய்வீக லட்சணத்திற்கு ஒரு போதும் ஒத்துவராதே. மனிதரில் பெரியார் சிறியாரின் தப்பிதங் களைப் பொறுக்கவேண்டுமானல், எல்லாரிலும் பெரிய கடவுள் ஆன்மாக்களின் பாவங்களை மன்னித்து அருள்புரிய வேண்டாமோ?

நீதிநியாய உணர்ச்சிக்கும் இக்கொள்கை முற்றிலும் முரண்படு கின்றது. ஏனெனில் எந்தப் பாவத்திற்காக எப்பிறவி எடுக்கின் றேம் என்று தெரிந்தாலொழிய பாவத்திலிருந்து மீளுதல் எங்ஙனம்?

இந்த அறிவை நமக்குத் தராவிடின் கடவுள் நம்மைத் தண்டிக்க என்ன நியாயமுண்டு? இன்னின்ன பாவத்திற்கு இன்னின்ன பிறவியுண்டாகும் என்று நமது சைவர்போன்ற சிலர் எழுதிவைத் திருப்பது மெய்யே. உதாரணமாக, சிவவேடம் பூண்டோரை நிந் தித்தால் மலத்தில் புழுவாய்ச் சனித்துச் சனித்து, இறந்தொழியாத துக்கத்தை அடைவர்! சிவகுருக்களுக்குப் பணி செய்யாதார் ஒந்தி யாகப் பிறப்பர்! சிவகுருக்கள் கோபித்தபோது திரும்பக்கோபித் தார் மறுபிறப்பில் மண்டை வியாதியுடன் பிறப்பார்! மதுபானம் பண்ணினவன் சொத்தைப் பல்லுடன் பிறப்பான்! மிருகப்புணர்ச்சி, ஆண் புணர்ச்சி செய்தார் நீசராய்ப் பிறப்பார்! ஐந்துவகை யாகம் செய்யாதவன் முள்ளம்பன்றியாவான்! சிவகுருவை நிந்தித்தவன் கண்ணில்லாப் புழுவாகவும், நரியாகவும் பிறப்பான், பசுவை வருத் தினவன் கோணமூக்கனுகப் பிறப்பான்; இவைபோல் இன்னும் நகைப்புக்கும், மூடத்தனத்திற்கும் இடமான பல பிறப்புகள் கூறப் பட்டிருக்கின்றன. இக்கூற்றிலுள்ள தெய்வீக நியாயத்தையும் சத்தியத்தையும் வாசிப்போரே சிந்திக்கட்டும்.

ஆனல் ஒரு காரியத்தை மட்டும் நேயர்களுக்கு ஞாபகமூட்டு கின்ருேம். பாவப் பிராயசித்தமாக எண்ணுக்கடங்காத எதுக்களை இவ்வாசிரியரே கூறிப்போதிக்கின்றனர். பாவம் செய்த ஒரு மனி தன் இவர் கூறியபடி புழு, நாய், முட்பன்றி, ஒந்தி முதலியவைக ளாகப் பிறக்கும்போது, பகுத்தறிவு சிறிதும் இல்லா அத்தகைய பிராணிகள், பாவத்திற்காகத் தமது மதாசிரியர் கூறியிருக்கும் பரி காரங்களை எவ்வாறு உணர்ந்து, செய்து பாவ ஆக்கினையை நீக்கிக் கொள்ளும்? அவைகளுக்குப் பகுத்தறிவே சிறிதும் இல்லையென் ருல் தெய்வீக உணர்ச்சி எங்கிருந்து வந்து, பாவத்துக்கான பரிகா ரம் செய்யும்படி அவற்றைத் தூண்டக்கூடும்? நமது இந்துமத நூல் களில் ஆதிசேஷன் என்ற பாம்பு திருநாகேசுரத்தில் கடவுளை வணங்கி முக்தி பெற்றதென்றும், வேதங்கள் திருமறைக்காட்டில் வணங்கினதென்றும், நாரையென்ற பட்சி திருநாரையூரில் கடவுளை வணங்கியதென்றும், ஈயானது திரு ஈங்கோமலையில் பூசித்து மோட்சம் சென்றதென்றும், அப்படியே எறும்பு, கழுகு, யானை முதலியன சிவனை வழிப்பட்டு மோட்சம் அடைந்தன என்றும் புராணங்கள் கூறுகின்றனவே என்பீரோ? இத்தகைய பேய்ப்போத கத்தை எழுதியவர், மானிடரின் அறிவை இருளாக்கி அந்தகாரம் நிறைந்த பாதாளக் குழிக்கே வழிநடத்துபவர் என்பதே எமது அபிப் பிராயம் என்பதைமட்டும் குறிக்கிருேம்.

இது மாத்திரமல்ல, இக்கொள்கை ஆன்ம ஈடேற்றத்திற்கல்ல, ஆன்ம அழிவுக்கே நடத்துகின்றது என்பதை மெய்யாய் உணர்ந்த சிவ, விஷ்ணு பக்தநம் தங்களை அறியாமலே வெளிக்காட்டியிருக்கின்றனர். இதை நினைத்து, நினைத்து கடவுளின் அன்பையும் நீதியையும்பற்றி ஐயப்பாடுற்றுக் கலங்கிய சைவப் பெரியார்,

> "அறிவினை மறைப்பது நின் அருள்? பின்னும் அறிவின்மை தீர்த்து அறிவிப்பதும் நின் அருள்? அப்படியானல் எளியேற்கு அறிவாவது எது? அறிவில்லா ஏதம் வரும் வகை எது? வினை ஏது? வினை தனக்கு ஈடான பிறவி ஏது?"

என்று பல நியாயமான வினுக்களை எழுப்புகிறார். இதற்கொரு பதிலும் தமது கடவுள் கொடுக்காதொழிய, அதனால் துயரமும், துன்பமும் சோர்வும் மீதூரப்பெற்ற சைவச் சான்றோர்,

> "யான் முனம் பண்ணிய வினையேது? என்னை இன்னதென்று அறியாத ஏழைக்கு மா கெடுவேன் முன்னை வினை கூட்டல் முறையோ? அறியாது நான் செய்த வினையை, ஐயா நீ கூட்டும் துறி ஏது? என்னைக்கெடுக்க இசைந்த இருவினை தன்னைக் கெடுக்க உனக்குத் தாகாதோ?"—தாயுமானர்.

> "புன்மை அறிவுடையேனைக் கன்மத்துடன் இடர் உறவும் செய்தனையே! இரக்கம் ஈதோ! இந்த நாள் சற்றும் இரங்கிலையேல், காலன் வரும் அந்த நாள் காக்க வல்லையோ?"

> "என்னையே நோவேனே, பிறரை நோவேனே, தற்காலத்தை நோவேனே, பந்தம் ஆசை தந்த வினையை நோவேனே, பரமானந்தம் ஏதும் அறியேன்"

என்று பலவாறு தம் குலதெய்வத்தை நொந்து புலம்பித் தவிக்கின்றனர்.

இன்னொரு முக்கிய காரியம் கவனிக்கவேண்டும். இக்காலத்தில் எதோ கோடிக்கொருவர் தம்முடைய பழவினையை அறிகின்றனர் என்று கூறுகின்றனர். இதன் உண்மை எப்படியாயினும் இருக்கட்டும். ஆனல் ஏறக்குறைய எல்லோருக்கும், தாங்கள் முன் முன் ஜென்மத்தில் எப்பிறவி யெடுத்திருந்தனர் என்பதே தெரியாது. ஆகவே இப்பிறப்பில் முன் ஜென்மத்தைத் திருத்தி, உயர்ந்த ஜீவியம் செய்வதோ அணுவளவும் கூடாதகாரியம். அதிருக்க, பாவம் செய்த ஒரு மனிதன், தாழ்ந்த பிறவி யெடுக்கவேண்டுமாம். போன ஜென்மத்தில் விபசாரம் செய்த ஒரு மனிதன் எதோ ஒரு

[library stamp]

மிருகமாக இப்பிறவியில் பிறக்கிறான் என்று கொள்ளுவோம். பிறவிகளில் சிறந்த அரிய மானிடப்பிறவியில் இருந்தபோது, சுத்தம் அசுத்தம் என்பதை வகையறுத்து, நல்வழியில் நடந்து, ஒரே மனையாளுடன் தூய முறையில் சுகிக்க அறியாத ஒருவன், பகுத்தறிவேயில்லாத மிருகமாகப் பிறந்தால் அவன் கதி என்னவாகும்? முன்னையைவிடப் பதினாயிரம் மடங்கு அதிகக் கேடாகுமல்லவா? ஆம் எப்படியெனில், மனிதனுக்குத் தன் மனையாள், பிறர் மனையாள் என்ற பேதம் தெரியும். மிருகத்திற்கோ அந்த அறிவில்லை. அது தன் துணை, பிறர் துணை, தன் தாய், தன்னோடு பிறந்த பிறவி, தன் பிள்ளை என்ற பேதம் சிறிதும் இல்லாமல் கண்டாகண்ட மிருகங்களோடும் சேருமே; இத்தகைய ஒரு அநியாயமும், சொல்ல ஒண்ணாத அக்கிரமமும், அசுசியுமான ஒரு இழிந்த மிருகப் பிறவிக்குள் அரிய மானிடனை வீழ்த்துதல், பரிசுத்தமும் நீதியுமுள்ள கடவுளுக்குத் தகுமோ? எவ்வளவேனும் தகாது, தகாது. பல பிறவிக் கொள்கையால் விளையும் இத்தகைய முறைகேட்டையும், நினைக்கவும் மனம் கூசும்படியான மகா அருவருப்பையும் சிந்தையில் வைத்தே ஆழ்வார்போன்ற பெரியார்,

> "என்னையும் நோக்கி, என்னல்குலும் நோக்கி...... அன்னை
> நோக்கும் என்று அஞ்சுகிறேன், அச்சோ!"

என்று உடலும் உளமும் நடுக்கமுற்று நாவுகூசக் கூறித் திகைக்கின்றார்.

இக்கொடும் கொள்கை இன்னொரு சங்கடத்தையும், சந்தேகத்தையுங்கூட விளக்கின்றது. இக்கொள்கையினர் கூறுகிறபடி,

> "முன் ஜென்மத்தில் பாதகம்
> பண்ணினோர் மறுபிறப்பிலும் அதிபாதகமே பண்ணுவர்"
>
> —சிவஞான சித்தியார்

அப்படியானால், இப்பொழுது தேசத்தொண்டின் பொருட்டுப் பல பாடுகளையும், துன்பத்தையும் வறுமையையும் பட்டுச் சகிக்கின்றாரே காந்தி போன்ற சான்றோர்; இவர்கள் காரியம் என்ன? பல பிறவிக் கொள்கையின்படி இப்பிறவியில் தீமையனுபவிப்போர் முன் பிறவியில் நிச்சயமாகவே பாதகமே புரிந்தோராவார். முன் பிறப்பில் பாவம் செய்தோர், இக்கொள்கை கூறுமாப்போல், இப்போதும் முன்னையைப் பார்க்கிலும் அதிக பாதகத்தையே பண்ணவேண்டும்.

ஆக, இப்பெரியார் வழக்கை எப்படித் தீர்ப்பது என்பதை வாசிப்போரே சிந்திப்பாராக. கிறிஸ்துவின் சத்தியவேதமோ, பாவத்தின் சம்பளம் துன்பமும் மரணமுமேயானாலும், பாவி தன் பாவத்தைக் கடவுளிடம் அறிக்கையிட்டு விட்டுவிடும்போது, கடவுள் அவனது பாதவத்தின் ஆக்கினையைத் தம்மேல் ஏற்றுக்கொண்டு அவனை இம்மையிலேயே மன்னிக்கிறார் என்று போதிக்கிறது. அன்றியும், மனிதன் இவ்வுலகில் அநுபவிக்க நேரும் எல்லாத் தீங்கும் பாவத்தினால் வந்ததல்லவென்றும் போதிக்கின்றது. "இவன் குருடனாகப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவன் பெற்றோர் செய்த பாவமோ ?" என்று வினவிய மனிதருக்கு கிறிஸ்து மாறுத்தாரமாக, "இவன் இப்படிப் பிறந்திருப்பது இவன் செய்த பாவமுமல்ல ; இவனைப் பெற்றோர் செய்த பாவமும் அல்ல ; தேவனுடைய மகிமை விளங்கும்படியே இவன் இப்படிக் குருடனாய்ப் பிறந்தான்" என்று கூறினார். சில வியாதிக்காரரைப் பார்த்து "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது. போ, இனிப் பாவம் செய்யாதே" என்றார். ஆகவே மனிதர் படும் பல துன்பமும் அவர்களுடைய பாவம், அறியாமையால் மட்டுமல்ல ; தேவ மகத்துவம் விளங்கும்படி, பக்தனும், நீதிமானும், தேவனுக்குப் பயந்த தயாளனுமான யோபுக்கு வந்ததுபோல் பக்தரின் விசுவாசத்தைச் சோதிக்கவும், ஆவியின் வளர்ச்சியில் அவர்களைப் பலப்படுத்தி வளர்க்கவும் வரும் என்பதே நியாயமான கூற்றாகும்.

இதையெல்லாம், நீதியும் உத்தம குணமும் உள்ள தாயுமானவர், பட்டினத்தார் முதலிய சான்றோர் தம் மனத்தில் பலமுறை தர்க்கம் செய்தே, பிறவிக்கொள்கையின் முரண்பாட்டை உணர்ந்து, நடுக்கமுற்றுக் கதறியழுகின்றனர்.

> "அன்றுமுதல் இன்றுவரை சாகோடி அடைந்து அடைந்து இந்த வேதனை அறிந்ததல்லால் இன்றைவரை மோட்சம் இல்லையே. எடுத்த தேகம் எப்போதோ தெரியாதே."
>
> "இத்தேகம் எடுத்தபின் செய்ததோன்றில்லையே."
>
> "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ அறிகிலேன்."
>
> "வந்தவாறு என்னே, போமாறு என்னே ?"

என்று பலமுறையும் தமது கொள்கையைப் பற்றித் திகைத்து, மனம் சலித்து, இதயம் சோர்ந்து புலம்புகின்றனர். "நெஞ்சம் பகீர்" என அஞ்சுகின்றனர். ஆகவே, ஆத்தும வளர்ச்சிக்கும் ஈடேற்

றத்துக்கும் ஒரு சிறிதும் ஒவ்வாததும், ஜென்ம சத்துருவானதுமான இப்பூதகணத் தலைவனின் போதகத்திற்குச் செவிகொடாமல், இப்போதே மறுமை வீட்டின் வழியைப்பற்றிப் பிழைக்கும்படி நமது சேயர்களை ஏவுகின்றோம். "பிறவாத நெறியொன்று உண்டெனின் இம்மையே பேசு கற்பூரமே" என்று தாயுமானவர் போன்ற மெய்ப் பக்தர் கதறுகின்றனர். எப்போது மனிதனுள்ளத்தில் ஒரு வாஞ்சையாலான கதறுதல் உண்டோ, அப்போது அதைத் திருப்தி செய்யும் தேவ வழியும் உண்டு. ஆகவே இத்தகையோரைப் பார்த்து மறுமைக்கரசாகிய கிறிஸ்துவும் மாறுத்தாரமாக "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று முழங்கி நிற்கிறார். எத்தனை குறைவுடையதாய்க் காணப்படினும் கிறிஸ்துமார்க்கம் ஒன்றே மெய்யான தெய்வீக குரு மார்க்கம். இது ஒன்றே மெய்யான பாவமன்னிப்பருளும் பூரண அருள் மார்க்கம். இது ஒன்றே ஒப்புவமையற்ற தூய சன்மார்க்கம். தமது சைவ மார்க்கம் போன்றவை, மறுமை வழிகாட்டியென்று உண்மையாக நம்பியிருந்தால் சைவப் பக்தர், "குரு மார்க்கம் இல்லாக் குருடருடன் கூடி கரு மார்க்கத்துள்ளே கருத்தழிந்து கெட்டேனே!" என்று ஒருபோதும் அங்கலாய்த்திரார். "சைவ சமயமே சமயம்" என்று அபிமானம் பற்றிக் கூறியபோதிலும்,

> "கவ்வும் மலமாகின்ற நாகபாசத்தினால் கட்டுண்ட உயிர்கள் மூர்ச்சை, கடிது அகல வலிய வரும் ஞான சஞ்சீவியே! கதியான பூமி நடுவுள் செவ்விதின் வளர்ந்தோங்கும் திவ்யதருணமேநவே"

என்று தாயுமானவர் புகழ்ந்த அருள் குரு யார்? சிவனா, முருகனா, விநாயகனா, ராமனா, கிருஷ்ணனா? வாசிப்போர் ஆராயட்டும். மானிடரைப் பாவத்தில் சிக்குண்ணச்செய்யும் ஆதி வலுசர்ப்பமாகிய சாத்தானை வென்று, ஆத்துமாக்களைப் பரம தந்தையிடம் சேர்க்கும்படி இப்பூமியில் உதித்து, பூரண குணக்குன்றாக விளங்கும் கிறிஸ்துவே இங்கே பொருந்தத்தக்கவர். உண்மை யறியும் சத்தியவந்தர் யாவரும் இதை ஒப்புக்கொள்ளுவர். ஆனதுபற்றியே கிறிஸ்துவைக் குறித்து,

> "அருள் எலாம் திரண்டு ஓர் வடிவமாகிய, பொருள் எலாம் வல்ல பொற்புறுநாதன்"

> "தன்னைத் தந்து என்னைத் தடுத்து ஆண்ட நின் கருணை"

"துய்யன் தன்னருள் வடிவினன், பொறுமையாய்த் துலங்கும் மெய்யன்"

என்றிப்படியாகப் பாடித் தோத்தரிக்கின்றனர்.

இதுவரையிலும் யாம் சொல்லியதைக்கேட்டும் இன்னும் இப் பூதப் பிறவிக்கொள்கையில் நம்பிக்கையுடையாராய்க் கெட்டழிவோர் இருப்பின் நாம் என் செய்வது !

"சித்தாந்தத்தே கடவுள், தம் திருக்கடைக்கண் சேர்த்து, சேன னய் ஒன்றிலே சீவன் முத்தராக வைத்தாண்டு மலம் கழுவி, ஞானவாரி மடுத்து, ஆனந்தம் பொழிந்து, வரும் பிறப்பை அறுத்து முத்தாந்த (வீடு) சேர்ப்பன் என்று மொழிந்தும் இவர் மூர்க்கராகி, பித்தாந்தப் பெரும் பிதற்றுப் பிதற்றிப் பாவப் பெரும் குழியில் வீழ்ந்திடுவர் ; இது என்னே பைத்தியம்!"

என்று நாம் அப்படிப்பட்டவர்களுக்காக மனம் இரங்குகின்றோம். நீதியின் சூரியனான இறைவனே இத்தகையோரின் ஆன்மக் குருட்டாட்டத்தை அகற்றவேண்டும்.

---

## 2. ஆவிகளின் கூட்டுறவு.

நமது இந்து சகோதரர் கொண்டிருக்கும் பல பிறவிக்கொள்கையைப்போலவே, பூரண பரிசுத்தமும், பூரண அன்பும், பூரணசத்தியமுமுள்ள சர்வவல்லமையும், சர்வ ஞானமும் நிறைந்த கடவுளுக்கு ஆகாத பூதக்கொள்கைகளில் பல கிறிஸ்துவின் திருச்சபையிலும் உலாவி வருகின்றன. அவைகளில் ஒன்று செத்தவர்களிடத்தில் குறி கேட்பதும், கூட்டுறவு கொள்வதுமாகும். முதலாவது, ஆன்ம காரியங்களைப்பற்றியேனும் சரீர காரியங்களைப்பற்றியேனும் எக்காரணம் பற்றியும் தேவனுடைய பிள்ளைகள் குறிகேட்கக்கூடாதென்று தேவனால் கண்டிப்பான கட்டளையிடப்பட்டிருக்கின்றனர். "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில்......தன் மகனையாவது, தன் மகளையாவது தீக்கடக்கப்பண்ணுகிறவனும், குறி சொல்லுகிறவனும், நாள் பார்க்கிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம்." உபா. 18 : 9-15. "அவர்களை நாடித்தேடாதிருங்கள். அவர்களாலே தீட்டுப்படவேண்டாம். நான் உன் தேவனாகிய கர்த்தர்.....

உன் தேவனுக்குப் பயப்படுவாயாக" என்பது வேத எச்சரிப்பு. லேவி. 19: 31, 32.

இத் திருக்கட்டளையை மீறும்போதெல்லாம், தேவனுடைய பிள்ளைகள் வெளியரங்கமாகத் தண்டிக்கப்பட்டார்கள். இதனால் தேவ சபையில் கொடிய வாதைகளும், சத்துருவின் கொடுமையும், பிற தீமைகளும் விளைந்தன. ஏசாயா. 19: 14; II இரா. 1: 2-17; I நாளா. 15: 13; II இரா. 9: 22, 33-37; 21: 6 முதலிய வசனங்களைக் கருத்தோடு வாசிக்க.

யோசியா எசேக்கியல் முதலியோர்போன்ற தேவதாசர்கள் இப்பேய்ப் பழக்கத்தை ஜனங்களைவிட்டு நீக்கப் பிரயாசை எடுத்த போதெல்லாம் கர்த்தர் அப்படிப்பட்டவர்களைப் பலவிதத்திலும் ஆசிர்வதித்தார். II நாளா. 23: 24: II இரா. 17-ம் அதிகாரம்.

ஏனெனில், ஜீவனத்துக்கான எத்தகைய காரியமானாலும் அது வருமுன்னும், வந்த பின்னும் அவைகளைப்பற்றிய ஞானத்தையும் அவைகளில் நடக்கவேண்டிய வகையையும் நமது தேவனாகிய பிதா, தமது பிள்ளைகளுக்குத் தெரிவித்து நடத்துகிறதுபோல, வேறு எந்த விக்கிரக வணக்கருக்கும் நடைபெறுகிறதில்லை என்பதைத் துணிந்து நாம் கூறுகின்றோம். "பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து நீ நடக்கவேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே." ஏசா. 48: 17.

"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவுகொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்" என்று உறுதிவாக்களிக்கிறார். எரேமி. 33: 3. இவ்வசனங்களைப்போல எண்ணுக்கடங்காத சத்திய வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டு. இவற்றின் உண்மைகளை நாம் எல்லோரும் சோதித்து அறியலாம். அவர் தாம் அளித்திருக்கும் வாக்குப்படி செய்கிறவரோ அல்லவோ என்பதைச் சோதித்துப் பார்க்கவும் நம்மை ஏவி, "என்னை சோதித்துப் பாருங்கள்" என்று சூளுரைக்கிறார். மல்கியா 3: 10.

இந்தத் திருவாக்கை நம்பி, அவருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, அவரைத் தம் துணையாகவும் ஆலோசனைக் கர்த்தாவாகவும் ஏற்று ஜீவித்த பக்தகோடிகளும், தமது சொந்த அனுபவத்தில் அது உண்மையெனக் கண்டனர். தாம் கண்டதை நமக்கும், பின் சந்ததியாருக்கும், ஆறுதலும் நம்பிக்கையும் பெருகத்தக்கதாக, "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவ

நம் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது. அது சத்திய மாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதிக்கிறபடியே அவரில் நிலைத்திருங்கள்" என்று உற்சாக சாட்சியிடுகின்றனர். 1 யோ. 2 : 27.

இப்படியாக நமது தேவன் செயலில் மகத்துவமானவராயிருக்கிறதுமாத்திரமல்ல, ஆலோசனையிலும் அதிசயமானவர் என்பதற்குத் தானியேல் முதலிய மெய்த்தேவ புத்திரர் யாவரும் சாட்சிகள். அன்றியும் வீண் விக்கிரகங்களுக்கு முன் விழுந்து கெட்டழியும் அரசர், ஜாதியார் முதலியோரும் கூடப் பலமுறை இஸ்ரவேலின் தேவனைப்பற்றி இவ்வித சாட்சி சொல்லுகின்றனர். தானி. 1: 17-20; யாத். 8 : 18 ; 9 : 11, 27 ; I இரா. 18 : 18-39 ; தானி. 4 : 37 ; 3 : 29 ; 6 : 26, 27 ; I சாமு. 4 : 8 ; II இரா. 5 : 15 ; அப்போ. 19 : 18-27.

இப்படியெல்லாம் மகத்துவ தேவனைத்தம் துணையாகக் கொண்டிருக்கும் பிள்ளைகள் ஏன் தங்களைப்பற்றி யறியும்படி பேய் பசாசங்களிடமும் மரித்தோரிடமும் போகவேண்டும்? மரித்தோரோடு கூட்டுறவு கொள்ளும் இக்கொள்கை நெக்ரோமான்ஸி (Neckromancy) என்ற மந்திர வித்தை எனப்படும். இக்கொள்கைக்கு ஆதிமூலம் கிரேக்கர், ரோமர், ப்யூனிஷியர், சீனர், ஜப்பானியர் முதலிய கீழ் தேசத்தாராவர். நெக்ரோமான்ஸி என்றால் இருண்ட அல்லது அஞ்ஞான செயல் என்று பொருளாகும்.

இப்படிக் கருத்த பாதாள பேய்களுடன் கூட்டுறவுகொண்ட கூட்டத்தினரில் மூன்று முக்கிய வகையார் உண்டு. முதலாவது கூட்டத்தார் யாரென்றால், மரித்தவர்களின் ஆவிகளுக்கும் பேய் பசாசங்களுக்கும் பயப்படும் மூடப்பக்தியுடைய அறிவில்லாத பேதைகளாவர். இவர் அறியாமையால்தான் இம்மூட நம்பிக்கைகொள்ளுகின்றனர். என்ன? இவ்வுலகத்தில் நம்மை நேசித்து நமக்கருமையானவராயிருந்து மரித்துப்போனவர்கள், மரித்ததும் வேறு தன்மையை அடைந்து, நமக்குத் தீமை செய்வாரா? ஒருபோதும் இல்லை. அவர்கள் நரகம் சென்றிருந்தார்களானால் இப்பூமிக்குத் திரும்ப ஆவியாக வரமுடியாது. ஏனெனில் முன் பார்த்தபடி அங்கே கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நாள் வருமட்டும் அந்த ஆவிகள் "காவலில்" இறுத்தப்படுகின்றன என்று வேதம் போதிக்கிறது. அன்றி அவர்கள் மோட்சம் போயிருந்தால், மோசமும்,

அக்கிரமமும், துன்பமும் மல்கிய இப்பூவுலகுக்குத் திரும்ப வரவேண்டும் என்ற ஆசையே அவர்களுக்கு உதிக்காது. மோட்சம் சென்ற பரிசுத்தவான்களின் ஆவிகள் கர்த்தருடைய இரண்டாம் வருகை மட்டும் பூமியில் காணப்படமாட்டா.

இரண்டாவது கும்பினர் யாரெனில், மந்திரம் தந்திரங்களையும், குறி சொல்லுவதையும் தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்கேற்ற தொழிலாகச் செய்பவரே. இவர் இதில் தெய்வீகத்தைக் காட்டவேண்டுமென்றல்ல, எப்படியேனும் ஆதாயத்தைத் தேடவேண்டும் என்றே கருதுபவர். இவ்வேலையரைப்பற்றி அதிகமாகக் கூறவேண்டுவதில்லை. மூன்றாம் குழுவினரோவெனின் ஹிப்னாற்றிசம் (Hypnotism) மேஸ்மரிசம் (Mesmerism) மாக்னட்டிஸம் (Magnetism) முதலிய பலதிறப்பட்ட ஏதுக்களால் மனிதரின் புத்தியை மயக்கி, அவரது உள்ளத்தில் இருப்பதை அறிந்து, தங்களுடைய சொல்லுக்கு ஆடும்படி அவர்களைப் பழக்கும் மனத்தத்துவ சாஸ்திரிகளே (Psychologists.)

இம்மூன்று கூட்டத்திலுமிருந்து எழுந்தவர்களே, தற்காலத்தில் மேனாடுகளில் எங்கும் செத்தவர்களிடத்தில் சம்பாஷிப்பதை (Spiritualism) மும்முரமாகப் பரவுகிறார்கள். திருச்சபையிலுள்ள மெய்யான தேவனுடைய பிள்ளைகளில் பலருங்கூட இதனால் மயங்கி சாமுவேல், மோசே முதலியவர்களோடு கிறிஸ்து சம்பாஷித்தது போல, நாமும் ஏன் மரித்தவர்களிடத்தில் கூட்டுறவு செய்யக்கூடாதென்று கேட்கின்றார். 'கர்த்தர் பூமியிலுள்ள தம்முடைய நேசப்பிள்ளைகளுக்கு ஆறுதலையும் ஆலோசனையுமையும் பெலனையும் அளிக்கும்படி வெளிப்படையாகத் தம்முடைய தூதரையானாலும், இவ்வுலகத்தை நீத்த தமது பக்தரையானாலும் இங்கே அனுப்புவது அவர் சித்தம். ஆனால் நாம் ஏன் அவர்களைத் தேடிக்கொண்டு செல்லவேண்டும்?

அன்றியும் மேலே காட்டப்பட்ட இரு திருஷ்டாந்தங்களும் விசேஷமான பாடத்திற்கென்று கர்த்தரால் அளிக்கப்பட்டவை. மரித்துப்போன அந்த தேவ ஊழியரின் ஆவிகளுக்கும், ஏனைய மதத்தின் குறி சொல்லும் பேயாடிகளுக்கும் யாதொரு சம்மந்தமுமில்லை. மோசே முதலிய தேவதாசர், கர்த்தருடைய திருக்கட்டளைப்படி இறங்கிப் பூமியில் உள்ள தம்முடைய சகோதரரோடு பேசினது எந்தவிதமான மந்திரம், மாயத்தினாலும் நேர்ந்ததல்ல; இவர்கள் சம்பாஷணையும், பிற பேய்களின் குறியைப்போல, மயக்கத்தையும் சந்தேகத்தையும் கொடுக்கத்தக்க இரட்டை அருத்தமுள்ளதல்ல.

அன்றியும், மனிதரிடத்தில் பேசுகிறவர்கள் இறந்துபட்டோரின் ஆவிகள் என்று நினைக்கக்கூடவில்லை. அதற்கு மாறாக அந்த ஆவிகளைப்போல வேடம்பூண்டு, மனிதரை ஏமாற்றும் பேய்களே என்று தீர்மானிக்கப் போதுமான சான்றுகள் உண்டு.—வெளி. 16 : 13-16. ஏனெனில் மரித்த ஐசுவரியவான், தான் அங்கிருந்து பூமிக்கு வந்து தனது சகோதரரோடு சம்பாஷிக்கக்கூடாமை கண்டே, ஆபிரகாமைப் பார்த்து, லாசருவைத் தன் தகப்பன் வீட்டுக்கு அனுப்பக் கெஞ்சுகிறான். ஆபிரகாமும் லாசருவை அனுப்பினாரா? இல்லை. "மோசேயும் தீர்க்கதரிசிகளும்" எழுதிய திருவேதம் "அவர்களுக்கு உண்டு. அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும்" என்றார்.—லூக். 16 : 29 சவுலின் குறிகாரியால் கலைக்கப்பட்ட சாமுவேலும் வெகுண்டு "இப்படி நீ என்னைக் கலைத்தது என்ன?" என்றார். ஆகவே பூமியில் இருப்பவர்களோடு சம்பாஷிப்பவர்கள் மரித்தோரல்ல; அவர்களுடைய வேடம் பூண்ட சாத்தானின் கணங்களே.

இப்படியாக உலகத்தைக் கடைசிக்காலத்தில் வஞ்சித்து மயக்கப் பேய்கள் வெளிவரும் என்று ஏற்கனவே தீர்க்கதரிசிகளான ஞானதிருஷ்டிக்காரர் வேதத்தில் எழுதி நம்மை எச்சரித்திருக்கிறார். I தீமோ. 4 : 1-3, II தீமோ. 4 : 3, 4 ; 3 : 13, வெளி. 20 : 21 முதலிய சத்திய வசனங்களை இப்போதே எடுத்து ஜெபத்தோடு வாசிக்கும்படி சகோதரரைக் கேட்கின்றோம்.

ஆகவே, சகோதரரே! தற்காலம் நமது நாட்டில் பசாசங்களால் நடைபெறும் எத்தகைய அடையாள அற்புதங்களையும் கண்டு அதிசயிக்கவேண்டாம். குறிகேட்டல், நாட்பார்த்தல், நட்சத்திரம் கணித்தல், பல்லி சாஸ்திரம், பட்சி சாஸ்திரம் முதலியன பார்த்தல், பொருத்தம் பார்த்தல் ஆகிய பூதக்கோள்கைகளில் கொஞ்சமும் பங்கெடுக்காதிருப்போமாக. வேதமும் நம்மெல்லாரையும் பார்த்து,

> "அவர்கள் உங்களை நோக்கி, அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முணுமுணு என்று ஓதுகிற குறிகாரர் இடத்திலும் விசாரியுங்கள் என்று சொல்லும்போது ஜனங்கள், தங்கள் தேவனிடத்தில் விசாரிக்க வேண்டியதல்லவோ? உயிருள்ளவர்களுக்காக செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமா? வேதத்தையும், சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும். ஏசா. 8 : 19.

என்று அன்போடும், கண்டிப்போடும் போதிக்கின்றது.

அப்படியானால் நமது ஜீவியத்தின் நிகழ்ச்சிகளைப்பற்றி யாரிடத்தில் விசாரிப்பது? "இவர் என்னுடைய குமாரன்......இவருக்குச் செவிகொடுங்கள்" என்று பிதா தாமே கூறுகிறார். மத். 17 : 5. "உன் தேவனாகிய கர்த்தர்......ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே, உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார். அவருக்குச் செவி கொடுப்பீர்களாக" என்று மோசே முதலிய பக்தர் கூறினர். உபா. 18 : 18. ஆகையால் கிறிஸ்துவாகிய சர்வலோக ஞானசிரியனும் குருவுமானவருக்கே நாம் செவிசாய்த்து அவர் போதனைப்படி நடப்போமாக. ஏனெனில் நமது மீட்பராகிய,

"கிறிஸ்து மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர்மேலும் ஆண்டவராயிருக்கும்பொருட்டு மரித்தும் எழுந்தும் பிழைத்தும் இருக்கிறார். ரோமர் 14 : 9.

## 3. ரோமான் மார்க்கப் போதனை.

மரித்தோர் சென்று வேதனைப்படும் உத்தரிக்கும் ஸ்தலம் (Purgatory) என்று ரோமான் மார்க்கத்தார் கூறுவதைப்பற்றியும் சில வார்த்தைகள் இங்கே அவசியம். கிறிஸ்துவின் பிள்ளைகள் இங்கேயே பாவம் மன்னிக்கப்பட்டவர்களாக மறுமை செல்லுகின்றனர் என்று விரிவாகப் பார்த்தோம். ஆகவே, இங்கே நாம் அடையும் ஆன்ம பரிசுத்தத்திற்கு ஏற்ப இடங்கொடுக்கப்படுமே தவிர பாவத்துக்கான யாதொரு தண்டனையும் அங்கே கிடையாது. ஆகையால் உத்தரிக்கும் ஸ்தலத்தில் துன்பப்படும் தம்முடையவர்களைப் படிப்படியாய் மோட்சம் ஏற்றுவதற்காக அம்மார்க்க சாமிகளும் போப்பும் தீர்மானித்திருக்கும் மாஸ் (Mass) பணத்தொகை அங்கே செல்லாதென்று உறுதியாக நம்பக்கடவோம். மரித்துப்போன நம்முடையோர், நம்மைவிட ஆவியின் வளர்ச்சியில் தேறினவர்களானல் அங்கிருந்துகொண்டு நமக்காக ஜெபிக்கலாம். அவர்களைவிட இங்கிருக்கும் நாம் ஆன்ம நிலையில் தேறினவர்களானல் அவர்களுக்காக ஜெபிக்கலாம். ஆனல் கடவுளுக்கும் மனிதருக்கும் இடையில் ஜீவனைவிட்டு உயிர்த்த ஜீவாதிபதியாகிய கிறிஸ்துவாகிய ஒரே மத்தியஸ்தரே உண்டு என்பதை மறவாதிருப்போமாக. அவரே மரணத்துக்கும் பாதாளத்துக்கும் உரிய திறவுகோலை யுடையவர். ஆகையினால்தான் வேதம்,

"உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று, அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்ற

மில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினலே மீட்கப்பட்டீர்கள்......ஆகையால் சகல துர்க்குணத்தையும்......கபடத்தையும், வஞ்சகங்களையும் ஒழித்துவிட்டு......திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" என்று எச்சரிக்கின்றது. 1 பேது. 1 : 18-22 ; 2 : 1-3.

இதற்கு மாருகக் கள்ளப்போதகத்தால் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போவாரைப் பார்த்து, "என் ஜனமே, உன்னை நடத்துகிறவர்கள் உன்னை மோசம் போக்கி, நீ நடக்கவேண்டிய வழியை அழித்துப்போடுகிறார்கள். இதினிமித்தம் கர்த்தர், வழக்காட எழுந்திருந்து......ஜனத்தின் மூப்பரையும் பிரபுக்களையும் நியாயம் விசாரிப்பார்" என்று இரங்கி வைராக்கியமாகத் தொனிக்கிறது.—ஏசா. 3 : 9-14. ஆனபடியால் சத்தியவேதத்தைப் புரட்டி மறைக்கிற அகங்காரியான போலிக் குருக்களுக்கல்ல, வேதப்பொருளாகிய கிறிஸ்துவுக்கே செவிசாய்த்துப் பிழைப்போமாக.

"இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனிலே வைக்கிறேன். அவர்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை."—1 பேது. 2 : 6, 8 எபேசி. 4 : 14, 15.

---

# IX. ஆத்தும சத்துரு.

## 1. தீமைக்குக் கர்த்தா யார்?

"வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசிகளின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக் கண்டேன். அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகளே ; அவைகள் பூலோகம் எங்கும் புறப்பட்டுப் போகிறது."—வெளி. 16 : 13, 14.

முந்தின கட்டுரையில் பார்த்த பலவிதமான கள்ளப்போதகங்களும், அவைபோன்ற இன்னும் பல ஒவ்வாத கொள்கைகளும் உலகில் எங்கும் உண்டு. இவைகளுக்கெல்லாம் காரணம் யார்? உலகில் காணப்படும் எல்லாவிதச் செயலுக்கும் காரண கர்த்தாக்கள் இருந்தே தீரவேண்டும். ஏவுதல் கர்த்தா, இயற்றுதல் கர்த்தா எனப் பலதிறப்பட்ட தலைவர்கள் உண்டு. அண்ட சராசரங்களையும் உண்டாக்கினவர் சிருஷ்டிகராகிய தேவன் என்பதை நாம் நம்பு

கிறோம். இவரையே நமது மாதாப் பிதாபோலவும் நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். தாய் தந்தையர் எவ்விதத்திலும் தம் மக்களுக்குத் தீமை யுண்டாக்க விரும்பவே விரும்பார். ஆகவே உலகப் பெற்றோரைப் பார்க்கிலும் மிக உயர்வாக நாம் கருதி ஆராதித்துத் தொழும் நமது பரம பிதா, ஒருபோதும் பூலோகத்தாராகிய தம் புத்திரரின் ஆத்துமத்திற்கோ சரீரத்திற்கோ புத்திக்கோ எவ்வித மான மயக்கமும், ஆபத்தும் விளைக்கும்படியான தீய போதனையைக் கொடுக்கவேமாட்டார். அப்படியானால் தேவ சித்தத்திற்கு மாறான அசுத்த போதகத்தினாலும், அதனால் விளையும் அசுத்தக் கிரியையினாலும் மானிடரை வழிதப்பச் செய்கிற கர்த்தன் யார்?

சாத்தான் என்று கூறப்படும் பிசாசாகிய மாயோனே அவன். பிசாசு உண்டென்று அனேகர் நம்புகிறதில்லை. ஆயினும் உலகின் தத்துவாசிரியரது (Philosophers) அபிப்பிராயப்படி உலகத்தில் தீமைக்கெல்லாம் கர்த்தாவாகிய தீயோன் ஒருவன் இருந்தே தீர வேண்டும். கர்த்தாவின்றி ஒரு காரியமும் உலகில் நடைபெறுகிற தில்லை என்பது அவரது துணிபு. கடவுள் தீமை செய்கிறவரல்ல வென்றால், தீமைக்கு ஆதிமூலமான தலைவன் வேறொருவன் இருந்தே தீரவேண்டும்.

இந்தச் சத்தியம் உலகின் எல்லா மதங்களிலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். நமது தமிழ் நாட்டின் வேத சரித்திரங்களும் இவ்வுண்மையை நன்கு வலியுறுத்துகின்றன. ஸ்ரீராம இராவண யுத்தம், கிருஷ்ண கம்ச போராட்டம், பாண்டவர் துரியோதனாதியர் போர், முருகன் அசுரர் சண்டைகள்—இவைகளெல்லாம் எதைக் காட்டுகின்றன? சரீரப்பிரகாரமாக இவ்வுலகில் தீமைக்குக் காரணர் இருப்பதுபோலவே ஆத்துமாவைக் கெடுக்கும் தீமைக்குக் காரணரும் கட்டாயம் இருக்கின்றனர் என்பதை யல்லவா?

உலகின் தத்துவ சாஸ்திரமும், வேதசாஸ்திரங்களும் ஒருபுற மிருக்க, நமது சொந்த அனுபவத்திலும் இவ்வுண்மையை நாம் ஒவ்வொருவரும் பரிசோதித்துக் கண்டிருக்கலாம். இந்த அநுபவத்தைப்பற்றிப் பரி. பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தின் முதல் பகுதியான அதிகாரங்களில் மிகத் தெளிவாய் விவரிக்கிறார்.— ரோமர் 7 : 18. ஆகவே உலகத்தின் பாவங்களும், மரணமும் இன்னும் உலகின் ஏனைய தீமைகளும், நமது சைவரும் பிறரும் போதிக்கிறபடி கடவுளுடைய திருவிளையாடலுமல்ல; வைஷ்ணவர் கூற்றுப்படி கிருஷ்ண லீலைகளுமல்ல. அவைகளுக்குக் காரணம் சாத்தானே.

இந்தத் தியோனைப்பற்றி விவரமாக அறிய விரும்புகிறவர்கள், சத்தியவேதத்தை இப்போதே கையில் எடுத்து வைத்துக்கொண்டு, பின்குறிக்கப்பட்டிருக்கும் திருவசனங்களை ஆராய்வார்களாக. சாத்தானின் சரித்திரம் எசேக்கியேல் தீர்க்கதரிசியின் 26, 27, 28-ம் அதிகாரங்களில் சுருக்கமாகக் காணப்படும். அவனுடைய பூர்வ சரித்திரம்—எசேக். 28 : 12-14. அவனை, கிறிஸ்துவும் "இவ்வுலகத்தின் அதிபதி" என்று ஒப்புக்கொண்டார்—லூக். 4 : 5-7 அப்போஸ்தலரும் அதைக் கண்டு சாட்சி பகர்ந்தனர். II பேதுரு 2 : 11.

இவ்விதமாகத் தனக்குப் பிதாவாகிய தேவன் அளித்த ஆதி மேன்மையை அவன் ஏன் இழந்தான்?—எசா. 14 : 13, 14. அவனுடைய அகங்காரம், கீழ்ப்படியாமைக்குக் கர்த்தரால் உண்டான தண்டனை யாது?—எசா. 14 : 12, 15 : 11 ; யூதா 6 : யோபு 21 : 13-26 சங். 49 : 6-15.

தன் ஆதி மேன்மையை இழந்து பாதாளத்தில் அடைபட்டிருந்தாலும், தேவ உத்தரவினால் பூமியில் உலாவுகிறான். தனக்கு முடிவான நித்திய ஆக்கினையின் நியாயத்தீர்ப்பு உண்டாகும்வரையிலும் தன் கிரியையை நடப்பிப்பான். இப்போது அவன் சிங்காசனம் உன்னதத்திற்குக் கீழும், பூமிக்கு மேலுமான ஓரிடத்தில் இருக்கிறது. சகரி. 3 : 1, யோபு 1 : 6 ; தானி. 10 : 12, 13 ; எபே. 6 : 12 ; 2 : 2.

தற்காலம் அவனும், அவனுடைய பூதகணங்களும் பூமியில் நடப்பிக்கும் கிரியை யாது? தீய அசுரனாகிய தன்னை அழித்து, மனிதனை அவனுடைய பாவ அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, மரணத்தையும் பாதாளத்தையும் வென்ற வெற்றி வீரனும் சத்திய பரனுமாகிய கிறிஸ்துவை நம்பாதபடி மனுக்குலத்தை மாயையால் மூடுவதே இப்போது அவன் வேலை. லூக். 8 : 19-21, II கொரி. 4 : 21, எசா. 6 : 9-10, யோ. 8 : 41, 33 : 43, 44 ; I யோ. 2 : 22, II கொரி. 11 : 13, 14.

இது மாத்திரமல்ல, இனி வரப்போகிற நெருக்கமான காலங்களில் அவன், பூமியின் கோத்திரத்தார் யாவரையும் மோசம் போக்கும்படியான பலத்த அற்புத அடையாளங்களைச் செய்து, பல மாறுதல்களையும் உண்டாக்குவான். வெளி. 12 : 7-17, II தெச. 2 : 1-8, தானி. 7 : 25.

முடிவு என்ன? கர்த்தராகிய கிறிஸ்து ராஜா ராஜராக பூமியைச் சகல நன்மைகளாலும், சமாதானத்தாலும், பூரண அன்பா

லும் நிரப்ப வரும்போது, சாத்தானைப் பின்பற்றி மோசம்போன பூமியின் ஜனங்களின் அதிபதிகள், கர்த்தருடைய மகாப் பரிசுத்த அக்கினி பிரசன்னத்தால் அழிவர். வெளி. 19 : 21. சாத்தானுக்குச் சார்பாக நின்று பூமியின் ஜாதியாரை மோசம்போக்கின இரு பெரும் அதிபதிகள் சாத்தானுக்குரிய பாதாள அக்கினியில் தள்ளப் படுவார். வெளி. 19 : 20. சாத்தானோ சங்கிலியால் கட்டப்பட்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு மீளாத சிறையில் இறுத்தப்படுவான் வெளி. 20 : 1, 2. கிறிஸ்துவாகிய குமாரக்கடவுளும் அவருடைய பக்தரும் பூமியை ஆயிரம் வருடங்கள் நன்மையால் நிரப்பினபின், அதன்முடிவில் சாத்தான் கடைசிமுறையாக கொஞ்சகாலத்திற்கு விடுதலை பெற்று, பூமியில் உள்ளவர்களைத் தன் வசமாக்க இன்னொருதரம் முயலுவான். வெளி. 20 : 3, 7, 8. அந்தோ, இம்முறை அவன் சாமர்த்தியம் வாய்க்காமல், அவன் தன் நித்திய அழிவைப் பெறுவான். வெளி. 20 : 9, 10. அவனோடு மனுக்குலத்தை அதுவரை அடிமைப்படுத்தின மரணமும் இல்லாதொழியும். ராஜியம் நமது கர்த்தருடையதாகும். மனிதனின் ஆதிமேன்மை திரும்பவுந் தோன்றும். மனுக்குலம் அனைத்தும் மகத்துவ பிதாவாகிய கடவுளின் ஒரே திருக்குடும்பமாக நித்திய இன்பம் துய்த்து வாழுவர்.

## 2. சிரமறுந்த முண்டம்.

இதுவரையில் துக்கமும் வெட்கமும் நிறைந்த கீழ்ப்படியாத தூதனாகிய சாத்தானைப்பற்றிய விபரத்தைக் கேட்டுக்கொண்டிருந்த எம் நேயர்களுக்குக் கிறிஸ்துவினாலும், அவருடைய சத்தியவேதத்தினாலும் உண்டான சில நல்ல வார்த்தைகளைக்கூறி இக்கட்டுரையை முடிக்க விரும்புகிறோம். இம்மட்டும் நாம் பார்த்த ஆகாயத்து அந்தகாரப் பிரபுவாகிய சாத்தான், தேவ சத்தத்திற்குக் "கீழ்ப்படியாதவர்களிடத்தில்"தான் கிரியை நடப்பிப்பான். அவன் தனது நோக்கத்தைத் தானாகவே முடித்துக்கொள்ளும் ஆற்றல் சிறிதும் அற்றவன். எல்லா ஞானத்திற்கும் இருப்பிடமான பிதாவினிடத்திலிருந்து தன்னைப் பிரித்துக்கொண்டது முதல் அவனுடைய அபூர்வமான ஆதிஞானம் அவனைவிட்டு எடுபட்டது. தற்போது அவன் மயக்கமும் பொய்யுமான அந்தகாரத்தால் நிரப்பப்பட்டிருக்கிறான். ஆனதுபற்றியே உத்தமவீரனைப்போல தன் சொரூபத்தில் நேராக வந்து ஆத்துமாக்களோடு போர் செய்வதைவிட்டுப் பக்கவழியாக வேடமாறி வந்து, தந்திரமாய் ஆத்துமாக்களைப் பிடிக்க எத்தனிக்கிறன். அவனுக்குச் செவிகொடாமல், கிறிஸ்து செய்ததுபோலவே

“ அப்பாலே போ சாத்தானே ” என்று எதிர்த்து நிற்கிறவர்களுக்கு முன் அவன் நிற்கக்கூடாமல் தன்முனை முறிந்து, அவர்களைவிட்டு ஓடிப்போவான்.

அன்றியும் கிறிஸ்துவுக்கும், அவருடைய சத்தியவேதத்திற்கும் அதிகமாய்ப் பயப்படும் கோழை அந்தச் சாத்தான். கிறிஸ்துவின் நாமத்தைக் கேட்டமாத்திரத்திலே அவன் முதுகுகாட்டி ஓடி விடுவான். கிறிஸ்துவின் திரு இரத்தம் தெளிக்கப்பட்ட மெய்த்தேவ மக்களிடம் அவன் தந்திரம் எள்ளளவும் பலிக்கவேபலிக்காது. ஆகவே சாட்சியின் வசனமாகிய கர்த்தருடைய சத்தியவேதம், கர்த்தருடைய அதிசய நாமம், உலகின் பாவத்தைக் கழுவும் அவருடைய திரு இரத்தம் ஆகிய முப்புரி ஏதுக்களில் பழக்கமும் ஐக்கியமும் உள்ள பிள்ளைகள் எத்தனை பலவீனராயினும் அவனுடைய பராக்கிரமம் அவர்களிடம் பலிக்காது. சாத்தானைவென்ற சாட்சார்த் குமாரக் கடவுள் நமக்காக ஆத்தும ஜெயம்பெற்று இருக்கிறார். இந்த ஜெயத்தின் அனுபவம் கண்டு ருசித்துக் களிக்க விரும்புகிறவர்கள், அவரை ஏற்றுக்கொண்டு அவரில் ஐக்கியப்படவேண்டியது. ஏனெனில் பிசாசினால் “ உலகத்தில் உங்களுக்கு அநேக உபத்திரவம் உண்டு திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் ” என்று தேவ திரு ஜெயவீரர் கூவிக்கொண்டு நிற்கிறார். கிறிஸ்துவின் மரணம் துவக்கி இதுவரையில் சாத்தான் தன் தோல்வியை உலகுக்குக் காட்டாமல் மறைத்து வைத்திருக்கிறான். ஆயினும் வேதத்தை அப்பியாசிக்கும் தேவ பிள்ளைகளுக்கு அவன் தோல்வியின் ரகசியம் தெரியும். யுத்தகளத்திலே போர் செய்யும் வீரரில், தலை துணிக்கப்பட்டவனுடைய நிலை உங்களுக்குத் தெரியுமா? சிரசு பகைவனால் துண்டிக்கப்பட்டாலும் வீரனுடைய உடலாகிய முண்டம் கோபாவேசத்தால் சற்றுநேரம் எழும்பிக் கூத்தாடும். ஆயினும் சில நிமிடங்களில் உயிரற்றுக் கீழேவிழுந்து பகைவரால் மிதிக்கப்படும். இதுதான் தற்காலம் சாத்தானுடைய நிலை. ஸ்திரீயின் வித்தாகிய கிறிஸ்து, சாத்தானின் தலையைத் தமது மரணத்தால் நசுக்கிவிட்டார். கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக அவன் சிரசற்ற முண்டமாகத்தான் துள்ளிக் குதித்துச் சீறி நிற்கிறான். ஆயினும் என்ன? “ சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை நமது கால்களின் கீழே மிதித்துப் போடுவார் ”. தனக்கு முடிவுகாலம் கிட்டுகிறது என்று உணர்ந்துதான் இத்தனை ஆத்திரத்தோடு அவன் தற்காலக் கலியுகத்தில் கிரியை செய்கிறான்.

## 3. வெற்றிவீரர்.

"கிறிஸ்து...சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தினால் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்......கிறிஸ்து கர்த்தர் என்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்"—பிலி. 2 : 5-11-"எல்லாத் துரைத்தனத்திற்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக.......எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி ;...அவரை... எல்லாவற்றிற்கும் மேலாகத் தந்தருளினார்"—எபே. 1 : 20-23.

கர்த்தராகிய இயேசு தாமும் நம்மெல்லாரையும் நோக்கி,

"வானத்திலும் பூமியிலுமுள்ள சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது"—மத்தே. 28: 18.

"மாம்சமான யாவர் மேலும்......அதிகாரம் கொடுத்தபடியே" யோவா. 17 : 2.

சகலமும் தமது பார்வையின்கீழ் இருப்பதாகக் கூறியிருக்கிறார். ஆகையால்தான் அவர்,

"நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்ளுவது எதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்." யோ. 15 : 7

என்று தமது பரிசுத்தத்தின்பேரில் ஆணையிட்டிருக்கிறார். அன்றியும் தம்மை விசுவாசிக்கிறவர்களைப்பற்றி அவர்கள்,

"என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்...சர்ப்பங்களை எடுப்பார்கள், சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது"—மாற்கு 16 : 17, 18

என்றும் அதிகாரம் கொடுத்திருக்கிறார். விசுவாசிகளைச் சாத்தான் பலவிதத் துன்பத்தினாலும் சோதிக்க விரும்பினாலும் அதை அவன் தன் சுயமாகச்செய்ய முடியவே முடியாது. தனது கர்த்தராகிய

THE MADURA TAMIL ...

உன்னதமான தேவகுமாரனிடத்தில் உத்தரவு கேட்டுத்தான் செய்ய வேண்டும். யோபைச் சோதிக்குமுன் சாத்தான், கர்த்தரிடத்தில் உத்தரவுகேட்க வேண்டியதிருந்தது. அப்படியே பேதுருவின் விசுவாசத்தைப் புடைக்குமுன் சாத்தான் ஆண்டவரிடத்தில் "உத்தரவு கேட்டுக்கொண்டான்". பன்றிகளுக்குள் போகவுங்கூட பேய்க்கணங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவை மன்றாடிக்கேட்டு உத்தரவு பெற்றன. ஆகையால் தம்முடையோர்களுக்கு மிஞ்சிய சோதனையை விடும்படி சாத்தானுக்கு ஆண்டவர் இடம் கொடுக்கவேமாட்டார். சோதனையில் ஆண்டவர் தாமே நம்மோடிருக்கிறார். ஆகையால் பலத்த சுழல் காற்றுப்போல சாத்தானும் அவனுடைய சேனைகளும் நம்மேல் சீறி வரும்போது "ஆண்டவரே நாங்கள் மடிந்துபோகிறோம்" என்று நாம் நமது சத்தத்தை உயர்த்துவதற்குமுன், ஆண்டவர் நம்மைத் தாக்கிய அலகைப் பேயை "அதட்டி...இரையாதே அமைதலாயிரு" என்று துரத்துவார். மாற்கு 4 : 35-39.

ஆனபடியால் என் சகோதரரே! அந்தகாரப் பிரபுவாகிய சாத்தானும், அவனுடைய உலகமும், அவனுக்கு அடிமையான மாம்சமும், நம்மைச் சூழ்ந்து நெருக்கும்போதெல்லாம் சங்கீதக்காரனைப்போல்,

> "பாசான்தேசத்துப் பலத்த எருதுகள் என்னைச் சூழ்ந்து சேர்ண்டது, கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன்"—சங்கீதம்

என்று திடன்கொண்டு தைரியமாயிருப்போமாக. மகாப் பயங்கரமான பிரமாண்ட உருவமும் தோற்றமுமுள்ள, விருத்தசேதனமில்லாத இராட்சதனான கோலியாத்தைச் சிறுவனான தாவீது எப்படிக் கொன்றான்? "ஜீவனுள்ள தேவனுடைய நாமத்தினால்" அல்லவா? அதையே நாமும் செய்வோம். பாவத்தோடு போராட்டம் நமக்கு ஜீவகாலமெல்லாம் உண்டு. வேதம் இதை அடிக்கடி கூறி எச்சரிக்கிறது.

"மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும்,...பொல்லாத ஆவிகளோடும், நமக்குப் போராட்டமுண்டு. ஆகையால் தீங்குநாளிலே அவைகளை எதிர்த்து நிற்கவும் சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்குத் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளுங்கள்......விசுவாசம் என்னும் கேடகத்தைப் பிடித்

துக்கொள்ளுகிறவர்களாயும்,......பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை அவித்துப்போடத்தக்கதாய்,...எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி,......மிகுந்த மன உறுதியோடு விழித்துக் கொண்டிருங்கள்''......எபே. 6 : 10-18. "பயப்படாதே நான் முந்தினவரும் பிந்தினவரும் உயிருள்ளவருமாயிருக்கிறேன்; மரித்தேன் ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்துக்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்'' வெளி. 1 : 18.

"மரணமே! உன் கூர் எங்கே?

பாதாளமே! உன் ஜெயம் எங்கே?'' 1 கொரி. 15 : 55.

---

PAYNE & CO., MOUNT ROAD, MADRAS.

# கிடைக்கும் நூல்கள்.

---

| | | | |
|---|---|---|---|
| ஜெயவீரர் ஜெயவீரர் | ... | விலை 4 | அணா |
| மறுமை விளக்கம் | .... | ,, 4 | ,, |
| மேல் வீட்டறையிலிருந்து கல்லறை வரைக்கும் | .... | ,, 6 | ,, |

கிடைக்குமிடம் :—

REV. D. S. RATN